
190341

[illegible]

April 1933

JL
15m211, N33
N33.1.1
190341




சென்னை ஜில்லா ஆசிரிய மானேஜர்கள், மானேஜர்கள் மகாநாடு. (25-2-1933)
திரு. டாக்டர் சுப்பராயன் M. L. C. அவர்களால் மகாநாடு திறக்கப்பட்டு, திரு. சாமி வெங்கடாசலம் செட்டியார் M. L. C. அவர்கள் அக்கிராசனம் வகித்தார்.

ஓம்: பரப்பிரஹ்மணே நம:

# ஆரம்பக் கல்வி

சென்னை மகாணத்திலுள்ள, ஆரம்பாசிரியர்கள், ஆசிரிய மானேஜர்கள், மானேஜர்கள், அபிவிருத்திக்கும், முன்னேற்றத்திற்கும் உழைக்கும் ஓர் உயர்தர செந்தமிழ் பத்திரிகை.

தற்போது இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை வெளிவரும்.

**பத்திராதிபர்:— பி. வீரராகவன்.**

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"—திருவள்ளுவர்.

மலர், 1. } ஸ்ரீமுகஹு சித்திரைமீ 1௳ 1933ஹு ஏப்ரல்மீ 13௳ { இதழ், 1.

## பொருளடக்கம்.


| | | பக்கம். |
|---|---|---|
| 1. | நமது பத்திரிகை | 2 |
| 2. | கோபால கிருஷ்ண கோகலேவின் ஜீவிய சரித்திரம். | 4 |
| 3. | ஆசிரியர் குறிப்புகள் | 6 |
| 4. | பிரிட்டிஷ் இந்தியாவிலுள்ள ஆரம்ப பாடசாலைகளின் எண்ணிக்கை. | 9 |
| 5. | தற்காலக் கல்வியின் தன்மை | 10 |
| 6. | மாணுக்கரும் கல்வியும் | 12 |
| 7. | கிருமிகளும் அதன் விஷமங்களும் | 16 |
| 8. | உபாத்தியாயர் | 19 |
| 9. | பெண் கல்வி | 21 |
| 10. | ஆன்றோர்களின் அறியமொழிகள் | 24 |
| 11. | ஆயுர்வேதத்தின் பழமை | 25 |
| 12. | குழந்தைகளை வளர்க்கும் முறை | 28 |
| 13. | மஹம்மாரியும் அதைத் தடுக்கும் விதமும் | 30 |
| 14. | சென்னை மாகாண ஆரம்பாசிரியர் மகா நாடு | 34 |
| 15. | சென்னை மகாண ஆசிரிய மானேஜர்கள் பொதுக்கூட்டம் | 37 |
| 16. | சென்னை ஜில்லா ஆரம்பாசிரிய மானேஜர்கள் மகாநாடு | 40 |


பி. வீரராகவன் அவர்களால், சென்னை மண்ணடி, புதுத் தெரு, நெ. 94-95 இல்லத்தில் "அலோஸியேஷன்", அச்சுக் கூடத்தில் அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது.

# நமது பத்திரிகை.

பத்திரிகையொன்று புதிதாக ஆரம்பித்தால் அப்பத்திரிகையின் கொள்கையை விளக்கி எழுதுவது பத்திரிகை உலகில் வழக்கமாயிருந்துவருகிறது. அவ்வாறு எழுதவேண்டியதும் அவசியமென்பதற்குச் சந்தேகமில்லை. ஆதலின் இப்பத்திரிகையைப்பற்றி நாமும் சில வார்த்தைகள் கூறுவதை வாசகர்கள் அன்புடன் ஏற்றுக் கொள்ளுவார்களென்று நம்புகிறோம்.

உலகத்தை அரசர்கள் ஆள்கின்றார்கள் என்றாலும், உண்மையில் உலகத்தை யாள்கிறவை பத்திரிகைகளேயாகும். பத்திரிகைகளால் உலகத்தாருக்கு உண்டாகும் நன்மையை நம்மவர்களைப்பார்க்கினும், மேல் நாட்டார் நன்குணர்ந்திருக்கின்றனர். அமெரிக்கா, ஜப்பான், இங்கிலாந்து, பிரான்ஸ், ஜெர்மன், இத்தாலி, முதலிய தேசங்களில் 100-க்கு 60 முதல் 80-பேர்வரை பத்திரிகைகள் வாசிப்பதாக தெரிகிறது. இந்தியாவில் பத்திரிகை அபிமானம் எவ்வளவிலிருக்கின்றதென்பது இதிலிருந்து தெளிவாகும். மேனாடுகளில் அதிதீவிரமுற்போக்குக்கு பத்திரிகைகளே காரணமாகும். நமது இந்தியாவின் ஏழ்மைதனத்துக்கும், அடிமைத்தனத்துக்கும், அலட்சியத்துக்கும், நம்மில் ஏற்பட்ட அசட்டுத்தனத்துக்கும் பத்திரிகை அபிமானக்குறைவே காரணமென துணிந்து கூறலாம். சமீபகாலத்தில் நாகரீகம் பெற்று முன்னேற்றமடைந்த ஜப்பான் தேசத்தில் கூலிக்கு வேலைசெய்து கஷ்டப்படுகிறவன்கூட ஒரு பத்திரிகையைவாங்கி ஒழிந்த நேரத்தில் அதைப்படித்து மகிழ்கிரான் என்பதாக, சுவாமி விவேகானந்தர் யோக்காமாவிலிருந்து எழுதிய கடிதத்தில் எழுதியுள்ளார். இந்தியாவில் விசேஷமாய் தமிழ் நாட்டின் பத்திரிகைகளின் போக்கைப்பற்றி இவ்விடத்தில் கூறவேண்டியது அனுவசியமென கருதுகிறோம். அதிலும் ஆரம்பக் கல்வியின் அபிவிருத்திக்கு உழைத்துவரும் பத்திரிகைகளைப்பற்றியோ கேட்கவேண்டாம். உண்மைக்கூறமிடத்து அத்தகைப் பத்திரிகைகள் இல்லையெனவே கூறலாம். இக்குறையை நிவர்த்தி செய்வதற்கும் அதிலும் ஆரம்பக்கல்வியின் அபிவிருத்திக்கும், ஆரம்பாசிரியர்களின் முன்னேற்றத்திற்கும், ஆரம்ப பாடசாலைகளை தொன்று தொட்டு பரிபாலித்து வரும் ஆசிரிய மானேஜர்கள், மானேஜர்களது குறைபாடுகளை நிவர்த்திசெய்து கொள்வதற்கும், எவ்விதபத்திரிகையும் தென்னாட்டில் இல்லையெனவே பகிரங்கமாகக்கூறலாம்.

நமது "ஆரம்பக் கல்வி"யின் கொள்கையைப்பற்றி இங்கு நாம் பிரமாதமாக கூறப்போவதில்லை. ஆரம்பக்கல்வியின் தந்தையென விளங்கும் காலஞ்சென்ற கோபால் கிருஷ்ண கோகலே விற்குப் பிறகு எங்கும் ஆரம்பக்கல்வியைப்பற்றியாவது அதில் ஈடுபட்ட மக்களை யாவது கனவிலும் கருதி, எவரும் உழைத்ததாகத் தெரியவில்லை.

ஒரு தேசம் முன்னேற்றமடைய வேண்டுமானல் அன்னாட்டில் ஆரம்பக் கல்வியும், பொதுஜனக் கல்வியும், அதிகமாக பெருக்கப்படவேண்டும். அத்தகைய கல்வியைப் போதிப்பவர் யார்? ஆரம்ப ஆசிரியர்களே. அவ்வித ஆரம்பாசிரியர்கள் எவ்வாரு இருத்தல்வேண்டும்? அறிவுள்ள மக்களாகவும், தேசாபிமானிகளாகவும், சாந்தமும் பொருமையுமுடையவர்களாயும், பரந்த உலகானுபவமுடையவர்களாயும், இருத்தல்வேண்டும். ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கும், பிற்போக்கிற்கும் அந்நாட்டிலுள்ள ஆசிரியர்களே காரணம். நம் நாடும் தற்போது இவ்வித தாழ்ந்த நிலைமையிலிருப்பதற்கும் தற்போதுள்ள ஆசிரியர்களே பொருப்பாளிகள். ஒவ்வொரு ஆசிரியனும் கோபால கிருஷ்ண கோகலேவைப்போலும், ரைட் ஹானரபில் ஸ்ரீனிவாச சாஸ்திரியாரைப்போலும், கோவிந்தரனேடைப்போலும், தற்போது இத்தாலி, துருக்கி முதலிய குடியரசு நாட்டை ஆண்டுவரும் முஸோலினி, கெமால் பாஷா முதலிய தியாக வீரர்களைப் போலும் நம்நாட்டில் விளங்கவேண்டும்.

190341



நம் இந்திய நாடு முழுதும் ஒரே கிளர்ச்சியாக, சுயராஜ்யம் வேண்டுமென்று வாதாடும் ஒரு கூட்டத்தினரும், மத பேதங்கள் கூடாது, ஜாதி பேதங்கள் கூடாது, ஈசன் சந்நிதானமாகிய ஆலயங்களில், எல்லா மக்களையும் பேதகமின்றி உட்புகச் செய்யவேண்டுமென்ற ஒரு கட்சியினரும், அடிமைக் கல்வியை ஒழித்து தேசியக் கல்வியை மக்களுக்கு அளிக்கவேண்டுமென்ற ஒரு சார்பாரும், இரட்டை ஆட்சியை அடியோடு ஒழிக்கவேண்டுமென்கிற ஒரு தொகுதியினரும், போராடி உயிர்விட்டுக் கொண்டிருக்கும் இக்காலத்தில், நம்நாட்டு ஆசிரியர்கள் முக்கியமாக ஆரம்ப ஆசிரியர்கள் கிணற்றுத் தவளைகளாயிருப்பதை பார்க்க மிகவும் பரிதாபகரமாயிருக்கின்றது.

அவர்கள் யேதோ போதனமுறை போதிக்கும் கலாசாலைகளில், பரிட்சைக்காக படித்த சில புத்தகங்களிலுள்ள சொற்ப விஷயங்களைத் தவிர்த்து வேறொன்றையும் அறியார்கள். தற்போது கல்வியுலகில் மாரிக்கொண்டிருக்கும் போதன முறைகளை அறியார்கள். அரசாங்கத்தில் நடக்கும் மாறுதல்களை தெரியார்கள். நாளுக்கு நாள் நம் நாட்டில் நடந்துவரும் தேசியப் போராட்டத்தின் காரணங்களை உணரார்கள். சுகாதாரமுறைகளையும், இயற்கை வாழ்க்கையின் இரகசியத்தையும், எளிய வாழ்க்கையின் மேன்மையையும், கண்டு கொள்ளார்கள். தைர்யமென்பதே மருந்துக்கும் கிடையாது. அதிலும் போர்ட்டு பாடசாலைகளில் உழைத்துவரும் ஆரம்பாசிரியர்களின் நிலையோ பரிதாபகரமானது. கல்வி அதிகாரிகளைக் கண்டால் நடுக்கும், போர்ட்டு அதிகாரிகளைக் கண்டால் தடுமாட்டம். இவ்வித தாழ்ந்த நிலையில் நம் நாட்டில் ஆரம்பாசிரியர்கள் இருப்பார்களானல், நம் நாட்டின் கதியென்னவது? நாளை தேசாபிமானிகளாகவும், தியாக வீரர்களாகவும், அறிவாளிகளாகவும் சமூக சீர்திருத்தக்காரர்களாகவும், இராஜ தந்திர நிபுணர்களாகவும், மேதாவிகளாகவும், விளங்கக்கூடிய இவ்வாசிரியர்களிடம் ஒப்படைக்கப்பட்ட குழந்தைகளின் கதி யென்னவது? ஆரம்பாசிரியர்களின் பரிதாப நிலமையை எவர் அறிகின்றார்கள். அறிந்தாலும் யார் தைர்யத்துடன் அவர்களுக்கு உழைக்க முன்வருகின்றார்கள். ஜார்ஜ்பெர்னார்ட் ஷா அவர்கள் கூறிய பிரகாரம், நம் நாட்டில் மேடைப் பிரசங்கிகள் அதிகமாக இருக்கின்றார்களே யொழிய கருத்துடன் வேலை செய்பவர்கள் ஒருவரும் கிடையாது. இவ்வித நிலையில் ஆரம்பாசிரியர்கள் தங்களை எவ்வாறு சீர்திருத்திக்கொள்ளப்போகின்றார்கள். "தன் கையேதனக்கு உதவி" என்ற பழமொழிப்படி தாங்களே பத்திரிகையின்வாயிலாக தங்களை சீர்திருத்திக் கொள்ளவேண்டுமே யொழிய வேறு வழி கிடையாது. இப்பெருங்குறையை இப்பத்திரிகையின் வாயிலாக ஒருவாரு நிவர்த்தி செய்வதற்கும், பொதுவாக ஆரம்பக்கல்வியின் அபிவிருத்திற்கும், ஆரம்பக்கல்வியில் ஈடுபட்ட மக்களனைவருது நன்மை ஒன்றையே கருத்தில்கொண்டு நமது பத்திரிகை உழைத்து வரும். எவர் தயவையோ, தாட்சண்யத்தையோ, அன்றி விரோதத்தையோ தேடிக்கொள்ள வேண்டுமென்பது எமது நோக்கமல்ல. அன்பர் பணியே எமது கடமையெனத் துணிந்திருக்கின்றோம் "அன்பர் பணிசெய்ய எம்மை ஆளாக்கிவிட்டுவிட்டால் இன்ப நிலைதானே வந்தெய்தும்பராபரமே' என அங்கிங்கெனதபடி எங்கும் பிரகாசமாய் ஆனந்தபூர்த்தியாகின்ற அப்பரம் பொருளை நம்பியே "ஆரம்பக் கல்வி" வெளி வருகிறது. ஆரம்பக் கல்வியில் ஈடுபட்ட ஆரம்பாசிரியர்களும், ஆசிரியமேனேஜர்களும், மானேஜர்களும், வனையமக்களும் "ஆரம்பக் கல்வியை" அன்புடன் வரவேற்று ஆதரிப்பார்களென்று உறுதியாக நம்புகிறோம்.

# கோபால கிருஷ்ண கோகலேவின்

## ஜீவிய சரித்திரம்.

(1866—1915)

காலஞ் சென்ற கோபால கிருஷ்ண கோகலே 1866-ம் ஆண்டில், பொம்பாய் இராஜதானியிலுள்ள கோலாபூர் என்ற நகரத்தில், ஓர் எளிய மஹாராஷ்ட்டிர பிராம்மண குடும்பத்தில் பிறந்தவர். அவர் இளவயதிலேயே கோலாபூரிலுள்ள ஒருகல்லூரியில் சேர்ந்து, இன்டர்மீடியேட் பரீட்சையில் முதன்மையாக தேறினார். பிறகு சில காலம் பொம்பாயிலுள்ள எலிபின்ஸ்டன் சர்வ கலாசாலையிலும், பூனாவிலுள்ள டெக்கான் கலாசாலையிலும், நன்றாக கல்வி பயின்று 1884-வது ஆண்டில் தமது 18 வது வயதில், பி. ஏ பட்டம் வகித்தார். வகித்ததும் பூனாவிலுள்ள டெக்கா கல்விச் சங்கத்தின் ஜீவிய அங்கத்தினராக சேர்ந்துவிட்டார். இக்கல்விச் சங்கத்தைப்பற்றி இங்கு எழுதும் சில வார்த்தைகள் மிகவும் முக்கியமானது.

17-ம் நூற்றாண்டில் மகம்மதிய ஆட்சியையும், அப்பொழுதிருந்த ஆங்கிலேயர்களையும் ஆட்டிவைத்து மஹாராஷ்ட்டிர நாட்டின் சிங்கமென விளங்கின, சிவாஜி காலம் முதற்கொண்டு, கோவிந்த ரானேட், பால கங்காதர திலகர் போன்ற அறிய பெரிய தியாக வீரர்களை, நம் இந்திய நாட்டின் முன்னேற்றத்திற்கு அளித்து தியாகம் செய்தது மஹாராஷ்ட்டிர நாடு. தற்போதுங்கூட மஹாராஷ்ட்டிர ராஜ்ஜியத்தைச் சேர்ந்த பொம்பாய் இராஜதானியில்தான் மற்ற இராஜதானிகளைக்காட்டிலும், மக்களுக்கு தேசிய உணர்ச்சியும், தேசிய போர்களும், அதிகமாக வளர்ச்சி பெறுவதுடன், நம் தாய் நாட்டின் முன்னேற்றத்திற்காக, உடல், பொருள், ஆவி யாவையும் தியாசம் செய்யக்கூடிய சுத்த வீரர்களும், பெண்மணிகளும், அதிகமாக இருந்து வருகிறார்கள். அந்நாட்டு மக்கள், ஆண் பெண் இருபாலரும், புத்திகூர்மையும், திடசரீரமுடையவர்களாய் இருக்கின்றார்கள். "உழுதுண்டு வாழ்வாரே வாழ்வர் மற்றெல்லாம் தொழுதுண்டு பின் செல்பவர் "என்ற மூதுரைப்படி ஒவ்வொரு மக்களும், நம் தென்னாட்டு மக்களைப்போல் பட்டம்பெற்றதும், அடிமை வாழ்வில் மோகமுள்ளவர்களாய், அரசாங்கத்தில் உத்தியோகம் கிடைக்குமா, கம்பெனிகளில் உத்தியோகம் கிடைக்குமாவென்று அலைந்து, உத்தியோக வேட்டையில் சிக்கும் சுயநல மக்களைப்போலல்லாமல், கைத்தொழில், விவசாயம், வியாபாரம் முதலிய சுயேச்சத்தொழிலைக் கைக்கொண்டு சுயேச்சையாக வாழ விருப்பமுடையவர்கள். ஆகையால் இவர்கள் 18-ம் நூற்றாண்டிலேயே நம்நாட்டு மக்கள் சுவதந்திரத்துடன், சுகஜீவிகளாக வாழவேண்டுமென்றும், நமது தாய்நாடும் சுதந்திரம்பெற்று மக்களுக்கு கல்வி விருத்தியாகி, இதர தேசங்களைப் போல் பிரகாசிக்கவேண்டுமென்ற நோக்கத்துடன், தங்கள் நாடு முழுதிலும் பல சங்கங்களை வளர்த்து வந்தனர். அவ்வித சங்கங்களில் ஒன்று நமது கோகலே ஜீவிய அங்கத்தினராக சேர்ந்த டெக்கான் கல்விச் சங்கம்.

இச்சங்கம் மஹாராஷ்ட்டிர நாட்டு மக்களுக்கு தேசியக் கல்வியையும், ஆங்கிலக் கல்வியையும், பறப்பவேண்டுமென்ற நோக்கத்துடன் 1884-ம் ஆண்டில் பூனாவில் ஏற்படுத்தப்பட்டது. ஆங்கிலக் கல்வியைப் பறப்புவதற்காக 1885-ம் ஆண்டிலேயே பெர்கூசன் காலாசாலையொன்றை இச்சங்கம் ஸ்தாபித்தது. இக்கலாசாலையில்போதித்துவரும் சங்கத்தின் ஜீவிய அங்கத்தினர்கள் 20 வருடங்கள் வரையில், குறைந்த சம்பளத்தில் உபாத்திமைத்தொழில் புரியவேண்டுமென்ற, ஓர் நிபந்தனை ஏற்படுத்தப்பட்டிருந்தது. அவ்வாறு தியாகம் செய்யும் போதகாசிரியர்கள்தான் இக்கலாசாலையில் சேர்க்கப்பட்டனர். அவ்வாறு கல்விக்கென தியாகம் செய்ய முன்வந்த போதகாசிரியர்களில் முதன்மையானவர் நமதுகோபால கிருஷ்ணகோகலே. இன்றைக்கும் அக்கலாசாலையிலும், அச்சங்கத்தைச் சேர்ந்த இதர பாடசாலைகளிலும் ஏறக்குறைய 3600 மாணவர்கள் கல்வி பயின்று வருகிறார்கள்.



கோகலே பெர்கூசன் கலாசாலையில் ஆங்கிலமும், கணிதமும் போதிக்கும் ஆசிரியாராக ஏற்படுத்தப்பட்டார். அவர் எல்லா பாடங்களையும் முன்னதாகவே நன்றாக வாசித்து, மாணவர்கள் மனதில் பசுமரத்தாணிபோல் பதியும்படியாகவும், தெளிவாகவும், வகுப்பில் மாணவர்களுக்கு அதிக திறமையுடன் போதித்துவந்தார். அவருக்கு ஞாபக சக்தி அதிகமுண்டு. இவர் வகுப்பென்றால் மாணவர்கள் திரள் திரளாக கூடுவர். அவர் இரவும் பகலும் பர்கூசன் கலாசாலையையும், தமது சங்கத்தைச் சேர்ந்த இதர பாடசாலைகளையும் விருத்தி செய்வதிலேயே கண்ணுங் கருத்துமாக உழைத்துவந்தார். உண்மைக் கூறுமிடத்து நமது கோகலே கல்விச் சங்கத்தின் சுடரொளி விளக்காக விளங்கி வந்தார்.

இக்கல்விச் சங்கத்தின் ஜீவிய அங்கத்தினர்கள் சாதாரண உபாத்தியாயர்கள் அன்று. அவர்களே ஒழிந்த நேரங்களில் பல விடங்களில் சென்று தங்கள் சங்கத்தின் சார்பாக பல பெரிய மனிதர்களுடன் கலந்து ஆங்காங்கு கூட்டங்கள் கூட்டி, பொதுமக்களுக்கு தமது சங்கத்தின் நோக்கங்களை தெரிவித்து, தங்கள் சங்கத்திற்கு பொருள் தேடவேண்டும். அவ்வப்பொழுது தங்கள் நாட்டில் உண்டாகும் தேசிய இயக்கங்களில் கலந்துகொண்டு, தமது தேச முன்னேற்றத்திற்கு உழைக்கவேண்டும். இவ்விதமாக ஒவ்வொரு ஜீவிய அங்கத்தினரும், இச்சங்கத்தை விட்டுவிலகும் பொழுது, தாமே சுயேச்சையாக ஒரு சமூகத்தை நடத்தவும், சங்கங்களை ஏற்படுத்தவும், தைரியமும், ஆண்மையும், அறிவும், செல்வாக்கும் உள்ள தியாக வீரர்களாக விளங்கினார்கள். நமது கோகலே இராஜீய விஷயத்தில் தலையிட்டு வேலை செய்வதற்காக இக் கல்விச்சங்கத்தைவிட்டு 1902௵த்தில் விலகினபோது விலகின 3-வருஷ காலத்திற்குள் கல்வி விஷயத்தில் மாத்திரமல்லாமல், ராஜிய விஷயத்திலும் தேச சேவையிலும், மக்களின் நன்மைக்காக ஈடுபடும்படியாக தற்போது இந்திய தேச சேவை சங்கம் (ஸர்வென்ட் ஆப் இந்தியா சொசைடி) என்பதாக பூனாவில் ஒன்றை ஏற்படுத்தினார். அச்சங்கம் தற்போது நம் இந்திய நாட்டில் பல கிளைகளுடன், காங்கிரசுக்கு அடுத்தபடியாக தேச மக்களின் முன்னேற்றத்திற்காக, அதிக பொருள் சிலவுடன் பலதுறைகளிலும் ஈடுபட்டு வேலை செய்து வருகின்றது. இப்பொழுது இவ்விரு சங்கங்களும் இந்திய நாட்டின் இருகண்களைப்போல, புனாவில் ஒரு ரமணீகரமான இடத்தில் கட்டப்பட்டு கண்டோர் மனதைக் கவரச்செய்கின்றன. 40-வருடங்களுக்கு முன் மஹாராஷ்ட்டிர தேசத்தில் சர்வஜன சபையென்ற ஒரு தேசிய இயக்கத்தை ஏற்படுத்தி, அந்நாட்டு மக்களின் முடிசூடா மன்னனாக ரானேட் என்பவர் விளங்கினார். அப்பொழுது நமது கோகலே பொதுஜனஊழியராக வேண்டுமென்ற தெய்வீக எண்ணத்துடன், ரானேடை அடுத்து அவருடன் கலந்து அவரது வலதுகையாக தேசிய விஷயத்தில் உழைக்க ஈடுபட்டார். பிறகு அவர் "சர்வஜன சபை"பத்திரிகாசிரியராக ஏற்படுத்தப்பட்டார். அவருக்கு ரானேடினிடத்திலிருந்த பக்தியும், விஸ்வாசமும் அன்பும், மதிப்பும் சொல்லத்தரமன்று. நமது தேச முன்னேற்றமடையவேண்டுமானால் நம்து டாக்கள் வகுப்பு பேதங்களை யொழித்து நீதி மார்க்கத்தை கடைப்பிடித்து நன்னெறியில் ஒழுக வேண்டுமென்பது அவருடைய சித்தாந்தம். பிறகு அவர் "சீர்திருத்தம்" என்ற ஆங்கில வாரப்பத்திரிகை யொன்றுக்கு பத்திராதிபரானார். நான்கு வருடகாலமாக பொம்பாய் மாகாண மகாநாட்டிற்கு காரியதரிசியாகவும், 1895௵ம் புனாவில் கூட்டிய இந்திய தேசிய காங்கிரசுக்கு காரியதரிசியாகவும் திறமையுடன் வேலை பார்த்துவந்தார். 1907௵ ஸூரத்தில் நடந்த காங்கிரஸ் கூட்டத்தில் சில சுயநலப் புலிகள் புகுந்து காங்கிரசை உடைக்கப் பிரயத்தனித்தனர். தெய்வச் செயலாக அக்கூட்டம் ரானேட், கோகலே இவர்களின் சாமார்த்தியத்தினால் உடைவுபடாமல், காங்கிரஸ் நடைபெற்றது. பிறகு புனாவில் ஏற்பட்ட சில ராஜீய தகராருகளினால் டெக்கான் சபை யொன்று ஏற்படுத்தி அதற்கு நமது கோகலே பல வருஷங்களாக காரிய தரிசி வேலைபார்த்துவந்தார்.

1897௵த்தில் லார்ட் வெல்பியின் அக்கிராசனத்தின் கீழ் நடத்தப்பட்ட ராயல் கமிஷனின் முன்பாகச் சென்று எல்லா விஷயங்களையும் திறமையாக படித்து, இந்திய நாட்டின் பொதுமக்கள் பணம் எவ்வாறு தாறுமாறாக அரசாங்கத்தாரால் சிலவு செய்யப்படுகிறதென்பதாக ஒவ்வொரு விஷயத்தையும், நன்றாக விவரித்து சாட்சியம் ச[illegible]ர்.

(தொட[illegible])

# ஆசிரியர் குறிப்புகள்.

## சட்டசபையில் ஆரம்பக் கல்வி.

மார்ச்சுமாதம் 21௳ கல்வி சம்மந்தமாக சென்னை சட்டசபையில் நடந்த விவாதத்தில் திருவாளர்கள். டாக்டர், நடேச முதலியார் அவர்களும், சுவாமி வெங்கடாசலம் செட்டியார் அவர்களும், வி. டி. அரசு அவர்களும், நமது ஆரம்ப பாடசாலைகளின் சார்பாக, நமது குறைபாடுகளை எடுத்து வெகு விமரிசையாக பேசினார்கள். ஏழைகளின் அன்பரான சென்னையில் பெயர்பெற்று விளங்கும் நமது டாக்டர் நடேச முதலியாரவர்கள். "நமதுநாட்டில் ஆரம்பக்கல்வி பரவவேண்டுமானால் ஒவ்வொரு கிராமத்திலும் பூர்வீகத்தில் நமது நாட்டிலிருந்தபடி திண்ணைகளிலேயும் மரநிழலிலேயுங்கூட பாடசாலைகளை ஏற்படுத்தவேண்டும், கட்டடங்களையும், பெஞ்சி நாற்காலிகளையும், கண்ணாடி படங்களையும் கொண்டுதான் பாடசாலைகளை ஏற்படுத்த வேண்டுமென்பதென்ற அபிப்பிராயம் மிகவும், தவறானது." என்பதாக எடுத்துக் கூறினார். இது மிகவும் முக்கியமான விஷயம். நமது நாட்டில் பெரும்பான்மையான மக்கள் அந்தந்த சீதோஷ்ண ஸ்திதிக்கு தக்கபடியும், சௌகரியங்களுக்கு தக்கபடியும், குடிசைகளிலும், கூரைவீடுகளிலும் உல்லாசமாக வாழ்கின்றபொழுது, போர்டார்கள் கிராமாந்திரங்களில் கண்டிராக்டர்கள் பிழைப்பதற்காக அனாவசியமாக கல்கட்டடங்களைக்கட்டி பொதுமக்களின் பணத்தை வீண்படுத்துவது சரியன்று. கட்டிடங்களினாலும், படங்களினாலும், என்னாட்டிலும் கல்வி பரவினதாக தெரியவில்லை. இதனால் கட்டிடங்களே கட்டக்கூடாது, பெஞ்சி நாற்காலிகளே கூடாதென்பது எமது நோக்கமன்று. முக்கியமாக வேண்டிய இடங்களில் கட்டவேண்டுமேயல்லாமல் அனாவசியமாக சிறு கிராமங்களிலெல்லாம் அதிகச் சிலவில் கட்டுவித்து அக்கட்டடங்கள் பாழடைவதில் பிரயோஜனமில்லை. அநேக சிறு கிராமங்களில் பாடசாலைக்கென கட்டப்பட்ட கட்டடங்கள் பாழடைந்து தூங்கும் சாவடிகளாக உபயோகப்பட்டு கவனிப்பற்று கிடக்கின்றன. குறைந்த சிலவில் அழகாகவும், குழந்தைகளுக்கு ஆரோக்கியமாகவும் ஓலைகளினால் கிராமாந்திரங்களில் பாடசாலைகளைக் கட்டுவிக்கலாம். உதாரணமாக சென்னையை யடுத்த அடையாற்றிலுள்ள (தியஸாபிகல் சொஸைடியார்) மாடலாக ஏற்படுத்தியுள்ள கூரைபாடசாலைகளை ஒவ்வொருவரும் பார்க்கத்தக்கது. இக்கூரை பாடசாலைகளில், பெரிய செல்வந்தர்களுடைய பிள்ளைகளும், உயர்ந்த உத்தியோகஸ்தர்களுடைய பிள்ளைகளும், ஜமீன்தார்களுடைய பிள்ளைகளும், வெகு உல்லாசமாக 10-வது வகுப்புவரையில் கல்வி கற்று வருகிறார்கள். அதில் சிலசமயங்களில் பிரவேசம் கிடைப்பதுங்கூட கஷ்டம். இப்பாடசாலையை நமது நாட்டில் பூர்வீகத்திலிருந்த ஆசிரமம் என்றே சொல்லலாம். பொதுச் சிலவு ஒருபுறமிருக்க இவ்விதபாடசாலைகளில் குழந்தைகள் கல்விபயின்று வருவதால், அவர்கள் எளிய வாழ்க்கையின் மேன்மையையும், இயற்கை வாழ்க்கையின் இரகசியத்தையும், தாங்களே எளிதில் அறிந்துகொள்ளலாம். இது விஷயத்தை நமது தாய்நாட்டு கல்வியில் சம்மந்தப்பட்ட ஒவ்வொரு மக்களும் அறிவார்களாக.

பிறகு பேசிய சுவாமி வெங்கடாசலம் செட்டியாரவர்கள் "வருடத்திற்கு வருடம் கல்வி இலாகாவில் போலீஸ் சேவகர்களைப் போல், டிப்டி டைரக்டர்களும், டிப்டி இன்ஸ்பெக்டர்களும் அதிகப்பட்டு சிலவு அதிகமாகின்றதே ஒழிய, சிலவிற்கு தக்க நாட்டில் கல்வி அபிவிருத்தியாகவில்லையென்றும், சில சமயங்களில் கல்வி அதிகாரிகள் உதவிபெறும் பாடசாலைகளை தாழ்வாக நினைத்து, தாங்கள் அதிகாரிகள் என்ற ஓதாவில் உதவிபெறும் பாடசாலைகளை கேவலமாக நடத்துகிறார்களென்றும், சில சமயங்களில் அங்கீகாரத்தையெடுத்துவிடுவதாக பயமுறுத்துகிறார்களென்றும், இக்கல்வி இலாகாவை பொதுமக்களின் வரி பணத்தினால் பொதுமக்களின் கல்விக்காக ஏற்படுத்தியிருப்பதினாலும், இவ்வித பொதுஜனக் கல்வியின் அபிவிருத்திக்காக முன்வரும் உதவி பாடசாலைகளை வரவேற்பதைவிட்டு, அவைகளை புறக்கணித்து அதிகாரம் செய்வது சரியல்லவென்பதை, கல்விஇலாகா அதிகாரிகள் உணரவேண்டுமென்றும், இது விஷயத்தை கல்வி மந்திரியவர்கள் தீர கவனிப்பாரானால் இதை கண்டிப்பாரென்பதற்கு ஐயமில்லையென்றும் கூறினார்."

இது விஷயத்தில் ஆரம்பக்கல்வி சம்மந்தப்பட்டமட்டில் சில உண்மைகள் உண்டு. கடந்த டிசம்பர் மாதத்தில் நடந்த ஆரம்பாசிரியர்கள் மகா நாட்டில் உயர்திரு. ஜனார்தனம் நாயுடு பி. ஏ. எல். டி. அவர்கள், "அதிகாரிகளும் ஆரம்பக் கல்வியும்" என்ற தலைப்பில் ஒரு அருமையான சொற்பொழிவில் இங்கிலாந்து, ஐரோப்பா முதலிய மேல்நாடுகளில் கல்வி அதிகாரிகள், பாடசாலைகளில் நுழைந்ததும் தம்மை கல்வியதிகாரியென்பதை அறவே மறந்து இது நமது நாட்டுப் பாடசாலை, இவைகளிலுள்ள உபாத்தியாயர்கள் நம்மைப்போன்ற சகோதர உபாத்தியாயர்கள் என்ற பரந்த நோக்கத்துடன் உட்செல்லுகின்றார்களாம். சென்றதும் அங்குள்ள குறைபாடுகளை தெளிவாக சகோதர பாவனையுடன் அவ்வுபாத்தியாயர்களுடன் கலந்து நன்றாக விளக்குகின்றார்களாம், அவர்களுக்கு வேண்டிய பொருள் உதவியையும், கொடுக்க சிபார்சு செய்கிறார்களாம். அவ்வுபாத்திய யர்களிடத்திலிருந்தும் பல அறிய விஷயங்களை இக்கல்வி அதிகாரிகள் தெரிந்து கொள்ளுகின்றார்களாம். இம்மாதிரியாக கல்வியதிகாரிகளும், கல்வியில் ஈடுபட்ட உபாத்திமை மக்களும் பேதகமின்றி ஒருவருக்கொருவர் தாழ்த்திக் கொள்ளாமல், சம தத்துவமாக உபாத்தியாயர்களுக்கேற்பட்ட கஷ்டம் தம்கஷ்டமாகவும், தம்நாட்டு குழந்தைகளுக்கு ஏற்பட்ட கஷ்டமாகவும் நினைத்து ஒத்துழைத்து தம் தாய் நாட்டுக் கல்வியை அபிவிருத்தி செய்கின்றார்கள், என்பதாக அவர் கூறினார். அவர் அவ்விதம் கூறினபொழுது அங்குவந்துள்ள கல்வியதிகாரிகளுக்கு சற்று மனக்கஷ்டமிருந்திருக்கலாம் ஆனால் அவர்கூறியது உண்மைதான். இதை கவனிக்குமிடத்து நம் நாட்டில் கல்வி அதிகாரிகளின் பான்மை தலைகீழாக இருக்கின்றது. டிப்டி இன்ஸ்பெக்டர்களும், ஜில்லாக் கல்வியதிகாரிகளும் பாடசாலையிலுள்ளே நுழைந்ததும். என்ன குற்றம் இப்பாடசாலையில் கண்டுபிடித்தெழுதலாம் என்ற குறுகிய நோக்கத்துடன் வருகின்றார்களேயொழிய, இவ்வித குறைபாடுள்ள பாடசாலையை எவ்வாறு சீர்திருத்தி நம்நாட்டு மக்களுக்கு கல்வி அபிவிருத்தி செய்யலாம், நம்மைப்போன்ற உபாத்திமை மக்களுக்கு எவ்வித நன்மை செய்யலாம், நம் தாய் நாட்டு மக்களை பாமரத்தன்மையிலிருந்து எவ்வாறு நீக்கி அறிவாளிகளாகச்செய்யலாமென்பதாக பெரும்பான்மையான டிப்டி இன்ஸ்பெக்டர்களோ, கல்வி அதிகாரிகளோ, கவனிப்பதாக தெரியவில்லை. நாளுக்கு நாள் பாடசாலைகளெல்லாம் ஆட்டுமந்தை கொட்டகைகளாக இருக்கின்றதே ஒழிய நமது நாட்டில் கல்வி எவ்வகையிலும் விருத்தியானதாக காணப்படவில்லை. பணமும் ஒட்டிக்கு இரட்டையாக சிலவாகி வருகின்றது. இவ்விதம் நாம் கூறும்பொழுது டிப்டி இன்ஸ்பெக்டர்களோ, இதர கல்வி அதிகாரிகளோ மனத்தாங்கல் அடைதல்கூடாது. எமக்கு தெரிந்தமட்டில் கல்வி இலாகாவில் டிப்டி இன்ஸ்பெக்டர்களாக வேலைபார்த்துவரும் சில நண்பர்கள், அதிக திறமையாகவும், ஊக்கத்துடனும், ஆரம்பக் கல்வியின் அபிவிருத்திக்காகவும், முன்பு கூறிய பரந்த நோக்கத்துடன் வேலை செய்கிறார்களென்பதில் ஐய்யமில்லை. அவ்வித உண்மை நெறியில் உழைத்துவருபவர்களை கல்வி இலாகா அதிகாரிகளும் அவர்களை கவனித்து முன்னுக்கு கொண்டுவருவதில்லை. அத்தகைய அன்பர்களை நல்ல தண்ணீரும், காற்றும் இல்லாத இடங்களுக்கு மாற்றி உபத்திரவப்படுத்துகின்றார்கள். அதுவும் தவறுதான். இனியாவது டிப்டி இன்ஸ்பெக்டர்களும், கல்வியதிகாரிகளும் தாய் நாட்டுக்கல்வியின் அபிவிருத்தியொன்றையே கருத்தில் இருத்தி ஆரம்ப பாடசாலை உபாத்தியாயர்களுடன் ஒத்துழைத்து நம தாய் நாட்டிலுள்ள பாமர நோயை ஒழிப்பார்களாக.

---

## கல்விச் சபைகளும் ஆரம்ப பாடசாலை கிராண்டுகளும்.

---

இவ்வருடம் எல்லா ஜில்லாக் கல்விச் சபைகளிலும், எய்டட் ஆரம்ப பாடசாலைகளுக்கு 100-க்கு, 5-முதல் 25-வரையில் அலைவண்ட் கிராண்டிற்கு குறைத்து கொடுத்திருப்பதாக தெரிகிறது. இவ்விதம் வருடா வருடம் அரசாங்கத்தார் கிராண்டுகளை குறைத்துக் கொண்டே போவார்களானால் பாடசாலைகள் எவ்விதம் திறமையுடன் நடத்த இயலும். ஆரம்பக்கல்வி நம் நாட்டில் எவ்வாறு விருத்தியாகும். இது சம்மந்தமாக, சென்னையிலுள்ள ஆசிரியர் மானேஜர்கள் மாகாண சங்கமானது பலமுறை

டைரெக்டர் துரையவர்களையும், கனம் கல்வி மந்திரியவர்களையும், பேட்டிக்கண்டு கேட்ட பொழுது பணமில்லையென்று தெரிவித்தார்கள். இப்பதில் எவ்வாறு பொருந்தும். இவ்வருடம் அரசாங்கத்தில் பணம் அதிகப்பட்டு வரிகொடுக்கும் குடியானவர்கள் வரியையும் குறைக்காமல், டிபார்ட் மெண்டாரே தங்கள் சம்பளங்களின் குறைவை மாத்திரம் சரிபடுத்திக்கொண்டார்கள். அதிகப்பட்ட பணத்தில் ஒரு சிறு தொகையை கனம் கல்வி மந்திரியவர்கள் ஆரம்பக் கல்விக்குக் கொடுத்திருப்பார்களானல். இவ்விதமாக ஆரம்பப் பாடசாலைகள் கஷ்டப்படுவதற்கும் மந்திரியவர்களை குறைகூறுவதற்கும் இடமில்லாமலிருந்திருக்கும். எந்நாட்டிலும் பொதுமக்களின் பணமானது முதலில் கல்வி அபிவிருத்திக்காக செலவழிக்கப்பட்டு மிகுந்த பணத்தை இதர விஷயங்களுக்கு செலவழிக்கப்படுகின்றது. ஆனல் நமது நாட்டிலோ எல்லாம் தலைக்கீழாக இருக்கின்றது. இது விஷயத்தை டைரெக்டர் துரையவர்களும், கனம் மந்திரியவர்களும் கவனிப்பார்களாக.

---

## சேலம் ஜில்லா ஆசிரிய மானேஜர்கள் மகாநாடு.

---

சென்ற மார்ச்சுமீ 18உ சனிக்கிழமை சேலம் ஜில்லா ஆசிரிய மானேஜர்கள் மகாநாடு சேலம் ஜில்லா போர்டு கட்டிடத்தில், சேலம் ஜில்லா ஜட்ஜ் அவர்களின் மனைவியார், ஸ்ரீமதி, பீகம்மீர் அமிருடின் பி. எ. அவர்களின் தலைமையின் கீழ் வெகு சிறப்பாக நடைபெற்றது. அவ்வம்மையார் தமது தலைமைப் பிரசங்கத்தில் வெகு விமரிசையாக தற்காலத்து கல்வி திட்டத்திலுள்ள பல குறைகளை எடுத்துக் கூறினர். அவ்வம்மையர். "ஆசிரிய மானேஜர்கள் தங்கள் வைத்துப்பிழைப்பை மாத்திரம் கருதி பாடசாலைகளைவைத்து நடத்தவில்லை, நமது நாட்டின் முன்னேற்றத்திற்கு அடிப்படையாயுள்ள ஆரம்பக் கல்வியை, அபிவிருத்தி செய்யவேண்டுமென்ற பெரும் நோக்கத்துடன், கிடைக்கும் சொற்ப பொருளைக் கொண்டு, தியாக புத்தியுடன் தொன்று தொட்டு உழைத்துவருவதை எல்லோரும் பாராட்டத்தக்கது," என்பதாக கூறினர். இது விஷயத்தை ஆரம்பக் கல்வியில் ஈடுபட்ட ஒவ்வொருவரும் கவனித்தல்வேண்டும். பலர் தெரிந்தோ தெரியாமலோ, தப்பு அபிப்பிராயங்களைக் கொண்டு ஆசிரியர் மேனேஜர்களென்றால் கடைக்கண்ணால் கவனிக்கின்றார்கள். அது மிகவும் தவறு. இது விஷயத்தை சென்னையில் நடந்த ஆசிரிய மேனேஜர்கள் மகாநாட்டில் வரவேற்புக்காரிய நிர்வாக சபையின் தலைவரான திரு. என். எஸ். இராமஸ்வாமி ஐய்யர் தாம் செய்த சொற்பொழிவில்வெகு தெளிவாக எடுத்துக்கூறியிருக்கின்றார். வாசகர்கள் இதை 40-ம் பக்கத்தில் பார்க்க விளங்கும்.

இம்மாதிரியாக ஒவ்வொரு ஜில்லாவிலும் ஆசிரிய மானேஜர்கள் ஒன்று சேர்ந்து ஜில்லா மகாநாடுகளை நடத்துவார்களானல், பொதுமக்களும், அரசாங்கத்தாரும், கல்வியில் சம்மந்தப்பட்ட கனவான்களும், சட்டசபை முதலிய, பொதுச்சபை அங்கத்தினர்களும், நமது குறைபாடுகளை நிவர்த்திசெய்ய முன்வருவார்களென்பதற்கு ஐயமில்லை. நமது எய்டட் பாடசாலைகள் ஒன்று கூடி அந்தந்த ரேஞ்சுகளின் பல கூட்டங்களை நடத்தி தங்கள் குறைகளை, பொதுமக்களுக்கும், ஏனைய கல்விச் சம்மந்தப்பட்ட கனவான்களுக்கும், அரசாங்கத்தாருக்கும், தெரிய படுத்தவேண்டும். அழுது புரளும் குழந்தைக்கன்றோ தாய் பால் கொடுப்பாள். இக்காலத்தில் கிளர்ச்சிகள் இல்லையானல் ஒரு காரியமும் நிறைவேறாது. நம்மை ஒருவரும் கவனிக்க மாட்டார்கள். இனியாவது அந்தந்த ஜில்லாவிலுள்ள எய்டட் பாடசாலை மானேஜர்கள் ஒன்று சேர்ந்து மகாநாடுகளையும் பல கூட்டங்களையும் நடத்த முன் வருவார்களாக.

# பிரிட்டிஷ் இந்தியாவிலுள்ள

## ஆரம்ப பாடசாலைகளின் மேனேஜ்மெண்ட் பிரகாரம் மொத்த எண்ணிக்கைகள்.

ஆண்பிள்ளைகள் பாடசாலைகள்.

| இராஜ தானி | அரசாங்கத்தார் | ஜில்லா போர்ட்டு | முனிசிபல் போர்ட்டு | எய்டட் | உதவி பெறாத பாட சாலைகள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| சென்னை | 1,690 | [illegible]2,[illegible]06 | 1,130 | 28,815 | 2,448 | 46,389 |
| பொம்பாய் | 29 | 8,934 | 1,057 | 2,193 | 87 | 12,300 |
| வங்காளம் | 97 | 3,616 | 167 | 29,994 | 4,323 | 38,197 |
| ஐக்கிய மாகாணங்கள் | 14 | 13,759 | 737 | 4,201 | 107 | 18,818 |
| பாஞ்சாலம் | 15 | 4,459 | 260 | 986 | 192 | 5,912 |
| பர்மா | 24 | 14 | 2 | 3,873 | இல்லை | 3,913 |
| பீஹார் ஒரிஸ்ஸா | 114 | 2,213 | 287 | 20,861 | 3,982 | 27,457 |
| மத்திய மாகாணங்கள் | 9 | 3,419 | 302 | 317 | 142 | 4,189 |
| அஸ்ஸாம். | 184 | 3,131 | 35 | 723 | 304 | 4,577 |
| பிரிட்டிஷ் இந்தியா | 2,[illegible]47 | 52,528 | 4,070 | 92,104 | 11,617 | 162666 |
| | பெண் | பாடசாலைகள் | | | | |
| சென்னை | 33 | 1,677 | 367 | 1,235 | 87 | 3,399 |
| பொம்பாய் | 5 | 674 | 509 | 335 | 12 | 1,535 |
| வங்காளம் | 22 | 185 | 51 | 11,533 | 2,821 | 14,612 |
| ஐக்கிய மாகாணங்கள் | 18 | 808 | 195 | 544 | 15 | 1,580 |
| பாஞ்சாலம் | 6 | 586 | 204 | 357 | 79 | 1,232 |
| பர்மா | இல்லை | 1 | 1 | 604 | இல்லை | 606 |
| பீஹார் ஒரிஸ்ஸா | 6 | 98 | 55 | 2,380 | 251 | 2,790 |
| மத்திய மாகாணங்கள் | 241 | 7 | 4 | 60 | 22 | 334 |
| அஸ்ஸாம் | இல்லை | 321 | 15 | 20 | 53 | 409 |
| பிரிட்டிஷ் இந்தியா | 345 | 4,396 | 1,442 | 17,149 | 3,350 | 26,682 |

பிரிட்டிஷ் இந்தியாவிலுள்ள ஆரம்பபாடசாலைகளின் மொத்தத்தொகை 189348 அதில் அரசாங்கத்தாரால் உதவிபெறும் (எய்டட்) பாடசாலைகளின் தொகை 109253, அரசாங்கத்தாரின் உதவியையும் எதிர்பாராது நடக்கும் பாடசாலைகளின் தொகை 14967 ஆதலின் 100-க்கு 66 பாடசாலைகள் பிரைவேட் மேனேஜ்மெண்டுகளால் நடத்தப்பட்டு வருகின்றன.

# தற்காலக் கல்வியின் தன்மை.

ஸ்ரீமான், என். வி. ஐயங்கார் திருநெல்வேலி. இந்தியா.

இங்கிலாந்து, அமெரிக்கா முதலிய தேசங்களில் யாராகிலும் ஒரு சிறு பையனைப்பார்த்து, "நீ படிப்பதற்குக்காரணம் என்ன" வென்று கேட்டால், "படிக்க வேண்டியது கடமை; படிக்காவிட்டால் நான் முற்றிலும் எதற்கும் உபயோகமற்றவனாகிவிடுவேன்" என்று சொல்லுவதும், மிகவும் இளவயதா யிருப்பவர்கள், "தாய் தகப்பன் சொல்லுக்கிணங்கிப் பள்ளிக்கூடம் சென்றுவருகிறோம்" என்று சொல்லுவதும் சகஜமான பதிலாயிருக்கிறது. சுயபாஷையே கற்றுவரும் இச் சிறுவர்களுக்குப் படிப்பது மிகவும் கடினமல்ல. படிக்க ஆரம்பித்துச் சுமார் ஐந்து, ஆறு வருஷங்களுக்குள், நன்றாய் எழுதவும், படிக்கவும், பூகோளம், கணிதம், ரஸாயனம் முதலிய சாஸ்திரங்களின் முக்கியமான அம்சங்களில் உலகவாழ்க்கைக்குத் தேவையான விஷயங்களைக் கற்றுக்கொள்ளவும் செய்கிறார்கள். பிறகு தங்களுக்கு ஒரு பிழைப்பு உண்டாக்கிக்கொள்ளும் வழியை உத்தேசித்து, அவரவர்களுக்கு எந்தத் தொழிலில் மன ஊக்கமிருக்கிறதோ, அந்தத் தொழிலைக் கற்றுக்கொள்ளுகிறார்கள். திரவியமுள்ளவர்களும், நல்ல அந்தஸ்திலுள்ளவர்களும் கைத்தொழில் வேலைக்குப் பிரியமுள்ளவர்கள்போகப் பாக்கியுள்ளவர்கள், உயர்ந்த படிப்புக்குப் பிரயத்தனப்படுகிறார்கள். லண்டன், ஹாக்ஸ் போர்டு, கேம்பிரிட்ஜ் முதலிய கலாசாலைகளில் படித்து இலக்கியம், இலக்கணம், தர்க்கம், தேச சரித்திரம், ராஜ தந்திரம், பூகோள சாஸ்திரம் இவ்வகையான வித்தைகளில் தேர்ந்து கடைசியாகப்படித்த ஞானத்தை உபயோகத்திற்குக் கொண்டுவரும் நிமித்தம் தமது வாழ் நாட்களை முழுவதும் சாஸ்திரப் பயிற்சியிலும், நூதனமான விஷயங்களைக்கண்டு பிடிப்பதிலும், கண்டுபிடித்ததை உலகத்தாருக்குப் புஸ்தகங்களின் மூலமாகவும் பத்திரிகைகளின் மூலமாகவும் அறிவித்து, அதனால் சகலரும் பயனடையும்படி செய்வதிலும் கழித்து வருகிறார்கள் வேறுசிலர் ராஜ தந்திரம், ராஜநீதி இன்னும் இதைப்போன்ற தேச சம்மந்தமான படிப்பில் முயற்சி செய்து ராஜாங்கத்தில் உயர்ந்த நிலைமையையும், பார்லிமெண்டில் மிகுந்த கீர்த்தியையும் அடைகிறார்கள். இன்னும் சிலர் யுத்தத்திற்காக வேண்டிய நிலசைன்னியம் முதலிய நாகரீகக் கொலைக் கூட்டத்திற் சேர்ந்து தங்களிலும் பலஈனர்களாயிருப்பவர்களை அடிமைப்படுத்தவும், சமபலமா யிருப்பவர்களுக்கு அச்சத்தை யுண்டு பண்ணவும், தங்களைக் காட்டிலும் அதிக பலமுள்ளவர்களோடு நேசம் கொண்டாடவும், இதைப்போன்ற இதர பல விஷயங்களையும் கற்றுக்கொள்ளுகிறார்கள். யுத்தப் பயிற்சியைத் தவிர மற்ற எல்லா வித்தைகளை ஸ்திரீகளும் கற்று வருகிறார்கள்.

இதற்கெல்லாம் ஏற்றபடி சர்க்காரும் வேண்டிய ஏற்பாடுகள் செய்திருக்கிறார்கள். ஏழைச் ஜனங்கள் யாதொரு செலவில்லாமல் படிக்கவும், தொழிலாளிகள் எந்தத்தொழிலையும் சுலபமாக முழுவதும் கற்றுக்கொள்ளவும் தகுந்த பாடசாலைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இதற்குத் தேவையான பணம் சர்க்காராலேயே கொடுக்கப்படுகிறது. இராஜ்யத்திலிருக்கும் ஒவ்வொருவனும் தேசத்திற்கு எவ்விதத்திலாவது உபயோகப்படும்படி செய்யவேண்டிய கடமையைச் சர்க்கார் செய்து வருகிறார்கள். ஆகையால்தான் தேசம் செழித்து ஓங்கி வளருகிறது.

ஆனால் நமது இந்தியாவிலோ இப்பாடம் முழுவதையும் திரும்பிப்படிக்கவேண்டியதைத் தவிர வேறில்லை. இதன் காரணமென்னவென்றால் இந்தியர்களுக்குக் கொடுக்கப்படும் படிப்பு நமது சிறுவர்கள கற்றுவரும் படிப்பு, ஆங்லேய உத்தியோகஸ்தர்களுக்கு குமஸ்தா வேலை பார்ப்பதற்கே யொழிய சுதேச அபிவிருத்தியின் பொருட்டல்ல. ஆகையால் தான் சிறு வயது முதற்கொண்டு நமது இளைஞர்கள் 'அ' என்பதற்கு முன்னால் 'எ' என்று சொல்லக்கற்று வருகிறார்கள். பள்ளிக்கூடம் போய்வரும் சிறு பையனைப் பார்த்து, "உன் படிப்பின் பயனென்ன" என்றுகேட்டால், "நல்ல சர்க்கார் உத்தியோகம் கிடைக்கவேண்டும்; சீக்கிரம் துரையின் கிருபையைச் சம்பாதித்துச் சம்பளம் உயரவேண்டும். நல்ல சம்பளம் கிடைத்த பிறகு



ராவ் பகதூர் முதலிய பட்டங்களைப் பெற்று, கொழுத்த பெண்ஷன் பெற்றுக்கொண்டு, நாளொன்றுக்கு நாலு தடவை காப்பியும், பலகாரமும் சாப்பிட்டுக்கொண்டு, ஆங்கிலேய ஸ்தோத்திர பாடத்தைத் தனது குடும்பத்தாருக்கெல்லாம் உபதேசம் செய்துகொண்டு வரவேண்டு"மென்று சொல்லுகிறான்.

இவன் படிக்கும் கல்வி எதற்கும் பிரயோஜனமற்றது என்பது எளிதில் விளங்கும். சிறு வயது முதல் தனது தாய் தகப்பன் வாயை வயற்றை ஒடுக்கி, நிலத்தை விற்றுப் பிச்சைவாங்கி, கடன்பட்டு, பத்துவருஷம் அவனைப்படிக்க வைத்தால் மெட்ரிகுலேஷன் பரீட்சைக்கு வருகிறான். வருஷா வருஷம் சுமார் 12,000-பெயர்கள் பரீட்சைகளுக்குப் போகிறார்கள். இதில் 3000-அல்லது உயர்ந்தது 3500-க்கு மேல் தேறுவது கிடையாது. பாக்கியிருக்கும் 9000-பேருக்கு இப்பத்து வருஷப் படிப்பினின்றும் உபயோகமாகக்கூடியது ஏதாவதுண்டா என்று கவனிப்போம். ஏதாகிலும் வேலைசெய்ய இவர்களுக்கு ஞானமிருக்கிறதா? தமிழ் நன்றாய் எழுதத்தெரியாது; தமிழ் கேவலமென்று தள்ளிவிட்டபடியால் அதில் ஞான சூன்னியம் ஏற்பட்டுவிட்டது. அவர்க்ள் படிப்பது இங்கிலீஷ் பாஷையாகையால் அதில் எவ்வளவு படித்தபோதிலும் பூரண ஞான கிடைப்பதரிது. மேலும் இங்கிலீஷ் பாஷையில் அவர்கள் பரீட்சைக்குக் குருட்டுப்பாடம் போட்டதற்கு மேல் ஒன்றும் தெரியாது. கைத்தொழிலோ கேட்கவேண்டியதில்லை. விடிய விடியப் படித்துத் தங்களது உயிரில் பாதியை இழந்துவிட்ட இச்சிறுவர்களுக்கு எலும்பும் தோலும் தவிர வேறு எதுவுமில்லை. இவர்களுக்கு மண்வெட்டியைத் தூக்கக்கூடச் சக்தியில்லை அப்படியே இப்படிப்பை விட்டுக் கைத்தொழில் கற்றுக்கொள்ளுவோமென்றாலும் தகுந்த இடங்களில்லை. ஊரில் கைத்தொழில் செய்பவர்கள் அழிந்துபோய்விட்டார்கள்.

இது நிற்க, பரீட்சையில் தேறியவர்களின் கதியென்னவென்று கவனிப்போம். தேறியவர்களில் அநேகர் ஏழைகள். மேற் படிப்புக்குப் பணம் அதிகப்படுகிறதில்லை. ஆகையால் தங்களையும் தங்கள் அரியவித்தையையும் கலியாணச் சந்தையில் ஏலம் கூறத் தொடங்குகிறார்கள் யார் பெண்ணும் பணமும் கொடுக்கிறார்களோ, அவர்களுக்கு மருமகனாகிறான். தான் மாத்திரம் போதாதென்று தன் மாமனையும் தரித்திரனாக்கிக் கடைசியாக பீ. ஏ. பரீட்சை தேறுகிறான். இதற்குள் குழந்தைகள் பிறந்துவிடுகின்றன. அப்பொழுது இரண்டு குடும்பங்களும் பரதேசியாகிப் பிச்சை யெடுக்கும் நிலைமைக்கு வந்துவிடுகின்றன. உடனே வேலை எங்கே? எங்கே? என்று பறந்து கொண்டு பஞ்சத்தி லடிபட்டவன் கஞ்சியைக் காண்பதுபோல கலெக்டர் ஆபீஸில் அல்லது தாலூக்கா கச்சேரியில் எந்த வேலையாகிலும் இருபது ரூபாய்க்காவது, அல்லது யாருக்காவது பதிலாகச் சம்பளமில்லாமலாவது உத்தியோகம் பார்க்கிறான். பணம் சம்பாதிக்க வேறு வழியில்லாததால் எவ்விதமான ஈனவழிகளிலும், "தேசமிருந்தாலும் கெட்டாலும் எனக்கென்ன? நானிருந்தால் சரி" யென்று பணம் சம்பாதிக்க ஆரம்பிக்கிறான். கடைசியில் நல்ல உத்தியோகம் பெற்றுத் தனது சிநேகிதர்களுக்கும் உற்றோருக்கும் தனது பிரதாபங்களைக் கூறிக்கொண்டு காலந்தள்ளுகிறான்.

யூகித்தறிவோர்களுக்கு இதன் நுட்பம் நன்கு விளங்கும். நமது படிப்பு அன்னியர்கள் கையிலிருக்கும் வரையில் நமது படிப்பின் பயன் அடிமைத்தனத்திலும், ஒற்றர் தொழிலிலும் தவிர வேறு ஒன்றிலுமில்லை. ஜாதீயச் சங்கங்கள் ஏற்பட்டு இங்கிலாந்தில் சர்க்கார் தங்கள் ஜனங்களுக்கு எவ்வித அனுகூலங்கள் செய்கிறார்களோ அதுபோலவே நமது ஜனங்களின் குணங்களையும் நடவடிக்கைகளையும் மேன்மைப்படுத்தி, கைத்தொழில், சுதேசிய பாஷை, பரோபகாரம், தேசாபிமானம் முதலிய அரிய பல விஷயங்களில் பயிற்சி பெறச்செய்வித்து தேசத்தை முன்னுக்குக் கொண்டுவந்தாலொழிய வேறெதுவும் பயன்படாது. வீணாய் யூனிவர்ஸிடி பரீட்சைக்காகத் தனது வாழ்நாட்களைக் கழித்துப் பயனற்று, சரீர பலம், திரவிய பலம் இரண்டையுமிழந்து, நமது சிறுவர்கள் அழிந்துபோகாமலிருக்கும்படி தகுந்த ஏற்பாடுகளை ஜனங்களும் உண்மையான தேசாபிமானிகளும் சேர்ந்து சீக்கிரம் செய்யும்படி வற்புறுத்திக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

# மாணுக்கரும் கல்வியும்.

ஸ்ரீமான் கீ. சி. இராமஸ்வாமி அய்யர் பி. எ., எல் டி.

மாணவப்பருவம், இல்லறப் பருவம், வனவாசப்பருவம், துறவறப்பருவம் என நான்கு பருவங்களாக ஒரு புருஷனுடைய வாழ்நாட்களைப் பெரியோர் பகுத்திருக்கின்றனர். மாணவப்பருவமென்பது, பிறந்தது முதல் பள்ளியில் ஆசிரியரிடம் கற்றுப் பல கலைகளிலும் வல்லவனாகத் தேர்தல்வரைக்கும் உள்ளகாலம். இல்லறப்பருவமாவது அவ்வாறு கற்றவற்றை உற்ற துணையாகக்கொண்டு அறம், பொருள், இன்பம் வீடு ஆகிய நான்குபேறுகளையும் அடைவதற்கு முன்யறு முதல் நான்கையும் அனுபவிக்கும் காலம். மூன்றாவதான வனவாசப்பருமோ, உலகத்திலே இன்பதுன்பங்களை அனுபவித்த மானிடன், அவைகளின் பற்று ஒழிந்து தன் மனைவியுடன் காட்டிற்குச் சென்று பரமனைத் தியானிக்கும் காலமாகும். நான்காவதான துறவறப்பருவமாவது, எல்லாப்பற்றுகளையும் துறந்து, எப்போதும் ஈஸ்வர தியானத்திலேயே அமர்ந்திருக்கும் காலமாம்.

இந்நான்கு பருவங்களும் ஒன்றுக்கொன்று தொடர்ந்தனவாயும் ஒரு நிலை மற்றொரு நிலைக்குத் தானே கொண்டு சேர்ப்பதாகவும் இருக்கின்றன. சிறுவயதிலே கல்விகற்பதும், பிறகு உத்தியோகஞ்செய்து. பொருளீட்டி மனைவி மக்களுடன் வாழ்வதும், பிறகு தன் மக்களிடம் குடும்ப பாரத்தை ஒப்புவித்து விடுவதும், பின்னர் வயோதிகத்தினாலும் அறிவின்முதிர்ச்சியினாலும் வாழ்க்கையின்மீது வெறுப்புக்கொண்டு கடவுளை சிந்தித்துக்கொண்டே உடலை நீத்து பேரின்பநிலை அடையு எண்ணுவதும் மாந்தர் இயற்கையன்றோ? ஒவ்வொரு ஆச்சிரமத்திலும் அதற்குரியதான கடமைகளைச் செய்தல் முடியும். இது இயற்கை விதியாகும். ஆதலினாலே ஒவ்வொருவனும் தத்தம் கடமையாதென அறிந்து கொள்ளுதலும் அதன்படிச் செய்தலும் இன்றியமையாததாகும். இதை அனுபவத்திலனைவரும் அறிதல் கூடும்.

ஒவ்வொரு ஆச்சிரமத்திலும் ஒருவனுடைய கடமை இன்னதென்று ஒருவன் அறிதல் வேண்டுமெனச் சற்றுமுன்னர் கூறினோம். மாணவனாயிருக்கும்போது ஆசிரியனுடைய மேற்பார்வையின் கீழிருப்பதனாலே அவனுடைய கடமைகள் எவை யென அவ்வப்போது ஆசிரியர் எடுத்துக் கூறுகின்றார். தவறியபோது தகுந்தவழி எடுத்துக்காட்டி அவ்வழியே செல்ல வற்புறுத்துகின்றார். வானப்ரஸ்த துறவற ஆச்சிரமங்களிலே உலக அனுபவத்திலும் நூல்களாராய்ச்சியினாலும் ஜனக்கூட்டத்திலே வாழ்ந்துவந்தமையாலும் அறிவு விசாலப்பட்டிருக்கும். அதனால் நல்வழிச் செல்வதற்கு எது தகுதியானது என்பது தெளிவாகத்தோன்றும். இல்லறப்பருவம் புகுந்து அதில் செய்யவேண்டியவை, எவை நீக்கவேண்டியவை என்றறிதல் அரிதாம். இல்லறத்திலிருப்போன் கடவுள், முன்னோர், மக்கள், உறவினர், விருந்தினர், வறியோர் ஆகிய அனைவருக்கும் உதவி செய்யக்கடமைப் பட்டுள்ளான். அதுபற்றியே பெரியோர் பலரால் இல்லறமானது போற்றப்பட்டிருப்பதோடு; பின்வரும் இரண்டு ஆசிரமங்களுக்கும் தகுந்த வழிகாட்டியெனக் கூறப்பட்டிருக்கின்றது. எனவே இல்லறத்திலுள்ளவன் தன் கடமைகள் எவை யெனவும் அவற்றை எவ்வாறு செய்தல் வேண்டுமெனவும் அறிதல் இன்றியமையாதென்பது வெளிப்படை.

ஆயினும் ஒருவனுக்குத்தான் செய்யவேண்டியவை இவை, தகாதவை இவை என்ற அறிவு மாத்திரம் இருத்தல்போதாது. அவ்வறிவை அனுபவத்தில் கொண்டுவரல் வேண்டும். அன்றேல் கற்றனவெல்லாம் வெறும் ஏட்டுச்சுரைக்காயாகும். நூல் அறிவு மாத்திரமிருப்பின் போதுமென நாம் தீர்மானிப்போமாயின் நம் தீர்மானம் அறிவுச் சிறுமையினாற் செய்த தீர்மானமாகும். உதாரணமாக உலகத்திலே காணப்படும் தீயநெறியாளருக்குத் தாம் செய்வது தீமையென்று தெரிந்ததே. ஆயினும் அவர்கள் தம் செய்கைகளைச் செய்தே வருகின்றனர். கௌரவர்களில் பெரியோனான வணங்காமுடி மன்னனை ஒருவர் நோக்கி "நீ பாண்டவர்களை வெறுப்பதும் அவர்களுக்குத் தீங்கிழைக்க நினைப்பதும் தவறன்றோ? வேதங்களைக் கற்றுணர்ந்த நீ, இவ்வாறு செய்தல் தவறென அறியாயோ?" என ஒருவர் கேட்க, அதற்கு அவன் மறுமொழி கூறினான். "ஆம், நான் செய்வன தீமையென அறிவேன். ஆயினும் என்? என்னையறியாமலே பாண்டவரைக் காணுந்தோறும் பொறாமையும், அவர்களை அழிக்கவேண்டுமென்னும் அவாவும் தோன்றுகின்றன." என்றனன்.



இத்தகைய எண்ணம் மனத்திற் றோன்றாமல் செய்யவேண்டியகாலம் மாணவப் பருவத்திலேயாம். நூல்களிலுள்ளவைகளை போதிப்பதோடு ஆசிரியர் நில்லாது, தமது நடத்தையினாலும், பொதுவாகப் பேசும்போதும் உயர்ந்த லக்ஷியங்களை எடுத்துக்காட்டலாலும் மாணவனுக்கு நன்னெறிபுகட்டல்வேண்டும். இது சிறுகுழந்தையாயிருக்கும் காலத்தைக்காட்டிலும், குமாரப்பருவத்திலே மனத்திலே நன்கு ஊன்றும். குமாரப்பருவத்திலேதான் சிறுவர்கள் குழந்தைபருவத்திலிருந்து நீங்கி, ஆண்மக்களாகும் நிலைமையிற் புகுவதும், தம் இயற்கைக்கும் வளர்ப்பிற்கும், போதனைக்கும் தகுந்தபடி பெரியோரொருவரைத் தம் லக்ஷயமாகத் தெரிந்தெடுத்துக்கொள்வதும் இக்காலத்திலேதான். சிறுபிள்ளைத்தனம் சிறிது சிறிதாக மறைகின்றது. ஆழ்ந்தயோசனையும் அமர்ந்த நடத்தையும் தோன்றுகின்றன. இத்தருணத்திலேதான் ஆசிரியர் தமது பெருங்குணத்தைக் காட்டல் வேண்டும். தம்மிடம் வரும் எல்லாமாணவர்களையும் ஒரேவித மாணவர் என எண்ணாது, அவரவர்களுக்குத் தக்கபடிபுத்திகூறி நன்னிலையில் நிற்க வற்புறுத்தவேண்டும் எனக்கூறல் மிகையாகாது.

பதினெட்டு முதல் இருபத்திரண்டாம் வயதிற்குள்ளேயே பெரும்பாலாருடைய கல்விப் பயிற்சி நின்றுவிடுகின்றது. பிள்ளைகள் கலாசாலைக்கல்விமுடித்து வெளியேறுகின்றார்கள். பிறகு அவர்கள் தமக்குரிய, அல்லது கிடைக்கும் வேலைகளைச் செய்யச்செல்லுகின்றனர். இனி அவர்கள் செய்வன தாம்படித்த நூலுக்கும் கற்றகல்விக்கும் கேட்ட புத்திமதிக்கும் தகுந்தபடியேயிருக்கும் ஆதலின் மாணவர்கள் வாழ்க்கையிலே தகுந்தபடிச் செல்லச்செய்வது தமது பொறுப்பு என்பதைக் கலாசாலையார்கள் ஒருவாறாக அறிந்திருக்கின்றார்கள். இதனைப் பின் கூறுவோம்.

ஆசிரியர்களால் போதிக்கப்படும் பாடங்கள் பிற்காலத்திலே உபயோகப்படலாம்; படாமலுமிருக்கலாம் ஆனால் ஆசிரியர்கள் கடமை நூற்படிப்பு போதனையுடன் நிற்பதில்லை, அதற்கு மேலாய், நற்குணம் நிறைந்த மனுஷத்தனம்கொண்டு, உண்மையையும் உட்பொருளையும் மாணவர்கள் நாடச்செய்வதே ஆசிரியர்களின் முதல் நோக்கமும் கடைசிநோக்கமுமாக இருத்தல்வேண்டும் என்பது நாம் கூறாமலே விளங்கும். தன் மாணுக்கர்கள் புருஷசிம்மங்களாய் விளங்குகின்றனர் என்பனதயறியும்போது ஒரு ஆசானுக்குண்டாகும் பெருமகிழ்ச்சியும் திருப்தியும் எவ்வளவு என்று அளவிட முடியாத காரியம்.

ஆகவே கலாசாலையினின்றும் மாணவர்கள் விலகும்போது அவர்களைவிட்டுப் பிரியும் ஆசிரியர்கள், தம் மாணுக்கர்களின் பிற்கால நிலைமை எத்தகைத்தோ! வஞ்சனையும் பொய்யும் நிறைந்துள்ள உலகத்துள்ளே ஸத்தியமே உறுதுணையாகக்கொண்டு வெளிப்படட்டால் மயங்காது உயரிய நோக்கங்களைக்கொண்டு வாழ வேண்டுமே! என ஏங்கி இறைவனது அருளுக்கு இறைஞ்சி நிற்பர்.

ஆசிரியர்களுடைய நிலைமை இவ்வாறிருக்க, மாணவனுடைய மனப்போக்கு எத்தகையது என்பதைச் சற்றுநோக்குவாம். பல வருஷங்கள் அல்லும்பகலும் படித்து, தேர்ந்தவனென தக்க ஆசிரியர்களால் கூறப்பட்டுப் பரீக்ஷைகளில் தேறியுள்ள மாணவனுக்குத் தன் புத்தி நுட்பத்திலும் சாமர்த்தியத்திலும் அதிக நம்பிக்கையும் தைரியமும் இருக்கும். ஆனால் பள்ளியைவிட்டு வெளிச்சென்றபின் தன்னிலை என்னவாகுமோ என்ற ஐயம் மனத்திற்றோன்றும். தன்னைப்போன்று பலர் முன்னமேயே பரீக்ஷைகள் தேறியிருப்பதையும் அவர்களிற் பலர் உயரிய பதவிகளிலிருப்பதையும், சிலர்

தாழ்ந்த நிலைமைகளிலிருப்பதையும் அவன் அறிவான். மேலான பதவிகளிலிருப்பவருடைய அடிச்சுவடுகளைப் பற்றவேண்டுமென பேராவா தோன்றுவது இயற்கை. தாழ்ந்த நிலையிலிருப்பவர்கள் அந்நிலையடைந்ததற்குக் காரணங்கள் எவை என ஆராய்ந்து அவற்றிற்குத்தான் இடங்கொடாமலிருக்க வேண்டுமெனவும் தீர்மானிப்பான். ஆயினும் தன்னிலை என்னவாகுமோ என்ற ஐயம் அவ்வப்போது மனத்திற்றோன்றியபடியே இருக்கும்.

இப்படியிருக்கும் நிலைமையிலே பள்ளியை விட்டு நீங்கிப் பரந்த உலகத்திலொருவனாய் பாடுபடச்செல்லும் வேளையிலே அவனிடம் அன்பும் நன்மதிப்பும்பெற்ற ஆசிரியர் கூறும் மொழிகள் அவன் மனத்திலே நெடுங்காலம் பசுமரத்தாணிபோல் பதிந்திருக்கும். ஆதலின் வாழ்க்கையின் உட்பொருளையும் அதனிலே மாணவன் செய்யவேண்டியதையும், ஆசிரியர் எடுத்துக்கூறுவது இயற்கையாக நாம் எதிர்பார்க்க வேண்டியதும் அவசியமானதுமாக இருக்கின்றது.

இதனை உத்தேசித்தே சர்வகலாசாலை சங்கத்தார் எனப்படும் யூனிவர்ஸிடி அதிகாரிகள், தம்மால் நடத்தப்படும் உயர்தரப் பரீக்ஷைகளிலே தேறியவர்களுக்கு யோக்யதாபத்திரம் அளிக்க வருஷத்திற்கிருமுறை கூட்டங்கூடுகின்றனர். அவ்வமயத்திலே சங்கத்தலைவர் மாணவர்களைநோக்கி "நீங்கள் உங்கள் அறிவை நல்வழியிற்செலுத்துவீர்களா? நல்லொழுக்கம்கொண்டு வாழ்வீர்களா? உம்மாலானவரை பிறருக்கு நன்மைசெய்து நல்லறிவு பரப்புவீர்களா? உங்களுக்குக் கல்வியறிவளித்த இச்சர்வகலாசாலைச் சங்கத்திற்கும் உங்கள் நாட்டிற்கும் நற்பெயருண்டாகுமாறு நடந்துகொள்வீர்களா?" எனக் கேட்பர். அப்போது பட்டம்பெறவந்திருக்கும் மாணவர்கள் அனைவரும் "நான் அப்படியே செய்வதாகஉறுதிமொழி கூறுகின்றேன்" என ஒரே சமயத்திற் கூறுவர்.

நாம் முதலிற்கூறியபடி வாழ்க்கையில் ஓர் புதுத்துறையில் இறங்கவிருக்கும் இளைஞர்களுக்குத் தக்கவாறு போதனை செய்யப்படாவிடின் அதனைவிட வருத்தமுறத்தக்க விஷயம் வேறில்லை. பல விஷயங்களைப்பற்றி வெகுநேரம் பேசுவதைவிட, சுருக்கமாக வாழ்க்கைக்கு அடிப்படையான விஷயங்களை எடுத்துக்கூறி அவற்றை மனதிலிறுத்துவது தான் அவசியமான காரியம்.

பண்டைகாலங்களிலே மாணவர்கள் தங்கள் குருவினிடம் பல்லாண்டுகள் இருந்துகல்வி கற்றுவந்தனர். ஆயின் இக்காலத்தைப் போன்று லௌகீகவிஷயங்களுக்குச் சாதகமான பாடங்களையேமாத்திரம் முற்காலத்திய மாணவர்கள் கல்லாது இகபரமாகிய இருவித வாழ்க்கைக்கும், இன்றியமையாத விஷயங்களைக் கற்றுவந்தனர். பலவித தேகப்பயிற்சிகள் செய்துவந்ததினால் மாணவர்களுடைய தேகம் வலிமை பெற்றிருந்தது. தம்மாசாரியர்களோடு நெருங்கிப் பழகுவதாலும் அவர்களுக்குச் சேவை செய்வதாலும் பெருங்குணங்கள் படிந்தன. பெரியோர்க்கு ஸேவைசெய்ய அவா, அடக்கம். முதலிய குணங்கள் பதிந்தன. மாணவர்கள் தங்கள் தங்கள் வகுப்பிற்குரிய சாஸ்திரங்களைக் கற்றுவந்தமையின் பிற்கால ஜீவனத்திற்கு வேண்டியவைகளை அறிந்தனர். அனைவரும் பொதுவாக வேதம்பயின்றமையினால் வாழ்க்கையின் உண்மையையும் தாம் எவ்வாறு இவ்வுலகத்திலே நடந்து பேரின்பநிலையை அடைய வேண்டுமென்பதையும் அறிந்து கொண்டனர். இவைகளெல்லாவற்றையும் கற்றபிறகு ஆசிரியர் "இனிப்போகலாம்" என உத்திரவு கொடுக்கப்பெற்ற மாணவன், தனக்குத்தன் குருவின்பாலுள்ள அன்பையும், தனக்காக அவர் எடுத்துக்கொண்ட சிரமத்தையும், மனதில்வைத்து தன்னாலியன்ற காணிக்கையைச் செலுத்தி அவரை வணங்கிப்போவது வழக்கம்.

இவ்வாறு செல்லத் தயாராயிருக்கும் மாணவனை நோக்கி, பெற்றதாயினும், பெரிதும் பாடுபட்டு உடல், மனம் புத்தி ஆகிய இவற்றை வளர்த்த ஆசிரியர் கூறுவது என்? "உண்மைபேசு. அறஞ்செய் வேதநூல்களை வாசிப்பதினின்றும் தவறாதே. ஆசானுக்கு விருப்பமான தக்ஷிணை கொடுத்துவிட்டு, பிரஜா விருத்தியை நிறுத்தாதே. (உனக்கு மக்கட்பேறு உண்டாகட்டும் என்றபடி) உண்மையினின்றும் எப்போதும் விலகாதே. ஐசுவர்யத்திற்கான கர்மாவை விடாதே. வேதங்களைக் கற்பதும், கற்றுக்கொடுப்பதும் விடலாகாது.



தெய்வங்களுக்கும் பிதிருக்களுக்கும் செய்ய வேண்டிய கடன்களை விட்டுவிடாதே.

உன் தாயார் உனக்கோர் தெய்வமாக இருக்கவேண்டும். உன் தகப்பனார் உனக்கோர் தெய்வமாக இருக்கவேண்டும். உன் ஆசிரியர் உனக்கோர் தெய்வமாக இருக்க வேண்டும். உன்னில்லம் வரும் விருந்தினரும் உனக்கோர் தெய்வமாக இருக்கவேண்டும். குற்றமற்ற செயல்களே உன்னால் செய்யப்படட்டும். பிறவற்றைத் தவிர். நாங்கள் செய்யும் நற்செய்கைகளையே நீ பின்பற்ற வேண்டும். பிற கூடாவாம்.

சிறந்த அந்தணர்களைக் காணின் அவர்களுக்கு ஆசனம் (முதலியன) கொடுத்து இளைப்பாறச்செய்யவேண்டும், கொடுப்பதை (பெரியோருக்குக் கொடுப்பதை) சிரத்தையுடன் ஈதல்வேண்டும். சிரத்தையில்லாமல் தரலாகாது. அடக்கத்துடனும் பயத்துடனும் இரக்கத்துடனுமே கொடுக்க வேண்டும்;

நீ செய்யவேண்டிய கருமம் ஏதேனுமொன்றைப் பற்றியேனும் நடத்தையைப்பற்றியேனும் ஐயம் ஏற்படின், குற்றமற்றவர்களாய் சீர்தூக்குந் தன்மையுடையவர்களாய், அறத்தைக் கடைப்பிடித்துத் தம் நற்கருமங்களைச் செய்துகொண்டேனும் அல்லது பக்தியில்லமர்ந்து தங்கள் கருமங்களை செய்யாமலுமிருக்கும் அந்தணர்கள் செய்வதுபோல நடந்துகொள்.

அபக்யாதியுள்ளவர்களோடு நடந்துகொள்ளும்போது, குற்றமற்றவர்களாய் சீர்தூக்குந் தன்மையர்களாய், அறநெறி கடைபிடித்தவர்களாய் யாதேனும் செய்துகொண்டோ, வாளா இருந்து கொண்டோ இருக்கும் அந்தணர்கள் செய்வதுபோல் நடந்துகொள், இதுவே என் கட்டளை. நான்கூறும் புத்திமதி இதுவே வேதங்களின் இரகசியம். இதுவே நியாயம். இதனையே நீ கைக்கொள்ள வேண்டும்" (தைத்திரீய உபநிஷத்து.)

இவ்வாறு கடவுளுக்கும் முன்னோருக்கும் பெற்றோருக்கும், ஆசானுக்கும், விருந்தினருக்கும், பிறருக்கும் நாம் செய்யவேண்டியவைகளைச் செய்யவும், எவ்வழி செய்வதெனத் தெரியாது திகைக்கும்போது, எவ்வாறு நடக்க வேண்டுமெனவும் மேலே கூறியிருப்பது நம்மவர்மனத்தில் பதியவேண்டும். மேற்கூறியதைவிட இல்லறமென்னும் துறையிலிருந்து ஸம்ஸாரம் என்னும் கடலைகடக்க இருக்கும் ஒருவனுக்கு கூறக்கூடிய வீரமொழிகள் வேறுளவோ?

---

## புள்ளிக் குதவா பள்ளிக் கலை

ஒரு பட்டதாரியின் வாழ்க்கையையும் ஒரு தச்சுத் தொழிலாளியின் வாழ்க்கையையும் கவனித்துப் பார்ப்போம்.

பட்டதாரியாகிறவன் செலவு

முதல் பாரத்தினின்று பி. ஏ. படிப்பு வரை எங்கும் கரை தட்டாமல் கப்பல் போகுமானாலும் 10 வருஷம் பிடிக்கும். அந்த பத்துவருஷ காலத்துக்குள்,

| | |
|---|---|
| சோற்றுச் செலவு (மீ 10 ரூ வீதம்) | 1200 ரூ. |
| துணிச் செலவு (வரு 15ரூ வீதம்) | 150 |
| டாக்டர் செலவு (வரு 5 ரூ வீதம்) | 50 |
| ஹைஸ்கூல் புத்தகம் (6 வருஷத்துக்கு) | 75 |
| ஹைஸ்கூல் சம்பளம் (மீ 4ரூவீதம்) | 288 |
| காலேஜ் புத்தகம் (4 வருஷத்துக்கு) | 200 |
| காலேஜ் சம்பளம் (மீ 10 ரூ. வீதம்) | 480 |
| ஆகமொத்தம் செலவு | 2443 ரூ |

தச்சுவேலைக்காரன் வரவு

முதலில் ஒரு வருடமோ இரண்டு வருடமோ பெரிய தச்சரின் வீட்டில் சாப்பிட்டுக்கொண்டு பையன் வேலை கற்றுக் கொள்ளுகிறான். பிரதினம் சம்பளம் கிடைக்க வழி யிருந்தால் அவனுக்கு வருவாய் பின்வருமாறு:—

| | |
|---|---|
| 13 வயதில் (நாளைக்கு 6 அணா வீதம்) | 120 ரூ. |
| 14 வயதில் ( ,, 8 ,, ) | 160 ரூ. |
| 15, 16 ,, ( ,, 10 ,, ) | 400 ரூ. |
| 17, 18 ,, ( ,, 1 ரூ. வீதம்) | 640 ரூ. |
| 19,20,21 ,, ( ,, 1ன்றேகால் ரூ. ,, ) | 1200 ரூ. |
| ஆக மொத்தச் சம்பள வரவு ரூ | 2520 |

தற்போதைய சர்வ கலாசாலைப் படிப்புக்கு இன்னமும் நம்மவர்க்கு மோகமேன்?

ஸர். டி. ஹாமில்டன்.

# கிருமிகளும் அவைகளின் விஷமங்களும்.

ஸ்ரீமான், ஸி. எஸ். கிருஷ்ணசாமி அய்யங்கார் பி. ஏ.

பத்தொன்பதாவது நூற்றாண்டில் நடந்திருக்கும் அற்புதச் செயல்களுள், மானிடர்களுக்கு விரோதிகளாக இருக்கும் விஷக்கிருமிகளைப் பற்றித் தெரிந்து, உலகத்தாருக்குத் தெரிவித்தும், அவைகளின் கொடுமைகளினின்று தப்ப வழிகாட்டியிருக்கும் பெரியோர்களின் வேலைகளே அதி அற்புதம். அற்புத யந்திரங்களின்மேலுட்கார்ந்து அதிவேகமாய் பிரயாணஞ்சென்றால் வேடிக்கையாயும் சந்தோஷமாயும் இருக்கலாம், வேடிக்கைப் பேச்சுகளும், ஆச்சரிய சமாசாரங்களுமடங்கிய கதைப்புத்தகங்கள் இன்பமாயிருக்கலாம். பேசும் திறமை வாய்ந்த பெரியோர்களின் வார்த்தைக்கேட்டு, பெரியதேசாபிமானிகளாக நாம் ஆய்விடலாம். பெரிய வக்கீல்களாகலாம் கப்பல் வியாபாரம் செய்யலாம். பணக்காரர்களாகப் பெற்று ஆனந்த வெள்ளத்தில் மூழ்கலாம் எல்லாம் உயிருந்தால்தானே ! ஆகையால் மானிட ஜன்ம விரோதிகளின் மர்மங்களை உணர்ந்து, ஜனங்களின் நன்மையைக்கருதி விஷயங்களை வெளியிட்டிருக்கும் லிஸ்டர், பாஸ்டர் முதலிய பெரியோர்களைக்காட்டிலும் கொண்டாடத்தக்கவர் எவரேனுமுளரோ ?

கண்ணுக்குப் புலப்படக்கூடாத அவ்வளவு சிறியனவும், உயிர்ச் சேதங்களுக்குக் காரணமாயிருக்கும் கிருமிகளைக்கண்டு பரிசோதிக்க உதவியாயிருக்குங்கருவியைப்பற்றி சில வார்த்தைகளை இங்குசொல்லவேண்டியதவசியமாகும். அந்தக்கருவிக்குப்பெயர் மைகிராஸ்கோப் அதுசிறியபூச்சிகளை வெகு பெரியவைகளைப்போலக்காட்டும். இக்கருவி, இதைப் போன்ற வேறு அநேகம் கருவிகளைப்போல், நெருங்கிய எல்லைகளுள்ளடங்கியிருக்கும். மானிட சக்திகளை பதின்மடங்கு அதிகரிக்கச் செய்கிறது. சிறிய கொசுவை பெரிய கழுகு பருமன் பெருகிக்காட்டும் சக்தியுடைய இக்கருவி சிறிய கிருமி பரிசோதிப்புக்கு எவ்வளவு உபயோகம் என்பதை படிப்போரே யூகிக்கலாம்.

சுமார் இருநூறு வருடங்களுக்குமுன் ஐரோப்பா கண்டத்தில் ஹாலெண்ட் என்னுந்தேயத்திய துணிவியாபாரி யொருவன் இக்கருவியைக்கொண்டு வேடிக்கைக்காக சிறிய வஸ்துக்களையெல்லாம் பரிசோதிக்க ஆரம்பித்தான். தற்செயலாய், ஜலத்திலும், மிருகங்களின் ரத்தக்குடலிலும்; வாய் எச்சிலிலும் சிறிய உருக்கள் இங்குமங்கும் நெளிந்து ஓடுவதைக்கண்டான், அவ்வளவோடு நின்றானே ஒழிய, அவைகள் என்ன, எங்கிருந்து வந்தன என்று விசாரிக்கப்புகவில்லை. பிறகு பதினெட்டாவது நூற்றாண்டில் ரசாயன சாஸ்திரிகள் அவ்வியாபாரி பார்த்தமாதிரியான கிருமிகள் அழுகும் வஸ்துக்களிலும், புளிக்கும் பதார்த்தங்களிலும் இருக்கக்கண்டு, "இவைகள் தானகவே அந்தந்த பதார்த்தங்களிலிருந்தே உண்டாகின்றன" என்று ஊகித்தார்கள். அதன் பின் இடாலி தேசத்திய பாதிரியொருவர், செவ்வையாய்க் கொதிக்கவைத்த ஒரு பதார்த்தத்தை காற்றுப்புகா வண்ணம் ஒருபெட்டியில் வைத்து மூடினால், அது எத்தனை நாட்களாயினும் கெடாமல் வைத்தபடியே இருப்பதையும், பிறகு காற்றைப்புகவிட்டால் பாதார்த்தம் அழுகிப்புளிப்பதையும், கிருமிகள் உண்டாவதையும் காண்பிக்கவே ரசாயன சாஸ்திரிகள் வஸ்துக்களை விட்டு விட்டு காற்றைப்பிடித்துக் கொண்டார்கள், காற்றுதான் வஸ்துக்கள் அழுகிப் புளிப்பதற்கு காரணமென்று சொல்லவாரம்பித்தார்கள். பிறகு பத்தொன்பதாவது நூற்றாண்டில், "சதை, செடி, கொடிபோன்ற வஸ்துக்கள் இருக்கும் இடத்தில் காற்றிருக்கலாம். ஆனால் அக்காற்று கொதிக்கும் சூட்டோடு கூடிய குழாய்கள் மூல்யமாய் வந்ததாகவாவது இருக்கவேண்டும் அல்லது அக்கினிதிராவகத்தின் மூலமாகவாவது வந்ததாயிருக்க வேண்டும். அப்படியிருந்தால் வஸ்துக்கள் அழுகிப் புளிப்பதில்லை' யென்றும், அப்படி புளிப்பதற்குக் காரணக்கிரிமிகள் ஆகாயத்திலிருக்கின்றனவென்றும், அவைகள் வசிக்கும் காற்று சூட்டுக்குழாய்கள் மூலமாகவும் அக்கினிதிராவக



மூலமாகவும் வரும்போது இறக்கின்றனவென்று பாஸ்டர் என்னும் பெரியோர் காண்பிக்கவே எல்லோரும் காற்றை விட்டு விட்டு நன்மைக்கும் தீமைக்கும் உண்மைக்காரணமாய் இருக்கும் கிருமிகளைப் பிடித்துக்கொண்டார்கள். வஸ்துக்களிலிருந்து கிரிமிகள் தானே உண்டாகின்றன என்னும் மூடநம்பிக்கைப் பிசாசு அவர்களை விட்டகன்றது.

வழியே சென்றுகொண்டிருந்த பிரயாணிகள் இருவர் பச்சோந்தியைப்பற்றி பேசநேர, ஒருவன் அது சிவப்புவர்ணமானதென்றும் மற்றவன் அது நீலமானதென்றும் நெடுநேரம் வாதாடிக்கொண்டிருப்பதைக் கண்ட ஓர் வயது முதிர்ந்தவன் ஓந்தி சமயத்திற்கேற்ப இரண்டு வர்ணங்களையும் கொள்ளும் என்று காட்டி அவர்கள் சண்டையை விலக்கினதாய்க் கதையுண்டு அதுபோல், கிருமி ஆராய்ச்சி சாஸ்திரிகளும சண்டைசெய்தார்கள். ஒரு சாரார் கிருமிகள் மிருகஜாதியென்றார்கள. மற்றொரு சாரார் அவைகள் ஸ்தாவரஜாதி என்றார்கள். மும்முரமாக முட்டிக்கொண்டார்கள். கடைசியாக கிருமிகள் இருஜாதியிலும் இருக்கின்றன. என்றறிந்து அவைகளுக்கு ஒரு பொதுப் பெயரு மிட்டார்கள்.

அவர்கள் அவைகளுக்கு வைத்தபெயர் (மைக்ரோப்ஸ்,) மைக்ரோப் என்றால் சிறிய உயிர் என்று அர்த்தம், ஆகையால் நாமும் அவைகளை 'சிற்றுயிர்கள்' என்னலாமல்லவா?

இச்சிற்றுயிர்களில் முக்கால்பங்குக்கு மேல் ஸ்தாவரஜாதியைச் சேர்ந்தவை. மிருகஜாதியைச் சேர்ந்தவை வெகு கொஞ்சம். இக்கொஞ்சம்தான் வெகு பொல்லாதவைகள். வியாதிகளுக்குக் காரணமானவை. இன்னும் ஓர் விஷயம். மானிடர்களுக்கு நன்மைகளைச் செய்யும் கிருமிகளும் அநேகமுள. பாலைப் புளிக்கச்செய்யும் கிருமிகளும், இறந்த மிருகங்களையும் விழுந்த மரஞ்செடி கொடிகளையும் அழுகிப்புளிக்கச்செய்து மற்றுமிருக்கும் மரஞ்செடி கொடிகளுக்கும் ஆகாரமுண்டாக்கும் கிருமிகள் உபகாரிகள் அல்லவா ? இறந்த மிருகங்களும், செடிகளும் கிருமிகளின் உதவியால் மாறுபாடடையாமல் அப்படியே இருந்துவிட்டால், என்னாகும்? பெரிய விபரீதம் உண்டாகும். நாளடைவில் நிலசத்து அற்றுப்போம். செடிகொடிவளரா. உலகத்தில் உத்பத்தியே நிற்கும்.

சாதாரண மனிதர்கள் உபகாரிகளை மறந்து அபகாரிகளிடமிருந்து தப்பும் வழியை முதலில் தேடுவது சகஜமல்லவா? ஆனது பற்றியே, கிருமிவிஷய ஆராய்ச்சிசாஸ்திரிகள் விஷமக்கிருமிகள் விருத்தியாகக் கூடிய வழிகளை தேடித் தெரிந்து அக்கிருமிகளின் யோக்கியதைகள் அவைகள் எவ்வாறு வருளகின்றன, எப்படி, எப்போது இறக்கின்றன என்பதைத்தெரிந்தார்கள். அவைகள் விருத்தியாவது வெகு விநோதம். சௌகரியங்கள் இருந்திருந்தால், அவைகளில் ஒன்று சிலமணிகளுள் கணக்கற்றவையாய் விருத்தியாய்விடும். இங்ஙனம் கவனிக்க வேண்டியதென்னவெனில், அக்கிருமிகள் சௌகர்யங்களிலிருந்தால் தான் விருத்தியாகின்றன. இல்லாவிடில் விருத்தியாவதில்லை யென்பதே. சௌகர்யங்களிலிருந்து அவைகள் விருத்தியாவதைப் பார்த்தால் அதிபயங்கரமாயிருக்கும். இரத்தத்தில் ஓர் இடத்தில் ஒரு பூச்சி இருந்து விருத்தியாவதைப் பார்த்தால் புற்றிலிருந்து ஈசைகள் வருவதுபோன்றிருக்கும்.

எல்லாம்வல்ல இறைவனருளால், அவைகளுக்குச் சௌகர்யங்கள் அதிகமில்லை அப்படியிருந்தால், ஐயமின்றி உலகத்தில் மனிதப்பூண்டற்று, கிருமிப்பூண்டே செழிக்கும். நாம் குடிக்கும் தண்ணீரிலும் உட்கொள்ளும் ஆகாரத்திலும், சுற்றிலுமெங்கும் கிருமிகள் இருக்கும் ஏன் விருத்தியாகி நம்மை எல்லாச் சமயங்களிலும உபத்திரவப்படுத்துவதில்லை? ஏனெனில் இக்கிருமிகள் இரத்தத்தில் கலக்காவண்ணம் தடுத்துக்கொள்ள நம் தொண்டைக்கரு

கில் ஒன்று, இரண்டு கிருமிகள் இருந்தாலும் அவைகள் சுலபமாக உட்சென்று இரத்தத்தோடு கலக்கமுடிவதில்லை. ஆனால் நம் அசட்டையாலும் அசுத்த வாழ்க்கையாலும் வாயில் அநேகம் கிருமிகள் வந்தடைந்து அவைகளில் ஒன்று "தப்பித்தவறி' உள்ளே சென்று கலந்து உபத்திரவிக்கலாம். அவைகள் அப்படிச் செய்யாவண்ணம் நாம் எப்பொழுதும் வாயை சுத்தமாய் வைத்துக்கொள்ள வேண்டும் என்பது நான் சொல்லாமலே படிப்போர் தெரிந்து கொண்டிருப்பார்கள் என்று நம்புகின்றேன்.

இக்கிருமிகள் ஒருவித மெதச்சூட்டில் விர்த்தியாகின்றன சூர்ய வெளிச்சத்தில் விருத்தியாவதில்லை. எல்லாக்கிருமிகளையும் அதிகச் சூட்டினால் கொல்லலாம். நூற்றைம்பது டிகிரிச்சூட்டில் அதாவது, கைபொருக்காத சூட்டிலேயே எல்லாக்கிருமிகளும் இறக்கும், இது பற்றியே, தொத்துவியாதிக்காரர்கள் உடைகளையும், படுக்கை முதலியவைகளையும் கொதிஜலத்தில் போடுகிறார்கள். பாலைக்காய்ச்சிச் சுத்தப்படுத்துகிறார்கள். ஆபரேஷன் செய்யுங் கருவிகளைப் பிரயோசனப்படுத்துமுன், நெருப்பில் காய்ச்சுகிறார்கள.

அதிககுளிரில் கிருமிகள் பிழைத்திருந்தாலும விருத்தியாவதில்லை. ஆகையால்தான் வெளிதேசம் அனுப்பும் மோர்க்குழம்பு, தயிர் வடை, ஊறுகாய்தினுசுகள், மாமிசபண்டங்கள் இவைகளை பத்திரமாய் பெட்டியிலடைத்து பனிக்கட்டியால் மூடியனுப்புகிறார்கள்.

விஷக்கிருமிகள் சுமார் ஐம்பது வருடங்கட்குமுன். வியாதியால் பீடிக்கப்பட்டிருந்த சில மிருகங்களின் இரத்தத்தில் சிறிய கிருமிகளிருக்கக் கண்டு, அவைகள்தான் அம்மிருக வியாதிக்குக் காரணமென்று காக் என்னும் ஒரு ஜர்மனியர் ருஜுப்பித்தார். அதற்குப் பின், டைபாய்ட், பிளேக், காலரா, அம்மை, இன்புளுயன்ஸா எல்லாம்கிருமிகளாற்றான் உண்டாகின்றன வென்றும், ஒரு வியாதிக்கிருமிக்கும் மற்றொரு வியாதிக்கிருமிக்கும் அதிக வித்தியாசங்களிருக்கின்றன வென்றும் ஆராய்ச்சி சாஸ்திரிகள் தெரிந்தார்கள்.

ஜலதோஷம் அதன்கூடவரும் தலைவலியுங்கூட, கிருமிகளால் உண்டாகின்றனவென்று எல்லோரும் அறியவேண்டும். "அப்படியல்ல, குளிரும், பனியும் மழையுந்தான், ஜலதோஷம் தலைவலிக்குக் காரணங்கள்" என்று எண்ணக்கூடாது. அது உண்மையென்றால் குளிர்காலத்திலும், பனிக் காலத்திலும் எல்லாருக்கும் ஜலதோஷம்வராமலிருப்பதற் கென்னகாரணம்? மழையும் பனியு மில்லாத வெயிற் காலத்தில் அநேகம் பெயர்களுக்கு ஜலதோஷம் வருவானேன்?

"ஒரு பெரியமனிதர்வீட்டில் அழகிய ஹால் ஒன்று. அதில் பளபளப்பான ரத்னகம்பளம் விரித்திருக்கின்றது. அங்கு இன்னும் சில பெரிய மனிதர்கள் வரப்போவதை உத்தேசித்து, வீட்டு எஜமானன் இரண்டு வேலைக்காரர்களைக் கூப்பிட்டு, ரத்னகம்பளத்தை உதறிப்போடச் சொல்லுகிறார். சற்றுநேரத்திற் கெல்லாம், எஜமானனும், வேலைக்காரர்களும் ஜலதோஷத்தினால் கஷ்டப்படுகிறார்கள். தும்புகிறார்கள். மூக்கைச்சிந்துகிறார்கள்." ஏன்? கம்பளியில் இருந்த சிற்றுயிர்கள் அதை உதறினதும், ஆகாயத்தே பறந்து அங்கிருந்தவர்களின் நாசித்துவாரங்களின் வழியே சென்று சுவாசப்பையிற் புகுந்து வேலைசெய்கிறதின் பயனாலே ஜலதோஷம் உண்டாகிறது என்பதே காரணம். இம்முடிவிற்கு வருதற்கு இன்னும் அநேக காரணங்கள் உண்டு இடக்குறைவினால் அதை இங்கு நிறுத்துகிறோம்.

# உபாத்தியாயர்

## அவரது உரிமைகளும் கடமைகளும்.

(கி. பி. சேஷாத்திரி ஐயங்கார், எழுதியது )

ஓர் உபாத்தியாயர் விஷயக் களஞ்சியமாகவும், எல்லா விஷயங்களையும் அறிந்து சொல்கின்றவராயும், சிறுவர்களுக்குச் சமஸ்த விஷயங்களையும் அளிப்பவராகவுமிருப்பது மல்லாமல் அவர்களுக்கு வழி காட்டியாகவும், தத்துவ சாஸ்திரியாகவும், சிநேகிதராகவும் அவர்களது ஆசார ஒழுக்கங்களைச் சீர்திருத்துவோராகவும், தேகாப்பியாசம் செய்விப்போராகவும், அவர்களது மனதை விசாலப்படுத்துபவராகவும் இருக்கவேண்டும்.

இம் மாதிரி இருப்பதற்குமுன் பிள்ளைகளைப்பற்றிய விஷயங்களெல்லாவற்றையும் தெரிந்துள்ளவராயும் அனுபவமுள்ள ஆத்ம தத்துவ சாஸ்திரியாகவும், நீதி சாஸ்திரியாகவுமிருக்கவேண்டும். உபாத்தியாயர் என்ற நீண்டகால அனுபவ முடையவராகவும் இருக்கவேண்டும். தனக்குப் பிள்ளைகளின் மீது நிஷ்கர்ஷையான பிரியமும், அனுதாபமில்லையானால் அவர் உபாத்திமைத் தொழிலை அவலம்பிப்பதற்குப் பிரயத்தனப்படாமலிருப்பது மிகவும் உத்தமமானது. அவர் தம்முடைய நன்மையின் பொருட்டும், யாருடைய அபிவிருத்திக்குத் தாம் உத்தரவாதமாக இருக்கிறாரோ அவர்களுடைய நன்மையின் பொருட்டும், அவ்வேலையை மேற்கொள்ளாதிருப்பது நல்லது. உபாத்திமைத்தொழிலில் கீர்த்தி பெற வேண்டுமென்றிருப்பவர் மிகுந்த பொறுமையும், தேகாரோக்கியமும், வசீகரமும், சந்தோஷகரமுமான ரூபமும், சமத்காரமாய்ப் பேசுங்குணமும், சுலபமாய்ப் பல விஷயங்களில் புத்தி பிரவேசிக்கும் சக்தியும், கஷ்டப்படுவதற்கு அபாரமான சாமர்த்தியமும், ஸ்திரமான நம்பிக்கையும், கௌரவமும், தீர்மானமும், தோஷரஹிதமான குணமும், மரியாதையும், சுறுசுறுப்பும், சாந்தமும், கூர்மையான கண்ணும், காதும், ஆண்மையும், விடாமுயற்சியும், பக்ஷத்தினால் மறைக்கப்பட்ட கடின சித்தமும் பெற்றவராக இருக்கவேண்டும்.

மேற்குறித்த லக்ஷணங்களில் மிகவும் முக்கியமானவைகளைக் குறித்துக் கொஞ்சம் விஸ்தாரமாகச் சொல்வது மிகையாகாது.

பொறுமை :—தம்மிடம் படிக்கவரும் பிள்ளைகளில் மந்த புத்தியுள்ளவர்கள் அதிகமாயிருக்கலாம். அவர்களுக்கு எத்தனை தடவை ஒரு விஷயத்தைச் சொன்னாலும் மனதில் பதியாது. அப்பொழுது கூட அவர்கள் பேரில் சற்றேனும் கோபங் கொள்ளாமல் நன்றாய் விளக்கிக்காட்டாத குற்றம் தம்முடையதென்று நினைத்துப் பொறுமையுடன் மறுபடியும் சொல்லவேண்டும். ஆதலால் உபாத்தியாயருக்குப் பொறுமைக் குணம் இன்றியமையாதது.

தேகாரோக்கியமும், பலமும் :—இவ்விரண்டுமிருந்தால்தான் சரீரம் திடமானதாக இருக்கும். சரீரம் திடமாகயிருந்தால்தான் மனமும் திடமாக இருக்கும். ஆகையால் வியாதிஸ்தர்களை உபாத்தியாயர் வேலைக்கு நியமிக்கக்கூடாது. இவர்களுக்கும், சதா குதித்து விளையாடிக் குதூகலமாயிருக்கும் சிறுபிள்ளைகளுக்கும் ஒத்துவராது. அற்ப விஷயங்களுக்கு எல்லாம் கோபங்கொண்டு கடுமையாக தண்டிப்பார்கள். நோயுள்ளவர்களாயிருந்தால் அடிக்கடி வீட்டிலேயே இருக்க நேரிடும். பிள்ளைகளின் வித்தியாபிவிருத்திக்குப் பங்கம் நேரும். ஆகை

யால் உபாத்தியாயர்களாக வருபவர்கள் சரீர திடகாத்திரமுள்ளவர்களாய் இருக்கவேண்டும்.

வசிகரமும் சந்தோஷகரமுமான ரூபம்:— சிறுபிள்ளைகள் பெரியோர்களின் ரூபத்தைக் கண்டுதான் பயப்படுவதும், மரியாதை செய்வதும்; சரீரம் எப்படியிருந்தால் என்ன? யோக்யதையை அறிந்தல்லவா மரியாதை செய்யவேண்டியதென்பது அவ்வளவாகச் சிறுபிள்ளைகளுக்குத் தெரியாது சிலருக்குச் சுபாவத்திலேயே சரீரம் பார்ப்பவர் கண்ணையும், மனத்தையும் கவரத்தக்கதாயும் நடைமுதலியவை கம்பீரமாகவும் பார்ப்பவருக்குப் பயத்தையும் பக்தியையும் உண்டுபண்ணத் தக்கவையாயும் ஏற்பட்டிருக்கும். இந்தப் பாக்கியம் எல்லோருக்கும் கிடையாது. எல்லோரும் இப்படியில்லாமற்போனாலும் அங்கஹீனமில்லாதவர்களாகவாவது இருக்கவேண்டும். ஓர் உபாத்தியாயர் நொண்டியாயிருந்தால் அவரிடத்தில் பிள்ளைகளுக்குப் பயமும், பக்தியும் உண்டாவது கஷ்டம். பிறர் செய்வதைப்போல் செய்கிற சுபாவம் பிள்ளைகளிடத் துண்டாவதால் நொண்டி நடக்கும் உபாத்தியாயரைப் பார்த்தால் அவரைப்போல் அவருக்குப் பின் தாமும் நொண்டி நொண்டி நடப்பார்கள். அது கடைசியில் உபாத்தியாயரைக் கேலி பண்ணுவதில் முடியும். அவரிடத்தில் பிள்ளைகளுக்கு மரியாதை குறைந்து போகும். ஆகவே உபாத்தியாயர்கள் அங்கஹீனமில்லாதவர்களாக இருக்கவேண்டும்.

ஸ்பஷ்டமாகக் கேட்கும்படியான கண்டத்வனி:—பிள்ளைகளுக்கு ஸ்பஷ்டமாய்க் கேட்கும்படியான மெல்லிய குரலில் பாடம் சொல்லும் உபாத்தியாயரை ஒருவன் தேர்ந்தெடுப்பது மிகவும் கஷ்டம். கத்துவதால் சீக்கிரத்தில் பலஹீனமடைகிறார். தொண்டையும் கம்மிக்கொள்ளுகின்றது. எந்த விஷயத்தை நன்றாக மனத்தில் பதியவைக்கவேண்டுமென்று உபாத்தியாயர் விரும்புகின்றாரோ, அப்பொழுது சொல்லச் சக்தியற்று இருக்கின்றார். மெல்லிய குரலில் பாடம் சொல்லிப் பழக்கப்பட்டிருக்கும் உபாத்தியாயர் திடீரென்று உரத்துச் சொல்லுவதால், பிள்ளைகளின் கவனத்தைத் தன் பக்கத்திற்கு இழுத்துக் கொள்ளுவதுமல்லாமல் 'பின் தங்கும்' பையனை விஷயங்களைக் கவனிக்க அழைக்கவும் பிரயோஜனப்படுகிறது. எப்போதும் உரத்துக் கத்தும் உபாத்தியாயர் மற்றைய வகுப்புக்கு இடையூறாக இருப்பார். பிள்ளைகள் ஒருவர்க்கொருவர் பேசிக்கொண்டிருக்கலாம்; ஒருவர்க்கொருவர் தள்ளி விளையாடிக்கொண்டிருக்கலாம்; அப்படியிருந்தும் உபாத்தியாயரின் உரத்த குரலை ஸ்பஷ்டமாய் கேட்கவும் கூடும். அதே பிள்ளைகள் தாழ்ந்த குரலில் சொல்லும் உபாத்தியாயரிடத்தில் அமைதியாயும் சந்தடியின்றியும் இருக்கவேண்டும். எவனாவது ஒரு பையன் தாம் சொல்லும் விஷயங்களைக் கவனியாமலிருந்தால் அப்போது உபாத்தியாயர் 'நீ மாத்திரம் சத்தஞ் செய்யாமல் அமைதியாய் கவனித்திருந்தால் நான் சொல்லும் விஷயங்களை நன்றாகக் கேட்டிருப்பாய் உனக்காக மறுபடியும் விஷயங்களை திருப்பிச் சொல்லமாட்டேன், என்று சொல்ல இடமிருக்கிறது. பிள்ளைகளால் தெரிந்து கொள்ள முடியாதபடி உபாத்தியாயர் உரத்துக் கூச்சல் போட வேண்டியதைக் காட்டிலும், அவர் சொல்லும் விஷயங்களைக் கேட்டுத் தெரிந்து கொள்ள மிகவும் அமைதியாகப் பிள்ளைகள் இருக்க வேண்டியது தான் முறைமை. எவ்வளவு குறைவாக உபாத்தியாயர் பேசுகிறாரோ அவ்வளவு அதிகமாய் பிள்ளைகள் தங்களுக்குள் யோசனை செய்ய இடமுண்டாகும். பிள்ளைகள் கேள்விகளுக்குப் பதில் சொல்லும்போது உபாத்தியாயரின் குரலைப்போல வகுப்பு முழுமையும் கேட்கும் படியாகச் சொல்ல வேண்டும். வகுப்பிலுள்ள பிள்ளைகளுக்கு எந்த மட்டில் உரத்துப் பேசினால் போதுமோ அந்த விதமாய்ப் பேசவேண்டியது. ஓர் உபாத்தியாயரின் தொழில் பிரசங்கம் செய்வதல்ல.

கூர்மையான கண்ணும் காதும் உடையவராகவும் இருக்கவேண்டும். உபாத்தியாயர் வகுப்பில் பாடம் நடத்தும் பொழுது அனாவசியமாய் சப்தம் கொஞ்சம் கிளம்பினாலும் சரி, அல்லது பிள்ளைகள் சற்று கவனத்தப்பாய் அங்கும் இங்கும் பார்த்தாலும் சரி, அந்தச் சத்தத்தையும், கவனத்தப்பையும் உடனே அறியக்கூடிய அவ்வளவு கூர்மையான கண்ணும் காதும் உடையவராக இருக்கவேண்டும். பாடம் நடக்கும்போது சொல்லிக் கொடுக்கும் உபாத்யாயர் குரலோ, அல்லது கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லும் பிள்ளைகளுடைய குரலோ ஒரு குரல்தான் கேட்கப்படவேண்டும்.

(தொடரும்.)

# பெண் கல்வி

(ஸ்ரீமதி. அ ஜெயலக்ஷ்மி அம்மாள் எழுதியது.)

“அடுப்பு ஊதும் பெண்களுக்குப் படிப்பு எதற்கு?” என்ற சொல்லும் அக் காலத்தில் தான் இருந்த தென்றால் இக் காலத்திலும் அதைக் குறிப்பிடாத கிழங்கள் இல்லாமலில்லை. வீட்டின் மூலையில் உட்கார்ந்து கொண்டு முணுமுணு வென உருமிக் கொண்டிருக்கும் கிழங்களுக்குப் பெண் கல்வி யென்றால் பிடிப்பதில்லை பாழும் படிப்பே பெண்களைப் பாழாக்கி விட்டதாக மார் தட்டி போர் தொடுக்க முன் வந்து விடுவர். “என்ன கொடுமை! அப்பப்பா! எங்கள் காலத்தில் நாங்கள் எவ்வளவு மரியாதையாக வீட்டு வாசற்படி தாண்டாமல் வீட்டோடு ஒடுங்கிக் கிடந்தோம்! இந்தக் காலத்துக் குமரிகள் கொஞ்சம் படித்ததும், அவர்கள் தளுக்கென்ன! குலுக்கென்ன!! கொஞ்சமேனும் மானமின்றி தெருச் சுற்றவும், ஆடவருடன் தாராளமாகப் பேசவும் துணிந்து விடுகிறார்களப்பா! இந்தக் கோலத்தை எங்கே கண்டோம் இதற்கெல்லாம் பெண்கள் படிப்பதே காரணமாகு”மென, மடமடவென கைதட்டி, மூக்கின் மீது கை வைத்து ராமாயணக் கதை சொல்ல ஆரம்பித்து விடுவார்கள். அவர்கள் கூறுவதைச் சொல்ல முயன்றாலோ பிடித்தது சனியன். நாம் நின்று பேசவும் முடியாது போதும் ஓட்டமெடுக்கவேண்டியது தான். அவர்களுக்கு சரியான காரணம் காட்டி, பெண் கல்வி அவசியமெனத் தான் கூற முடியுமா? முடியாது. சரியான காரணத்தைத்தான் அவர்கள் உணர முடியுமா! அதுவும் முடியாது. என்ன காரணங்கள் கூறிய போதிலும் அவர்கள் மூளைக்கு ஏறுவதில்லை. இதற்குக் காரணம் என்ன? அவர்கள் கல்வி வாசனை யற்றிருப்பதே காரணமாகும். கல்வியின் அருமை தெரியாத பழங்கிழங்களுக்குக் கல்வியின் அருமையைப் பற்றி என்ன தான் கூறமுடியும்!

## கல்வி அவசியமா?

பாழும் கிழங்கள் எப்படியோ தொலைந்து போகட்டும். ஆனால் பெண்களுக்குக் கல்வி அவசியமா என்பதைப் பற்றி சிறிது கவனிப்போம். பெண்களுக்குக் கல்வி அவசிய மென்பதை உணராதவர்களில்லை. அது விஷயமாய் முயற்சி எடுத்துக் கொள்ளாத நாடுகளு மில்லை யென்றே சொல்லலாம். பெண்களுக்குக் கல்வி அவசியமா என்ற கேள்வியை இப்பொழுது எழுப்புவதே பிறருக்கு நகைப்பை உண்டாக்கலாம். உலகமெல்லாம் பெண் கல்வியை வற்புறுத்தி, அதற்காக அரும் பாடுபட்டு வரும் இக்காலத்தில் இதைப்பற்றி எவர்தான் எழுதத் துணிவர்? பிறநாடுகளில் பெண் கல்வி சம்மந்தமாய் எவ்வளவோ அரிய முயற்சி எடுத்து வருகிறார்கள். ஆனால் நமது நாட்டில்—உலகத்துக்கே நாகரீகத்திற்கு உறைவிடமா யிருந்த நமது நாட்டில், பெண்கல்வி சம்மந்தமாய் போதிய முயற்சி எடுத்துக் கொள்ளாததே இதை எழுதத் துணிந்ததற்குக் காரணமாகும். நமது நாட்டுப் பெண்கள் பெரும்பான்மையோர் கல்வி வாசனையின்றி இன்னமும் அந்தகாரத்திலேயே அழிந்து கிடக்கின்றனர். அவர்கள் நிலைமையை நேரில் கண்டவர்களே அறிவர். நகரங்களில் சிலபெண்கள் படித்து, தடபுடலாய்த் திரிவதைக்கண்டு இந்தியாவிலும் பெண்கல்வி அதிகரித்து விட்டதாகக் கருதிவிடக் கூடாது. கிராமப் பகுதிகளுக்குச் சென்று அங்குள்ள பெண்மணிகளின் நிலைமையை அறியவேண்டும். பாவம்! அவர்கள் கல்வி என்பது முதலாய் இன்னதென்று அறியார்கள். அவர்களுக்குச் சரியான கல்வி கொடாமையால் அவர்கள் உலகத்தின் போக்கையும், விசேஷமாக இந்தியாவின் நிலைமையையும் அறிந்து கொள்ளாமல், கிணற்றுத் தவளைகள் போல் ஜீவியம் நடத்தி வருகிறார்கள். தங்கள் கிராமத்துக்கு அப்புறம் வேறு உலகம் உண்டோ வென்ற சந்தேகமும் அவர்களுக்கு உண்டு. நமது நாடு, நமது சுதந்திரம் என்பது முதலாய் அவர்களுக்குத் தெரியாது. எவர் எக்கேடு கெட்டா லென்ன, நமக்கு ஆகாரமும், ஆடை

யும் கிடைத்தால் போதுமென, வெறும் வயிற்றுச் சாமிகளாய் விளங்குகிறார்கள். பெற்றோர்களாகத்தேடி, எவனையோ ஒரு முண்டத்தையோ, மூடத்தையோ தேடி கலியாணஞ்செய்து வைத்தால் எல்லாம் தலைவிதியென நொந்துகொள்ளுகிறார்கள். இல்லற தர்மம் என்பதை முதலாய் அறியாமல் வெறும் பிள்ளை பெறும் இயந்திரங்களாக மக்களைப் பெற்று ஜீவியம் நடத்தி வருகிறார்கள். இவ்விதம் கல்வி வாசனையற்ற பெண்களுக்குப் பிறக்கும் குழந்தைகளின் நிலைமையைப்பற்றியோ கேட்கவேண்டுமா. அவர்கள் கல்வியில் இவ்வித பெற்றோர்கள் எவ்வாறு கவனஞ் செலுத்த முடியும்? அவர்களை எப்படி சீர்திருத்தத்தான் தெரியும்? இந்திய எதிர்கால வீரர்களாய் விளங்கும் மக்களும் இக்கதிக்குள்ளாகி விடுகிறார்கள். இதற்குக் காரண மென்ன? பெண்களுக்குச் சரியான கல்வி இல்லாததே யாகும், இவ்வாறான நிலைமையில் நம் நாடு முன்னேறுவது எப்படி? சிங்கக் குட்டிகளைப் பெற்றெடுக்கும் தங்கக்கட்டிகளாகிய பெண்மணிகள், கல்வி குன்றி, அறிவு மழுங்கி வெறும் நடைப்பிணங்களாக விளங்குவார்களே யானால், நம் நாடு முன்னேறுவ தெவ்வாறு? நம் நாட்டுக்கு ஈடேற்றந்தான் ஏற்படுமோ வென்று சந்தேகிக்க வேண்டி இருக்கிறது.

### இதர நாட்டுப் பெண்கள்.

ஒரு நாட்டின் முன்னேற்றத்துக்கோ, அன்றி அபிவிருத்திக்கோ அந்நாட்டு பெண்மணிகளே காரணமாவர். பெண்களின் கல்வி அபிவிருத்தியே அடிப்படையாகும், உதாரணமாக பேனுடுகளை எடுத்துக் கொள்ளுவோம். ஐரோப்பாவின் அபிவிருத்திக்குப் அப்பெண்மணிகளின் கல்வியும் அவர்கள் வீரமுமே முக்கிய காரணமாகும். அமெரிக்காவின் அதி தீவிர முற்போக்கிற்கு அப் பெண்களே காரணம். கீழ் நாடுகளில் ஒன்றாகிய ஜப்பானை எடுத்துக்கொள்ளுவோம். சுமார் 50 வருடங்களுக்கு முன் ஜப்பானை ஏறெடுத்துப் பார்ப்பவரில்லை. தற்போது அது உலகம் நடுங்கும் வல்லரசுகளில் ஒன்றாக விளங்குகிறது. அந்நாட்டின் மேன்மைக்குக் காரணமா யிருந்தவர்கள் யார்? பெண் மணிகளேயாவர். அவர்கள் போதிய கல்வி அறிவு பெற்றிருந்ததால் தங்கள் மக்கள் கல்வியில் விசேஷ அக்கரை கொண்டு ஒவ்வொரு மக்களையும் ஒரு ஜப்பான் வீரராகச் செய்தார்கள். ஜப்பானும் அதி தீவிரத்தில் முன்னேறியது. ஆனால், நம் இந்திய நாடோ, எத்தனையோ நூற்றுக்கணக்கான வருடங்களாய், அடிமை வாழ்வில் அமிழ்ந்தி, அல்லற்படுகிறது. அதன் அடிமை விலங்கைத் தகர்த் தெரிய வீரசிங்கங்களைக் காணோம். வீர சிகாமணிகள் எங்கிருந்து தோன்றுவார்கள்! அவ்வித சிங்கங்களை உற்பத்தி செய்பவர் பெண்களன்றோ! பெண்கள் கல்வியின்றி, அடுப்பூதி, வெறும் இயந்திரங்களாக விளங்கும் போது மக்களை எவ்வாறு வீரர்களாக்க முடியுமென்று கேட்கிறேன். இந்தியா அடிமை வாழ்க்கையை அடியோடு ஒழிக்க வேண்டுமே யானால் இந்திய பெண்மணிகளுக்குப் போதிய கல்வி அறிவு ஊட்ட முற்படவேண்டியது அவசியமாகும். பெண்கள் முன்னேற்றமே ஒரு நாட்டின் விடுதலை யாகும். அவ்வித முன்னேற்ற மில்லாத நாடு விடுதலையடைந்தும் அடிமை நாடாகவே இருக்கு மென்பது முக்காலும் மறுக்க முடியாத உண்மை.

### கல்வியும் சுதந்திரமும்.

பெண்கள் கல்வியென்றால் மேனாட்டுக் கல்வியா? மேனாட்டுப் பெண்களைப்போல் இந்தியப் பெண்களும் பகிரங்கமாக பாழும் நாகரீகத்தைப் பின்பற்ற வேண்டுமா என்ற கேள்வி பிறக்கலாம். பெண்கல்வி வேறு, நாகரிகம் வேறு. கல்வி படியாப் பிறக்கும் பெண்கள் சுதந்திர உணர்ச்சி வேறு. கல்விக்கும், நாகரீகத்துக்கும், சுதந்திரத்துக்கும் எவ்வித சம்மந்தமும் கிடையா தென்றே சொல்லலாம். மக்கள் அறிவு வளர்ச்சிக்கே கல்வி ஏற்பட்டது. அறிவுக்கு வேண்டிய கல்வியே பெண்களுக்கு அவசியமாகும். பி. ஏ, எம். ஏ. பட்ட தாரிகளாக வேண்டுமென்ற அவசிய மில்லை. பெண்கள் முன்னேற்றத்திற்கும், அறிவு வளர்ச்சிக்கும் நமது தாய் நாட்டுக் கல்வி எள்வளவோ இருக்கிறது. அதில் அடங்கியிருக்கும் ஞானத்துக்கும், அற்புதங்களுக்கும் அளவில்லை. பெண்கள் பெரிய பட்டங்கள் பெற்று உத்தியோகம் வகிக்க வேண்டிய அவசியமில்லை. பெண்கள் ராணிகளாக விளங்கும் இல்லற தர்மத்தை நடத்த நல்ல அறிவோடு கூடிய கல்வி பெண்மணிகளுக்கிருந்தால் போதும். கலாசாலைகளிலிருந்து வருடந்தோறும் வெளியாகும் ஆயிரக்கணக்கான பி. ஏ., எம். ஏ. முதலிய பட்டங்கள் பெற்றவர்கள் உத்தியோகமின்றி 20 ரூபாய் சம்பளத்துக்கும் குட்டிக்கரணம் போடும் இக்



காலத்தில், பெண்மணிகளும், பட்டங்களைப் பெற்று உத்தியோகந் தேடுவது முறையல்ல. அது உலகத்தை இன்னமும் பாழாக்குமென்பதற்குச் சந்தேகமில்லை. ஆகவே பெண்களுக்கு உத்தியோகக் கல்வி அவசியமில்லை. அறிவு வளர்ச்சிக்கும், உலக ஞானத்தைக் கண்டறிவதற்கும் போதுமான கல்வி இருந்தால் போதுமானது. இதைவிட உயர்ந்த கல்வி கற்பதால் தோஷம் ஏற்பட்டுவிடு மென்று கூற முற்படவில்லை. உயர்ந்த கல்வி நலமே. ஆனால் அக்கல்வி காரணமாய் அகங்காரம் தலைக் கேறி, மேனாட்டுப் பெண்களைப் போல் தலைவிறி கோலமாய், நெறிதவறி நடக்கக் கூடாதென்பதே எனது வேண்டுகோள் "கல்வி கரையில, கற்பவர் நாள் சில" என்றபடி கற்றது கை மண் அளவுதான். ஆகவே கல்வி காரணமாய் அகந்தை கொள்ளுவது அடாது. அன்றி கல்வி கற்றுவிட்டதால் பெண்களும், ஆடவரைப்போல் சர்வ சுதந்திரம் பெற்று விட வேண்டு மென்பதும் கல்வியின் அர்த்தமல்ல. மேனாடுகளில் பெண்களும் ஆண்களைப் போல் சர்வ சுதந்திரமும் பெறவேண்டுமெனக் கிளர்ச்சி செய்து ஆண்களுக்குரிய உரிமைகளெல்லாம் பெற்று விளங்குகிறார்கள். இதனால் ஏற்படும் கெடுதிகளை நாம் இப்பொழுதே கண் கூடாகக் கண்டு வருகிறோம். இன்னம் கொஞ்சக் காலத்தில் இவர்கள் கதி எக்கதிக் குள்ளாகு மென்பதை இப்பொழுதே ஜோசியம் கூறிவிடலாம், ஐரோப்பாவின் கதி அதோ கதி யாகுமென்பதற்குச் சந்தேகமில்லை. அங்கு பெண்கள் சுதந்திரம் தலை கால் தெரியாமல் திண்டாடுகிறது. அவர்கள் சுதந்திரப் போக்கை நமது பெண்களும் பின்பற்ற வேண்டுமென்பதல்ல. இதனால் பெண்களுக்குச் சுதந்திரம் கூடாதென்று நான் வாதாடுவதாக நினைத்து விடக்கூடாது. பெண்களுக்கு நியாயமான சுதந்திரம் வேண்டு மென்பதற்குச் சந்தேகமில்லை. பெண்கள் ஆடவர்களுக்கு அடிமைப்பட்டு, வீட்டினுள்ளே சதா அடைப்பட்டுக் கிடக்க வேண்டு மென்பதல்ல. வீட்டுக்கு அரசி பெண்மணிகள். வீட்டுக்கு அரசனாகிய ஆடவனுக்கு பெண் ஒரு மந்திரியாகவும், வலது கை போன்றும் விளங்க வேண்டியது அவசியம். இதனால் ஆடவன் சொல்படி யெல்லாம் பெண் ஆடவேண்டு மென்பதும் அர்த்தமல்ல. ஆடவனும் பெண் சொன்னபடி யெல்லாம் நடக்கவேண்டுமென்றும் எண்ணக்கூடாது. நன்மையான விஷயங்களில் ஆண் பெண் இரு பாலரும் ஒருவருக்கொருவர் சமரசமாக விட்டுக்கொடுத்து இல்லற தர்மத்தை நடத்துவதே சிறந்தது. இத்தர்மம் குறைவின்றி நடப்பதற்குப் பெண்களுக்குக் கல்வி அத்தியாவசிய மென்பதை இங்கு வற்புறுத்திக் கூறவேண்டியது அவசிய மில்லை. ஏனெனில் கல்வி வாசனை யறியாதவளிடம் ஒரு ஆண் எவ்வாறு நம்பி தன் குடும்ப நிர்வாகப் பொறுப்பை ஒப்புவிக்க முடியும்? அன்றி அறிவற்ற ஒரு பெண்ணை ஆடவன் தனக்குச் சமமாகத் தான் கருதமுடியுமா வென்று கேட்கிறேன். ஆகவே சகல விஷயங்களையும் ஊன்றிக் கவனித்தால் பெண்களுக்குக் கல்வி எவ்வளவு அத்யாவசிய மென்பது நன்கு விளங்கும். இந்திய முன்னேற்றத்திலும், சுதந்திரத்திலும் ஆர்வம் கொண்டுழைக்கும் பெரியார் இந்தியப் பெண்மணிகளுக்கு சரியான கல்வி கொடுக்கும் விஷயத்தில் போதிய கவனஞ் செலுத்த வேண்டியது அத்யாவசியமாகும். பெண்கள் விடுதலையின்றேல், தேச விடுதலையில்லை. தேச விடுதலைக்குப் பெண்கள் கல்வியே சிறந்த வழியாகும்.

---

வானவில் ஏற்படுவதேன்?:—வான வில்லானது பல நிறப் பட்ட வளையங்கள் போன்று பன்னிறங்களுடன் வானத்தில் பார்ப்போர் மனதைக் கவரும்படி தோன்றுவது எப்பொழுதெனில் சூரிய வெளிச்சம் அல்லது சந்திரவெளிச்சம், பொழிந்துகொண்டிருக்கும் மழைத்துளிகளின் மேல் விழும் பொழுது ஏற்படுகின்றது. அது ஏற்படும் விதம் எப்படி யெனில் தனித்து நிற்குமோர் நீர்த் துளியை ஊடுருவிப் பாய்ந்து பல வர்ணங்களுடன் பிரிந்து சென்று, அத்துளியினுள்ளேயே பிரதி பலிக்கப்பட்டு மறுபடியும் திறந்த வெளியில் பாய்கிறது. அந்த வெளிச்சம் வக்கரித்து வரும் வழியாகப் பார்த்தால் ஸப்த வர்ணக் காட்சி ஒன்று காணும். மேகத்திலுள்ள பல நீர்த்துளிகள் மீது எதிர்புறத்திலுள்ள சூரியனின் கிரணங்கள் வீழ்கையில் பார்த்தோர்ஸப்த வர்ணக் காட்சியாகிய வானவில் தோன்றும். காலையில் மேற் புறத்திலும் மாலை வேளைகளில் கீழ்ப்புறத்திலும் தோன்றுமவ்வில்.

# ஆன்றோர்களின் அரிய மொழிகள்

கடவுளிடத்தில் பயபக்தியோடு இருக்கப் பழகுவதுதான், ஞானமார்க்கத்திற்கு திறவுகோல். அவ்விதம் கடவுளிடத்தில் பயபக்தியுடையவர்கள், எக்காலத்தும் குற்றம் செய்யார்கள். ஆனால் இக்காலத்தில் மாந்தர்களில் அநேகர் கடவுளிடத்தில் பயபக்தி வைப்பது கிடையாது. அதனால்தான் அஞ்ஞானிகள் இக்காலத்தில் அதிகமாக இருக்கின்றார்கள்.

இன்னும் கூட அநேக கிராமாந்திரங்களில் அநேக மக்கள் எளியவாழ்க்கையைக் கடைப்பிடித்து உண்மை நெறியில் வாழ்கின்றார்கள், அவர்கள், ஏமாற்றுதல், மோசம் செய்தல் முதலிய துர்க்குணங்களை இன்னும் அறியார்கள். ஒருசமயம் இக்கிராமங்களுக்கு தற்கால நவநாகரீகம், தலைகாட்டவில்லை போலும்.

தற்காலத்து ஒழுங்கற்ற கல்வியும், சீர்கெட்ட நாகரீகமும் ஒன்றுமறியாத மக்களை முதல் தரமான அயோக்கியர்களாக மாற்றுகின்றது.

வேதாந்தம், நிர்விகல்பசமாதி, யோகசாஸ்திரம் முதலியவைகளைப் பற்றிப்பேசும் அகங்காரம் பிடித்த, வேதாந்தியைக் காட்டிலும், ஒரு சிறு கிராமத்தில் பரம்பொருளின் திருநாமத்தை காலை மாலை ஜபித்துவாழும் ஏதுமறியாத ஒரு எளிய உழவன் ஆயிரமடங்கு சிரேஷ்டமானவன்.

உலக நடையில் வாழும் ஒரு மனிதன் தன்னைப்பற்றி பிறர் புகழ்ந்தால் சந்தோஷமடைகிறான். அவனது குற்றங்களை எடுத்துரைத்தால் கோபித்துக்கொள்ளுகின்றான். யாராவது ஒருவர் மற்றொருவரைப் புகழ்த்திப் பேசினால் மனம்பொறுப்பதில்லை. இவைகளெல்லாம் அகங்காரத்தின சேஷ்டைகள்.

உலகத்தில் அறிவாளி எவனென்றால் மோக்ஷ சாம்ராஜ்யத்திற்குச் செல்லவழி தேடுபவனே, மற்றெல்லோரும் அறிவற்றவர்களே.

உலகத்தில் நெறிதவறாது, நல்லொழுக்கத்துடன் நடந்தவனது ஆத்மாவானது, இருக்கும் பொழுதும் இறக்கும்பொழுதும் சாந்தமடையும்.

கடவுளிடத்தில் உண்மை பக்தியுடைய ஒரு அடியார் உலகத்தையாளும் வேந்தனைக்காட்டிலும் சிறந்தவன். அவனிடத்திலேதான் கடவுள் கிருபை கொள்வார்.

உண்மையிலேயே நீ உலக சிரேஷ்டனென்றும், சுத்தவீரனென்றும், தத்துவஞானியென்றும், ஹரிச்சந்திரனென்றும், பல்லோராலும் புகழ்பெற்றாலுங்கூட, அகங்காரத்தை அறவே அழித்து, ஒழுங்காகவும், பணிவாகவும், அடக்கமாகவும் நடந்து கொள்ளவேண்டும்.

உன்னைப்பற்றி நீ அதிகமாக வாசித்தவனாகவும், சாமர்த்தியவானாகவும், தனக்கு ஒருவரும் நிகரில்லையென்றும், அகங்காரம் கொள்ளாதே அது வெறும் மாயை.

எவரையும் தாழ்த்திப் பேசாதே, பிறர் மனம் நோக வார்த்தைகளை விடாதே. பிறர் சொல்லும் வார்த்தைகளுக்கு மரியாதையுடன் செவிகொடுத்து கேள். பிறரைப் புகழ்த்திப் பேசு, உன்னுடைய குற்றங்களை பகிரங்கப்படுத்தி திருத்திக்கொள்.

உன்னுடைய சாமர்த்தியத்தை பிரிடத்தில் காட்டாதே. பெயர்வரவேண்டும், புகழ்வரவேண்டுமென்றும் அலையாதே. உண்மையில் புகழும், பேரும், நிலையானவையல்ல, அவைகளைத் துரும்புக்குச் சமானமாக மதித்துவிடு. இதுதான் சுகவாழ்க்கைக்கு வழி.

உன்னுடைய எண்ணங்களை யோசித்துப் பார். தனியே உட்காரு, உன்னுடைய இயற்கை நிலையையும் மனதையும் சோதி. உன்னிடத்திலுள்ள குற்றங்களை ஒழிக்கவழி தேடு.

இவ்வுலகத்தைப்பார்க்கிலும் மிடத்து நான் ஒரு துரும்பு என்று எண்ணு. உன்னுடைய அகங்காரத்தை சீக்கிரத்தில் விடுதலை செய்யலாம். எப்பொழுதும் தாழ உட்கார பிரயாசைப்படு. நவீன நாகரீக நாற்காலிகளையும், சோபாக்களையும், மெத்தை திண்டுகளையும் தேடாதே. "என் கடன் பணிசெய்து கிடப்பதே" என்ற ஆன்றோரின் முதுமொழியின்படி எப்பொழுதும், பிறருக்கு உதவிசெய்ய தயாராகயிரு, பிறருடைய நற்குணங்களைப்பற்றிப் பேசு. பிறருடைய குற்றங்களை வெளியிடாதே.

ஒரு மனிதன் உன்னைப்பற்றி குறைகூறி பேசுவானேயானால், அவனை மன்னித்துவிடு. அவனது அறியாமையைப் பற்றி வருந்து, அவனை ஆசீர்வதித்து, அன்புகொண்டு அவனுக்கு நன்மை செய்வதிலேயே நாட்டமாயிரு, அவன்செய்யும் குற்றங்களைப் பொறுத்துக் கொள். இவ்விதம் செய்வாயாகில் உன்னுடைய ஆத்ம சக்தி விசாலப்படும்.

# ஆயுர்வேதத்தின் பழமை

முதன் முதலில் மாந்தர் யாவரும் காய் கனிகளையே தின்று ஜீவித்து வந்தனர். ஆகவே, அவர்கட்கு ஒவ்வொரு செடி, கொடி, மரம் முதலியவற்றின் குண குணங்கள் நன்றாகத் தெரிந்திருக்க வேண்டியது அத்யாவசியகமாயிருந்தது. இன்னின்ன காய்கனிகள் உண்ணத் தகுந்தவை இன்னின்னவைகள் உட்கொள்ளத் தகாதவை என்று அறிந்து, அதன்படியே நடந்து வந்தார்கள். தாவரவர்க்கத்தின் ஒவ்வோர் உறுப்பின் தன்மையையும், பயனையும் அதன் காரண காரியங்களையும் சரிவர அவர்கள் உணர்ந்திருந்தார்கள். அவ்விதம் அறிந்ததன் பின் அவற்றிற்குத் தகுந்தபடி பெயருமிட்டார்கள். உதாரணமாக தொட்டாற் சுணங்கி என்பது சின்னஞ் சிறிய செடிக்குப் பெயர், அந்தச் செடியைத் தொட்டால் உடனே சுணங்கிப்போம். கிரீஸ் தேசத்தவர்கள் ஒரு புஷ்பத்திற்கு நார்ஸிஸஸ் என்று பெயரிட்டார்கள். அந்தப் பெயர் முதலில் ஓர் அரசிளங்குமாரனின் பெயர். தன்னுடைய நிழல் நீரிலிருப்பதைக் கண்டு அவ்வுருவத்தை யடையப் பெரிதும் வருந்தி மனம் நைந்து உயிர்விட்டான். ஓடைகளில் புஷ்பித்திருக்கும் புஷ்பத்திற்கு அவனது பெயரையே இட்டனர். பிரஜைகள் தாவரவர்க்கத்திற்கு இவ்வாறு பெயரிட்டு வந்திருக்கின்றனர்.

புராதன ஹிந்துக்கள் தாவர சாஸ்திரத்தில் மிகவும் தேர்ந்தவர்கள். ஒவ்வொன்றின் தாரதம்மியங்களையும், குண குணங்களையும், பலாபலன்களையும், இது சஞ்சீவிக் கொப்பானது, இது விஷத்தன்மையானது என்று எல்லாரும் நுட்பமாகவும் சாங்கோபாங்கமாகவும் தெரிந்திருந்தார்கள். மற்றைய சாஸ்திரங்கள் விருத்தியடைந்து வந்ததைப்போலவே தாவர சாஸ்திரமும் இந்தியாவில் வெகு தீவிரமாக விருத்தியடைந்து வந்தது. தாவர சம்பந்தமான நூல்கள் வெளிவந்தன. அவற்றில் மிகவும் கியாதி பெற்றவை சாரகரது தாவரநூலும் ஸுஸ்ருதரின் நூலுந்தான். அவர்கள் இயற்கை வஸ்துக்களைக் காண்பதில் மிகவும் ஊக்கமும் ஆர்வமும் கொண்டிருந்தார்கள்.

ஏனெனில் இயற்கைப்பொருளைக் காண்பதுவே அவைகளைச் சிருஷ்டித்த கடவுளைக் காண்பதற்கு ஒப்பாகும் என்றெண்ணி அவ்வாறே நடந்துவந்தார்கள். பாசி முதல் பெரிய விருக்ஷம் வரையிலுள்ள எல்லா தாவரப் பொருள்களையும் மிகவும் கருத்துடன் ஊன்றி ஆராய்ந்து பார்த்து வந்தார்கள். தாவர பூகோள சாஸ்திரத்தை முதன் முதலில் எழுதிய சமர்த்தர் ஸுஸ்ருதர் தான் அந்த நூலில் ஒவ்வொரு தாவரப் பொருள் எவ்விடத்தில் அகப்படும் என்ற விஷயங்களை விபரமாகக் கூறியிருக்கின்றார்.

ஸுஸ்ருதர் மூலிகைகளையும் செடி கொடிகளையும் பின் வரும் விதம் பிரித்திருக்கின்றார்.

1. வேர்கள்.
2. வேரின் பட்டைகள்.
3. பெரிய மரங்களின் பட்டைகள்.
4. ஒரு விதமான வாஸனையுள்ள விருக்ஷங்கள்.
5. இலைகள்.
6. புஷ்பங்கள்.
7. பழங்கள்.
8. விதைகள்.
9. காரமுள்ள தாவரப் பொருள்.
10. பால்தரும் மரங்கள்.
11. பிசின் தரும் மரங்கள்.

மேற்கூறப்பட்ட பாகுபாடுகள் எல்லாம் கல்பஸ்தானம் என்னும் கிரந்தத்தில் விரிவாகக் காணலாம். ஸுஸ்ருதரின் தாவர சாஸ்திரம் கிரேக்கர்களுக்குப் பெரிதும் பயன்பட்டு வந்தது என்பது சில பழைய பிரதிகளிலிருந்தும் காணக்கிடைக்கின்றது. அவர்கள் நமது சாஸ்திரங்களைப் படித்து ஞானம் பெற்றே தேர்ச்சியடைந்தார்கள். நிபுணர்களும் மேதாவிகளுமாகி விட்டனர்.

"மருந்தின் சரித்திரம்" என்ற நூலில் டாக்டர் வைஸ் என்னும் வைத்திய சிகாமணி "ஹிந்துக்கள் முதன் முதலில் மருந்துகளைக் கண்டு பிடித்து கிரந்தங்கள் வெளியிட்டிருப்பதற்காக நாம் பெரிதும் கடமைப் பட்டிருக்கின்றோம்" என்றும், [illegible] ஐரோப்

19034

பாவின் மருந்தின் தகப்பனார் என்ற பிரக்யாதியான பெயர் பெற்ற ஹிப்போகிராடிஸ் என்பவர் ஹிந்து சாஸ்திரத்தைத்தான் முதலில் பயின்றவர்.

இருபத்திரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்னர் இந்தியாவின் மீது படை எடுத்து வந்த மஹா அலெக்ஜாந்தரது பாசறையில் ஹிந்து வைத்திய சிகாமணிகளை வைத்திருந்தார். கிரேக்க வைத்தியர்கள் சிகிச்சை செய்யத் தவறினால் இந்து வைத்திய சிகாமணிகள் சிகிச்சை செய்து வந்தார்கள். கிரேக்க வைத்திய சிகாமணிகள் சிகிச்சை செய்து வந்தார்கள். கிரேக்க வைத்திய சிகாமணிகள் பாம்புக் கடிக்குத் தகுந்த மருந்து கொடுக்கத் தெரியாதவர்களென்றும், ஹிந்து வைத்திய சிகாமணிகள் அந்தத் துர்ப்பாக்கியம் பெற்றவர்களையும், சிகிச்சை செய்ய வல்லமை பெற்றவர்கள் என்றும் ஏரியன் குறிப்பிட்டிருக்கிறார். பதினொன்றும் நூற்றாண்டுகட்கு முன்னர் கலீபாஹாரென் அல் ரஸ்சிட் என்பவர் தமது ஆஸ்தான வைத்தியர்களாக மூன், காசேல் என்னும் இரண்டு இந்திய வைத்திய சிகாமணிகளை ஆதரித்து வந்ததாக அராபிய தேசத்து சரித்திரப்பிரதிகளில் காணப்படுகின்றது. ஆயுர்வேதத்தின் பழமையும், அதனது வெற்றியும், பயனும் எத்தன்மைத்து என்பது இவைகளால் தெற்றென விளங்குகின்றதல்லவா? ஆயுர்வேத சாஸ்திரம் ஒருவனது ஆயுளை விருத்தி செய்து பலத்தைக் கொடுப்பதில் இணையற்றது. ஈடும் எடுப்பும் இல்லாதது. அஃதொன்றே ஆயுராரோக்கியத்தை அளிக்கவல்லது. பிற மதத்தினர்களாலும், பிற தேயத்தவர்களாலும் கையாண்டு வந்ததே அதனது உயர்வுக்கும் போதுமான சான்று. அதன் சட்ட திட்டங்கள் மிகவும் கண்டிப்பானவை அவைகளைச் சரிவரக் கையாண்டு வந்தால் உண்மையிலேயே வியாதிகளினின்றும் பிணிகளினின்றும் அவஸ்தைகளினின்றும் மனித வர்க்கத்தவரைக் காப்பாற்றலாம். பிணிவாயினின்றும் வாஸ்தவத்தில் தப்பவைக்கலாம். ஆயுர்வேத சாஸ்திரத்தைக் கண்டு பிடித்த மேதாவிகள், விற்பன்னர்கள் அனைவரும் தற்கால நாகரிகத்தையும் புதிய புதிய உண்மைகள் கண்டு பிடிப்பதையும் முன்னமேயே தெரிந்து வெளியிட்டிருக்கின்றார்கள். இது சமயம் புதிதாக வெளியிடப்படும் விஷயங்கள் யாவும் அந்த சாஸ்திரத்தில் அப்பொழுதே கண்டு பிடிக்கப்பட்டு இடம் பெற்றிருக்கின்றன. மேனாடுகள் முழுவதையும் ஒரு புரட்டு புரட்டி அவஸ்தைக்குள்ளாக்கி, பல்லுயிரைக் கவர்ந்த 'கிருமி' தொத்து வியாதி நம்மவர்கட்குத் தெரியாததல்ல. ருத்ரம் என்ற வேதத்தில் நமது ஆன்றோர், ஆகாயத்தின் கண் எத்தனையோ கோடிக் கணக்கான விஷக்கிருமிகள் சஞ்சரிக்கின்றன. அவைகளினின்றும் மனிதன் தன்னைக் காத்துக்கொள்வானாக' என்று கூறிய ஒருவாக்கியம் இருக்கின்றது. இக்கூற்றினால் தற்காலம் கண்டு பிடிக்கப்பட்ட ஓர் விஷயம் மேனாட்டினர் ஒன்றும் அறியாத அறிவிலிகளாக இருக்கின்ற காலத்திலேயே ஹிந்துக்கள் அறிவுச் சுடர் பொருந்தி யிருந்தார்கள் என்பதை அங்கை நெல்லியென விளக்கும். தொத்து வியாதிகளைப் பரவ வொட்டாமல் தடுக்கும் வழிகளும் முறைகளும் மேனாட்டினர் கொஞ்ச காலத்திற்கு முன்புதான் சிரமப்பட்டு கண்டு பிடித்திருக்கின்றனர். அம்முறைகளும் வழிகளும் ஹிந்துக்களுக்குப் பல்லாயிர வருடங்களுக்கு முன்னரே தெரிந்த உண்மை. பண்டைக்காலத்தில் ரணவைத்திய சிகிச்சை வெகு தீவிரமாகவும், நல்ல பலன்களைக் கொடுக்கக்கூடிய விதமாகவும், நடைபெற்று வந்தது. வெகு சாமார்த்தியமாய் நோயாளியின் நோயறிந்து இன் சொல்லால் உபசரித்து ரண சிகிச்சை செய்து வந்திருக்கின்றார்கள். குடல், அடி வயறு முதலிய நுட்பமான பாகங்களையும் வெகு ஆச்சரிய கரமாகவும் அபாயமின்றியும் அறுத்து சிகிச்சை செய்திருக்கின்றனர். நமது முன்னோர்கள் வெகு சாதாரண முறைகளையே கைக்கொண்டு வெற்றி பெற்றிருக்கின்றார்கள். அடி வயற்றில் ஒரு குறித்த இடத்தைத் திறக்க வேண்டியிருந்தபோது ஒரு சிகப்பு எறும்பை எடுத்து கடிக்கவைத்து அதனது உடம்பை மட்டும் கிள்ளி எறிந்துவிடுவார்கள். அதனது தலைமட்டும் கடித்த விடத்தையே கவ்விக் கொண்டிருக்கும். இதுபோன்ற பல நுட்பமான ரணவைத்திய சிகிச்சைகள் எண்ணிறந்தன சாமார்த்தியத்துடன் நடந்திருக்கின்றன. ஐரோப்பிய வைத்திய நிபுணர்கள் இந்த ரணவைத்திய சிகிச்சையிலிருந்தேதான் கற்றுக்கொண்டார்கள் என்று கூறினும் பொருந்தும் என்று பிரபொலர் முஜம்தார் வெளியிட்டிருக்கின்றார்.

நமது முன்னோர்கள் வெளியிட்ட ஆயுர்வேதம் மிகப்பழமையானது, மிகவும் பயன்



தரவல்லது என்று சென்ற காலத்தின் சிறப்பைக் குறித்துப் பெருமைப்படுத்தி மார்தட்டிச் சொல்லிக் காலம் போக்குவது வீண். மேனாட்டு வைத்திய முறைகளைவிட ஆயுர்வேத முறைகள் சிறந்தவையா? என்ற கேள்வியை ஒவ்வொருவரும் கேட்டுக்கொள்ளவேண்டும். நமது ஆயுர்வேதத்திலும் சில குறைகள் இருக்கின்றன என்பதையும் ஒத்துக்கொள்ள வேண்டும். ஒரு வியாதிக்குப் பல சிகிச்சா முறைகள் இருப்பது ஒரு பெருங்குறை என்கிறார்கள். ஒரு மருந்து பல வியாதிகளைக் கண்டிக்கும். ஆனால், அதை உபயோகிக்கும் அனுபானங்கள் ஒவ்வொரு வியாதிக்கு வித்தியாசப்படும். இந்த அனுபான ரீதிகளை அறியாதுபோவது யார் மீது குற்றம்? சாஸ்திரத்தின் மீதா அல்லது அதைத் தெரியாத வைத்தியர்கள் மீதா அக்குற்றம் சேரும்? மேனாட்டு வைத்திய முறைகளைக் கொஞ்சம் கூட கையாள மாட்டார்கள் வைதிக வைத்திய சிகாமணிகள். எனிமா, தேஸாஸ் கோப், தேர்மாமீட்டர் என்ற ஆயுதங்களை எப்படி இருக்கும் என்பதை அறியவேமாட்டார்கள். வடிகட்டுவதற்கும், மருந்துகளைப் பொடியாக்குவதற்கும் ஆயுதங்களைத் தேடமாட்டார்கள்.

குருட்டுத்தனமாகப் பெரியோர்கள் ஏற்படுத்தி வைத்தவைகளையே மட்டும் கையாண்டு வருவதை விட்டு விடவேண்டும். காலதேச வர்த்தமானத்தை யொட்டி மேனாட்டு வைத்திய சாஸ்திரத்திலிருந்து கொள்ளவேண்டிய முறைகளைக் கொண்டு, ஆயுர்வேத முறையில் தள்ள வேண்டியதைத் தள்ளி உபயோகப்படுத்தி வரவேண்டும். கொஞ்ச காலமாக ரணவைத்திய சிகிச்சை முறையில் புது புது முறைகள் மேனாட்டிலிருந்து கண்டு பிடிக்கப்பட்டு வருகின்றன. அவைகளையும் நாம் தழுவி பயன் படுத்தி வரவேண்டும். ஆயுர்வேத கலாசாலைகள் (இன்னும் நாளுக்கு நாள் இவைகளின் எண்ணிக்கை விருத்தியாகி வரவேண்டும்)

புதிய புதிய முறைகளையும் மாணவர்களுக்குப் போதிக்க வேண்டும். நோயாளிகளின் நோயின் தன்மையறியாது வெகு அலக்ஷியமாய் வைத்தியஞ் செய்து சொஸ்தப் படுத்துவதற்குப் பதிலாக உயிரை விடச் செய்து வரும் கொடிய மேனாட்டு வைத்திய முறைகளைக் கையாளும் வைத்தியர்களின் எண்ணிக்கை குறையவேண்டும். அவர்களின் எண்ணிக்கை அதிகமாக புது புது விதமான வியாதிகளும் உண்டாகின்றன. ஆயுர்வேத மருந்துகளை ஏராளமாக சாஸ்திர முறைப்படி தயார் செய்து பிரஜைகளுக்கு உதவிவர வைத்திய ரத்ன டி. கோபாலா சார்லு போன்ற விற்பன்னர்கள் பலர் தோன்ற வேண்டும்.

நமது ஆயுர்வேத வைத்திய முறைகள் மிகவும் பழமையானவை. அவைகள் நமக்குப் பல விதங்களில் பயன் பட்டு வருகின்றன. ஒவ்வொரு தேசாபிமானியின் கடமை என்னவெனில் அது தோன்றிய தேயத்தில் அது இறந்து ஒழியாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்பதே. ஆயுர்வேதத்தை ஆதரித்து விருத்திக்குக் கொண்டு வரவேண்டியது ஒவ்வொரு இந்தியரின் கடமை.

திரிபுராந்தகன்.

---

## மனிதன் உடல் மதிப்பு ரூ. 5-10-0

சமீபத்தில் கல்கத்தாவில் நடைபெற்ற 20-வது இந்திய ரசாயன சாஸ்திரக் காங்கிரஸில் தலைமை வகித்துப் பேசுகையில் டாக்டர் நியோகி என்பார் கீழ்க் கண்ட சில ரஸமான விஷயங்களை வெளியிட்டார்:—

"சரியான வயதிலுள்ள ஒரு மனிதனுடைய சரீரத்தில் 7-சோப்புக் கட்டிகளைச் செய்யக் கூடிய அளவு கொழுப்பு இருக்கிறது; ஒரு இரண்டங்குல ஆணியைப் பண்ணக் கூடிய இரும்பு இருக்கிறது; சர்க்கரைத் தொழிற்சாலைகளில் சர்க்கரையை அள்ளிக் கொட்டுவதற்காக உபயோகிக்கப்படும் ஒரு பிரம்மாண்டமான கரண்டியைத் நிரப்பக் கூடிய அளவிற்குச சர்க்கரை இருக்கிறது; 4 அடி நீளத்திற்குச் சுண்ணாம்பு அடிக்கக் கூடிய சுண்ணாம்பு இருக்கிறது. 55 தீப் பெட்டிகளைச் செய்வதற்கான தீப்பாஷாணம் இருக்கிறது; இது தவிர 13 காலன் தண்ணீரும், ஏராளமான கநதகமும், மக்னீஷியம் என்ற ரஸாயனப் பொருளும் இருக்கிறது. இவை அனைத்தும் கொஞ்சங்கூட அழியாமல், சுத்தமாக இருக்குமானால் ஒரு மனிதனின் மதிப்பு 7 ஷில்லிங் 6 பென்ஸாகும்; அதாவது 5 ரூ. 10 அணா. ஆனால் மேற்கூறிய அவ்வளவு சாமான்களையும் அவ்வளவு அளவிற்கு, அவ்வளவு பணத்தைப் போட்டு வாங்கினால் அவற்றைக் கொண்டு ஒரு மனிதனை, ஒரு சித்திரக் குள்ளனைக் கூட நாம் சிருஷ்டிக்க முடியாது.

# குழந்தைகளை வளர்க்கும் முறை

## சிரித்து விளையாடுதலே சிறந்த வழி

உலகம் கஷ்டமான நிலைமையை யனுபவித்துக் கொண்டிருக்கின்றது. இக்கஷ்டம் நிவர்த்தியாக வேண்டுமெனில் இச்சந்ததியிலுள்ள குழந்தைகளை நன்றாக வளர்க்கவேண்டியது அவசியமாகும். பிள்ளைகளின் தேவைகள் எவை என்பதை அறியாமலிருப்பதும், அத்தேவைகளைப் பூர்த்தி செய்யும் முறைகளும், இப்பொழுதேற்பட்டிருக்கும் சங்கடமான நிலைமைக்குக் காரணமாகும்.

பிரிட்டிஷ் தீவுகளில் லக்ஷக்கணக்கான ஜனங்கள் நரம்புத்தளர்ச்சி சம்மந்தமான நோய்களினால் வருந்திக்கொண்டிருக்கின்றனர். இந்நோயாளிகள் பிள்ளைப் பிராயத்திலிருக்கும்பொழுதும் சரியான சிகிச்சை பெறாத நிமித்தமே இப்பொழுது துன்பத்தை யனுபவிக்கும்படியாக நேரிடுகின்றது.

பிள்ளைகளை ஒழுங்காக வளர்ப்பது பெற்றோர்களின் கடமையாகும். தங்களுக்கு ஆனந்தம் விளைவிக்கவே பிள்ளைகள் பிறந்திருப்பதாகப் பெற்றோர்கள் கருதிவிடக்கூடாது. பிள்ளை விளையாட்டுப் பொருளல்ல. அதற்கு மதிப்புக் கொடுக்க வேண்டியது நியாயமாகும்.

### பெற்றோர் அன்பு

பிள்ளைகள் எப்பொழுதும் தங்கள் பெற்றோர்களின் அன்பைப் பெற்றுக் கொள்ள விரும்புகின்றனர். ஆனால் அளவுக்கு மிஞ்சின அன்பு குழந்தைகளிடம் காட்டுவதினால் குழந்தை மகிழ்ந்து விடாது.

பெற்றோர்கள் நேசிக்கின்றார்களா? இல்லையா? என்பதும், அவர்கள் தன்னை விரும்புகின்றார்களா? இல்லையா? என்பதும் குழந்தைக்கு நன்றாகத் தெரியும். இளவயதிலேயே தாய் தந்தையர் தங்கள் முன்னிலையிற் பேசுவதும் செய்வதும் பிள்ளைகள் அறிந்துகொள்ளும்.

நல்ல பெற்றோர்கள் பிள்ளைகள் முன்னிலையில் அவர்களைப் பற்றிய பேச்சுக்கள் பேசமாட்டார்கள். விவேகத்துடன் அல்லது புத்திசாலித்தனத்துடன் தங்கள் அன்பை வெளியிடுவதே நல்ல பெற்றோர்களுக்குரிய குணமாகும்.

எப்பொழுது ஒரு வேலையைக் குழந்தையால் செய்ய முடியுமோ அப்பொழுதே அவ்வேலையைச் செய்யும்படியாக அதை விட்டுவிட வேண்டும். பிள்ளையின் மீது அதிகாரஞ் செலுத்துவதைவிட அதனுடன் நேசமாயிருப்பதே சாலச் சிறந்ததாகும். எப்பருவத்திற்கும் காலத்திற்கும் இம்முறை உசிதமானது. பிள்ளையின் அன்பைப்பெற நாம் தவறிவிட்டால் அதை மீண்டுந் தேடிக் கொள்வது வெகுகஷ்டமாகும்.

### பேசும் முறை

பெற்றோர்கள் பிள்ளைகளுக்குக் கூறும் விஷயத்தைவிட, அவ்விஷயத்தைக் கூறும் முறை மிகமுக்கியமானது. பெற்றோர்களது பேச்சின் தொனியைக் கேட்டு குழந்தைகள் பயப்படலாம்

பிள்ளைகளைப்பற்றிப் பெற்றோர்கள் பெருமையாகப் பேசுவதும் தவறு. பொது இடங்களில் அவர்களைப் பற்றிக் குறைவாகப் பேசுவதும் தவறு. கடினமான தண்டனை பிள்ளைகளுக்குக் கொடுப்பது சரியன்று. இது பிள்ளைகளைக் கெடுத்துவிடும். எப்பொழுதும் பிள்ளை மீது குற்றஞ் சுமத்தி வசையாடுவதும் பிரதிகூலத்தை விளைவிக்கும். பிள்ளைகளைப் பொறுத்த மட்டில் பெருந்தன்மையாகவும் பக்ஷமாகவும் நடந்து கொள்ளவேண்டும். பிள்ளை சம்பந்தமாக உடனே நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டியது அவசியமெனில், அச்செயல் பெற்றோருக்கும் பிள்ளைக்கு மிடையில் பிணக்கை யுண்டுபண்ணக் கூடாததாயிருக்க வேண்டும். நடவடிக்கையினால் தனக்கு நன்மை



விளையுமென்பதைப் பிள்ளை உணரும்படியாகச் செய்யவேண்டும்.

### நற்குணம் உருவாக வேண்டும்

பரீக்ஷையினாலும் அனுபவத்தினாலும் மனிதனுடைய குணம் உருவாகின்றது. பிள்ளைகள் புதிதான காரியங்களைச் செய்ய அனுமதிக்கப்படவேண்டும். அதில் குற்றங் குறைகளிருந்தால் பிள்ளைகளைத் தண்டிக்கக்கூடாது. பிழை செய்வதினின்றும் பின்னர் குழந்தைகள் தவறில்லாது சரியான வழியில் காரியங்களைச் செய்ய அனுபவமேற்படும்.

ஒழுங்கு முறைப்படி நடந்து கொள்வதே சுதந்தரமாகும். எப்பொழுதும் குழந்தைகள் மீது அதிகாரத்தைச் செலுத்துவது சரியன்று. எப்பொழுதும் தாங்கள் குறிப்பிடும் வழிப்பிரகாரமே நடக்கவேண்டுமெனப் பிள்ளைகளைப் பெற்றோர்கள் துன்புறுத்துவது முறையல்ல. இதனால் பிள்ளைகளுக்கு ஆலோசனை செய்யும் அல்லது யோசனை செய்யும் சக்தி குறைந்துவிடும்.

குழந்தை ஏன் சில விஷயங்களில் கீழ்ப்படிந்து நடக்கின்றதென்பதையும் ஏன் வேறு சில விஷயங்களில் கீழ்ப்படிந்து நடக்கின்றதில்லையென்பதையும் பெற்றோர்கள் சிந்திக்க வேண்டும். ஒருவேளை பெற்றோர்கள் கூறும் புத்திமதிகள் சிறந்ததா அல்லது தகுந்ததா என்பதைப் பிள்ளைகள் ஆராய ஆரம்பித்திருக்கலாம். ஒரு வேளை பயத்தினால் கீழ்ப்படிந்து நடக்கலாம்.

பிள்ளைகள் பயத்தினால் அல்லது மிரட்டலினால் கீழ்ப்படியும்படியாகச் செய்யக்கூடாது. சில சமயம் ஒரு குழந்தையை ஒரு காரியத்தைச் செய்யச் சொல்வதைவிட, அதைச் செய்யாமலிக்கும்படியாக விட்டு விடுவது பயனளிக்கும். ஆனால் நாம் என்னமனோபாவத்துடன் பிள்ளைகளுக்கு உத்திரவிடுகின்றோமோ அம்மனோபாவத்தை யனுசரித்தே குழந்தைகள் நடந்துகொள்ளும்.

### பிள்ளைகளுடன் சிரிக்கவேண்டும்

பெற்றோர்கள் பிள்ளைகளுடன் சேர்ந்து சிரிக்க வேண்டும். அவர்களைப் பரிகசிக்கக் கூடாது.

பெற்றோர்கள் மத்தியில் பிணக்கு ஏற்பட்டிருந்தால் அதைக் குழந்தை எளிதில் அறிந்து கொண்டுவிடும். குழந்தைகளுக்குப் பயங்காட்டக்கூடாது. பயங்காட்டினால் அவர்கள் தங்கள் வாழ்நாள் முழுவதும் பயங்கொள்ளிகளாகவே யிருப்பர். பிள்ளைகள் தங்களுக்குத் தெரியாப் பொருட்களினிடத்துப் பயமடைவர்.

இனி பிள்ளைகள் எதையாவது கண்டுபயந்தால் பெற்றோர்கள் அப்பயத்தை யொழிக்க வேண்டும். பிள்ளை கண்டு பயப்படும் பொருள் உண்மையில் கெடுதியை விளைவிக்கக் கூடியதல்லவென்பதைக் குழந்தைக்கு விளக்கி, அது பயப்படாமலிருக்கும்படியாக உற்சாக மூட்ட வேண்டும். இது குழந்தையின் மனோ தைரியத்தை வளர்க்கும்.

பெற்றோர்கள் பிள்ளைகள் தங்களுக்குப் பயந்து நடக்கும்படியாக வளர்த்தால் பிற்காலத்தில் அவர்களின் நேசபாரத்தைப் பெறுவது அருமை. பிள்ளைப் பிராயத்தில் வேரூன்றும் வாஞ்சை நீண்டநாள் நிலை நிற்கும்.

பிள்ளைகள் கேட்கும் கேள்விகளுக்குப் பெற்றோர்கள் விரைவில் பதிலளித்துவிட வேண்டும். இதை ஒத்திவைக்கக் கூடாது. உண்மையுரைக்க வேண்டியது அவசியமாகும். இல்லையேல் வெளியே விசாரணை செய்து பெற்றோர்கள் கூறியது பொய்யென்பதைப் பிள்ளையுணர்ந்தால் அதற்கு அதிருப்தி யேற்படும். இதனால் பிள்ளைகள் மனம் நோகும்படியாக நேரிடும்.

# மஹம்மாரியும் அதைத் தடுக்கும் விதமும்.

டாக்டர் எம். அப்துல்லா, எல். எம். எஸ்., (டெக்கான்), எல். ஸி., பி. எஸ். (பம்பாய்.)

முனிசிபல் ஆஸ்பத்திரி, வாணியம்பாடி.

மஹம்மாரியானது ஒரு மஹா கொடுமையான தொத்து வியாதி. ஆரம்பத்தில் இது எலிகளிடம் காணப்படும் வியாதி. கண்ணுக்குத் தெரியாமல் பூதக்கண்ணாடியால் மட்டும் பார்க்கக்கூடிய ஒரு விஷக் கிருமியால் இது உண்டாகக்கூடியது. மஹம்மாரியின் விஷக்கிருமியானது ஒரு எலியினிடமிருந்து மற்றோர் எலிக்கும், ஒரு எலியினிடமிருந்து மனிதனுக்கும் எலித் தெள்ளுப்பூச்சியின் மூலமாய்ப் பரவுகிறது. எலித் தெள்ளுப்பூச்சியானவை எலிகளின் தேகத்தின்மேல் வசிக்கும் சிறு பூச்சிகள், அவைகளுக்கு ஆகாரம் இரத்தமே. இல்லாவிட்டால் ஒரு நொடியில் சாகும்.

மஹம்மாரி விஷக்கிருமியானது ரூபத்தில் சிறியதாயிருந்தபோதிலும், உள்ளே நுழையும்படியான சக்தி அதற்கு அதிகம் உண்டு. அவை தேகத்திலுள்ளே பிரவேசித்தானவுடன், தேகத்திலுள்ள ரஸாயினிகள் வழியாய்ச் சென்று, அருகிலுள்ள ரஸாயினிகளின் கோளங்களில் தங்கி, அங்கே விருத்தியாகி, மஹம்மாரிக்கட்டியாகக் கிளம்புகிறது. நியூமோனிக் ப்ளேக் ஆகவிருந்தால், அந்த வகை மஹம்மாரியால் வருந்தும் நோயாளிகளுக்கு சிஷ்ருஷை செய்யப்பட்ட மனிதன் நேராக அக்கிருமிகளை உட்கொள்ளுவதினால் உண்டாவது. நோயாளியின் கோழையில் கோடிக்கணக்கான மஹம்மாரி விஷக்கிருமிகள் இருக்கின்றன. சில சமயங்களில் மஹம்மாரி விஷக்கிருமியானது ரஸாயனக் குழாய்கள் வழியாய்ச் சென்று, இரத்த ஓட்டத்தில் கலந்து, "செப்டி கேமிக் ப்ளேக்" என்றும் ஒரு விதமான ப்ளேக் உண்டாகிறது. இது எப்போதும் மரணத்தையே விளைவிக்கக் கூடியது. 'நியூமோனிக் ப்ளேக்' சாதாரண 'நியூமோனியா' ஜுரமாக ஆரம்பிக்கிறது. ஆனால், உஷ்ணக்கிரம் மிகவும் அதிகமாகவிருக்கிறது. கோழையில் இரத்தம் நிரம்ப வருகிறது. ஆனால், இந்தவகை ப்ளேக் இந்தியாவில் அசாதாரணம். வடக்கே சிலவிடங்களில்தான் இது காண்கிறது. மற்ற மூன்று வகை ப்ளேக் ஆம்புலென்ஸ்', 'பெஸ்டிஸ் மைனர்.'

மஹம்மாரி பரவும் விதம்:—முதல் முதல் எலிக்கு மஹம்மாரி கண்டு அது சாகிறது. அதன் மேலுள்ள தெள்ளுப்பூச்சிகள் இதுகாறும் அதன் இரத்தத்தைக் குடித்து ஜீவித்துக்கொண்டிருந்தன. இவை அதைவிட்டு அருகில் இருக்கும் ஜீவன்கள்மேல் தங்கி அதன் இரத்தத்தை ஆதாரமாகக் கொள்கின்றன. அருகிலுள்ள ஜீவன்கள் சாதாரணமாய் எலிகளாகவே இருக்கும். சில சமயங்களில் மனிதர்களும் இருப்பார்கள். மஹம்மாரி இவ்வாறு மனிதர்களைத் தாக்க ஆரம்பிக்கிறது. மஹம்மாரி பரவுவதற்கு எலியே காரணம். எலிகள் இராவிட்டால் எலித் தெள்ளுப்பூச்சிகள் இரா. அவை இராவிடில் மஹம்மாரி வாராது.

எலிகள் மிகவும் சாமர்த்தியமும், சுறுசுறுப்புமுள்ள பிராணிகள். அவை தானியங்களைக்கொண்டு ஜீவிக்கின்றன. ஆனால், நல்ல ஜலத்தையே குடிக்கின்றன. ஆனால், வீட்டில் இருட்டாயும் அசுத்தமாயுமுள்ள மூலை முடுக்குகளிலும், சரியாய்க் கட்டப்படாத சாக்கடைக் கால்களிலும், உக்கிராண அறைகளிலும், மடப்பள்ளிகளிலும் வசிக்கும். அரிசி, கோதுமை, பஜிரி, கேழ்வாகு, தினை முதலிய தானியங்கள் இவைகளுக்கு ஆகாரம். அநேக தெள்ளுப்பூச்சிகள் இவைகளிடம் குடிகொண்டிருக்கின்றன. மஹம்மாரி பரவியிருக்கும்போது அநேக எலிகள், வேறு இடங்களுக்கு ஓடி, தங்கள்மேல் பதுங்கியுள்ள, தொத்து சம்மந்தப்பட்ட தெள்ளுப்பூச்சிகள் மூலமாய் எதைக் கடிக்கிறதோ, எதைக்கொண்டு ஜீவிக்கிறதோ அதற்கு அந்த வியாதியைத் தொத்தவைக்கின்றன. ஒரு பட்டணத்தில் எத்தனை ஜனங்கள் இருக்கிறார்களோ அதற் கிரட்டத்தனை எலிகள் அங்கே இருக்கின்றன. எலிகளுக்கு வம்சவிருத்தி அதிகம். ஒரு ஜதை எலிகள் ஒரு வருஷத்திற்குள் 80 ஜதைகள் ஆகும். ஒரு முதிர்ந்த எலியானது தினத்திற்கு முக்கால் அவுன்ஸ் தானியம் சாப்பிடும். ஒரு எலியினால் வருஷத்திற்கு ரூ. 4 தானியமும் சொத்தும் நாசமாகின்றதென்று நிபுணர்கள் கணக்கெடுத்திருக்கிறார்கள். எலிகளைக் கொல்வதினால் மஹம்மாரியை வரவொட்



டாமல் தடுப்பதுடன், சிக்கன விஷயத்திலும் லாபமுண்டு.

எலிகள் தவிர, தொத்துள்ள இடங்களிலிருந்து வரும் ஜனங்கள், தங்கள் தேகங்களின் மீதும் மூட்டைகளிலும் தொத்துள்ள எலித் தெள்ளுப்பூச்சிகளை ஆரோக்கியமான இடங்களுக்குக் கொண்டுபோய் விட்டு அதன் மூலமாய் மஹம்மாரியைப் பரவச் செய்கின்றனர்

மஹம்மாரி உண்டாகும் காலம்:—எலித் தெள்ளுப் பூச்சிகள் எப்போது அதிகமாயிருக்கின்றனவோ, அப்போது மஹம்மாரி கடினமாயிருக்கும். குளிர்காலத்தில்தான் எலித்தெள்ளுப்பூச்சிகள் அதிகமாகவிருக்கும். உஷ்ணமும், நேராக சூரியகிரணம் படுவதும் எலித்தெள்ளுப்பூச்சிகளுக்கு விரோதமானவை.

குறிகள்:—தொத்து சம்மந்தப்பட்டதெள்ளுப்பூச்சி மனிதனைக் கடித்த 3 முதல் 10 நாளைக்குள் அவன் தேகத்தில் மஹம்மாரி உண்டாகும். திடீரென்று குளிர் காணும். தேகமெங்கும் நோய். உஷ்ணக்கிரம் 103 முதல் 105 டிகிரிவரையிலும் போகும். மண்டையைப் பிளக்கும்படியான தலைவலி, குடிகாரன் மாதிரி நடையும் பார்வையும். அமைதியற்றிருத்தல். கோளங்களில் கட்டி காணும். மஹம்மாரியால் ரஸாயனக்கோளங்களில் நோய் உண்டாகும். அங்கே அழற்சி உண்டாகி, 24-மணிநேரங்களுக்குள் அது பெருக்கும். இந்த வியாதி ஒரு வார முதல் மூன்று வாரங்கள் வரையில் நீடித்திருக்கும். அனுகூலமாவதாயிருந்தால், ஜுரம் ஒரு வாரத்திற்குள் இறங்கிப்போய்விடும். கட்டிகள் உடைந்து அநேக நாட்கள் வரையில் அவற்றிலிருந்து சீழ் வந்துகொண்டிருக்கும்.

தடை முறைகள்:—மஹம்மாரியைப் பரவச் செய்வதற்கு எலியே காரணமாயிருப்பது பற்றி, எலிகளைக் கொல்ல வழி தேடவேண்டும். இவை இருவிதம். (1) காயமாய் உபயோகப்படும்படியான முறைகள் (2) சமயத்திற்கு உபயோகப்படும்படியான முறைகள்.

### காயமாய் உபயோகப்படும்படியான முறைகள்

தானியங்களை வைக்கும்படியான வீடுகளையும் கட்டடங்களையும், நன்றாய்க் கட்டி எலி வரவொட்டாமல் செய்யவேண்டும். ஷாப்புகள், சாமான் அறைகள், தானிய அறைகள், கூடங்கள் முதலியன குடியிருக்கும் வீடுகளை விட்டு சற்று தூரத்திற்கப்பால் கட்டப்பட்டிருக்க வேண்டும்.

எலிகள் பிழைத்திருப்பதற்கு ஜலம் அவசியமாயிருப்பதால், சாமான் கிடங்குகளில் ஜலமாவது, பச்சை மரக்கறிகளாவது அவைகளுக்கு எட்டும்படியாய் வைக்கக்கூடாது

அவைகளுக்கு அருகாமையில் அவைகளின் உணவிற்கு சாதகமாயுள்ள குப்பை செத்தை முதலியன கொட்டக்கூடாது.

தெருக்கள், சந்துகள் இவற்றை சுகாதார நிலைமையில் வைத்திருக்கவேண்டும். சாக்கடைகள் ஆழமாயும் நல்லமாதிரியுள்ளதாயும் வெட்டப்பட்டிருக்கவேண்டும். சிறிய சந்து பொந்துக்களைக் கவனித்து அவற்றை அடைத்துவிடவேண்டும். இல்லாவிட்டால் எலிகள் அங்கே பதுங்கிக்கொண்டிருக்கும்.

எலிகள் சாக்கடைக் கால்கள் வழியாய் வீட்டிற்குள் நுழைவதால், வருவாயிலில் இரும்புக்கம்பி போட்டு அவற்றை வரவொட்டாமல் தடுக்கவேண்டும்.

### சமயத்திற்கு உபயோகப்படும்படியான முறைகள்.

எலியை அழித்தல்:—எலிப்போன்களும், விஷம் கலந்த சிற்றுண்டிகளும் இதற்காக உபயோகப்படுத்தப்படுகின்றன. இதை வெகுநாளைக்கு எங்கும் செய்யவேண்டும். எலிகளை உயிருடன் பிடித்துக் கொள்வதினால் நல்ல பலன் ஏற்பட்டிருக்கிறது. எலிப்போன்களை ஜாக்கிரதையாய்ப் பரீக்ஷித்து பொறுக்கி எடுக்கவேண்டும். கடையில் அநேகவித போன்கள் இருக்கின்றன. அவைகள் சரியானவை அன்று. ஒரு போன் சரியாக இருக்கிறதா இல்லையா என்பதற்கு அதன் அளவு, வலுவு உள்ளே நுழையும் சந்தின் அளவு, கதவு சட்டத்தின் மேல் சரியாய்ப் படிதல் முதலிய விஷயங்கள் யாவையும் கவனிக்கவேண்டும். ஓயர் கம்பி போட்ட போன்களைவிட ஸ்பிரிங் போன்கள் சிரேஷ்டம். இந்தப் போன்களை உபயோகித்த பிறகு, அவற்றைக் கொதிக்கும் ஜலத்தில் போட்டு, அதிலுள்ள நாற்றத்தைப் போக்கடிக்கவேண்டும். பிறகு அவற்றை உலர்த்தி, மறுபடியும் வைப்பதற்கு முன், எண்ணெயைத்தடவி, சிற்றுண்டியை வைத்து மூடிவைக்கவேண்டும்,

இந்த போன்களை இரவில் வைத்துக் காலையில் எடுத்துப் பார்க்கவேண்டும்.

விஷம் வைத்து எலிகளைக் கொல்ல வேண்டியதாயிருந்தால், மிகுந்த சிரேஷ்டமானதும் மலிவானதுமான விஷம் பேரியம் கார்பொனேட் என்பதே. ஆரோக்கிய அதிகாரிகள் துட்டு வாங்காமலே இந்த விஷமாத்திரைகளை சப்ளை செய்கிறார்கள். ஆனால், எலி தனக்கு இஷ்டமான ஆகாரத்தையே உண்ணவேண்டுமென்று இச்சிப்பதால், அந்த ஆகாரத்துடன் இந்த விஷத்தைக் கலந்து வைக்கவேண்டும். அப்போதுதான் அவை சாகும். 9 கிராம் கோதுமை மாவுடன் 3 கிரெயின் பேரியம் கார்பொனேட் கலந்துவைத்தால் போதுமானது. இதை பிரதிதினமும் தயாரிக்கவேண்டும் கெட்டியாய் காட்பட்ட ஆகாரமாயிருந்தால் எலிகள் அவற்றைத் தொடுகிறதில்லை. இந்த ஆகாரத்திற்கு வேறொரு மணமும் கலக்காதிருக்கும் பொருட்டு கைகள், தட்டுகள் இவற்றை செவ்வையாய் அலம்பிச் சுத்தம் செய்யவேண்டும். இந்த விஷமாத்திரைகள் குழந்தைகளுக்கும் ஆடு மாடுகளுக்கும் கெடுதலை விளைவிக்கும்.

முக்கியமான மற்ற விஷயங்கள் பின்வருவன. (1) வெள்ளைப் பாஷாணம் ஒரு பங்குடன் 4 பங்கு சாதம். (2) பாஸ் பாஸ் எலி பேஸ்டு. எலிகளையும் அவற்றின்மேலுள்ள தெள்ளுப் பூச்சிகளையும் ஒடும்போது கொல்லத்தக்க விதம் யாதெனில், 'நீம் புட்டியை' உபயோகிப்பதேயாம். இதைத் தயாரிக்கும் விதம் பொடாஷியம் நைட்ரேட் 1-ன்றரை டிராம், பொடி பண்ணிய பொடாஷியம் க்ளோரேட் 2 டிராம், கந்தகம் 2 டிராம் கடுகெண்ணெய் அல்லது விளக்கெண்ணெயை விட்டு, அதில் ஒரு டிராம் சிகப்பு மிளகு, ஒரு பிடி உலர்ந்த நசுக்கின வேப்பம் இலை இவைகளைச் சேர்த்துக் கலக்கி அடையாக்கவேண்டியது. இந்தக் கலப்பை எலி சந்துகளில் வைத்து, ஒன்பது அங்குலம் துணித்திரியை எடுத்து பொடாஷியம் க்ளோரேட்டில் நனைத்து உலர்த்தி, அதைச் சந்துகளில் வைத்துக்கொளுத்தி சந்துகளை மூடிவிடவேண்டியது.

வியாதியை சொஸ்தப்படுத்த முயற்சி செய்வதைக் காட்டிலும் தடுப்பது மேலானது பற்றி, இந்த கொடிய வியாதியைத் தடுப்பது மேல். உமது பட்டணத்திலோ அதற்கருகிலோ மஹம்மாரி கண்டிருக்கும் பக்ஷத்தில், பின்வரும் எச்சரிக்கைகளை எடுத்துக்கொண்டால், சுலபமாய் இந்த வியாதியை வரவொட்டாமல் தடுக்கலாம்.

(1) தொத்து சம்மந்தப்பட்ட பட்டணத்துடன் போக்கு வரத்து வைத்துக்கொள்ளாதே. சுகாதார அதிகாரிகள் விஷங்கொல்லி மருந்து போட்டு சுத்தம்செய்யாத மூட்டை அல்லது தானியங்களை உனது வீட்டில் வரவிடாதே

(2) மஹம்மாரி வரவொட்டாமல் தடுப்பதற்கு அம்மைகுத்திக் கொள். இது 6-மாதங்கள் வரையில் மஹம்மாரி வரவொட்டாமல் காப்பாற்றும். இதை வெகுநாளாய் பரீக்ஷை செய்து கைதேர்ந்த சிகிச்சையென்று கண்டுபிடிக்கப்பட்டது. தவிர, இதனால் உனக்கு தைரியமும் நம்பிக்கையும் உண்டாகும். அவைகளே உனக்குள்ள பீதியைப் போக்கும்

(3 எலித்தெள்ளுப்பூச்சிகள் ஒரு அடி உயரத்திற்குமேல் பறக்கவாவது, குதிக்கவாவது முடியாதாதலால், மஹம்மாரி கண்டிருக்கும் போது, ஒரு கட்டிலின்மேல் படுத்துறங்குவது நலம்.

(4) கடைகளிலும் கிடங்குகளிலும் ஆகாரப் பதார்த்தங்களைத் திறந்துவைத்திருப்பதால், அங்கே எலிகள் அதிகமாக விருத்தியாவதற்கு இடமுண்டு. ஆனதுபற்றி இந்த தொத்து வியாதி கண்ட இடங்களில் சாமான்களை வாங்காமலிருப்பது நலம். அங்கே விதியின்றி வாங்கவேண்டியதாயிருந்தால், அவற்றை ஆறு மணி காலம் வெய்யிலில் உலர்த்தி வைத்து வீட்டிற்குள் கொண்டுபோகவேண்டும். சூரிய கிரணங்கள் எலித்தெள்ளுப்பூச்சிகளைக் கொல்லக் கூடியன.

(5) காலங்களில் பூட்ஸ், ஸ்டாக்ஸ் போட்டுக்கொள்ளாமல், தொத்துள்ள இடத்திற்குப் போகாதே. இந்தத் தெள்ளுப்பூச்சிகள் உம்முடைய துணிகளில் தொத்திக்கொண்டு வருமாதலால், அவற்றை வெளியிலேயே கழற்றி, குடியிருக்கும் வீட்டிற்குக் கொஞ்ச தூரத்திற்கப்பால் வெய்யலில் உலர்த்தி, பின்னர் வீட்டிற்குக் கொண்டுவர வேண்டியது. சாயங்காலங்களிலாவது, சூரிய வெளிச்சம் போதுமானதா யிராதபோதாவது தொத்து வியாதியுள்ள இடங்களில் உலாவக் கூடாது.



இந்தத் தெள்ளுப்பூச்சிகள் இருட்டில் சஞ்சாரம் பண்ணும். சூரிய வெளிச்சத்தில் வெளியே வராது. வண்ணான் சலவைசெய்துகொண்டு வரும் உமது துணிகள் யாவையும் வீட்டிற்குக் கொண்டுவருமுன் சூரிய வெளிச்சத்தில் உலர்த்திக்கொண்டு வரவேண்டும். அதில் சில எலித் தெள்ளுப்பூச்சிகள் ஒட்டிக்கொண்டிருக்கலாம். ஏனெனில், அநேக விடங்களிலிருந்து வண்ணான் துணிகளைச் சேகரித்துக்கொண்டுவந்து தப்புகிறான்.

(7) கூடுமானால், தொத்துள்ள இடத்தைச் சுமார் ஒன்றரைமாத காலம் வரையில் காலிசெய்து அபாயமில்லாத இடத்தில் போய் வசிக்க வேண்டியது.

(8) ஒரு வீட்டில் ஒரு எலி செத்துக் கிடந்தால், அதைக்கையாளுவதில் ஜாக்கிரதையாகவிருக்கவேண்டும். மஹம்மாரிக்கு ஒரு நிச்சயமான அறிகுறி வீட்டில் எலிகள் திடீரென்று சாவதேயாம். உடனே அந்த வீட்டைவிட்டுக் கிளம்பி அதை விஷங்கொல்லி மருந்தைக் கொண்டு சுத்தம்செய்யவேண்டும். சுகாதார அதிகாரிகள் உனக்காக இதைச் செய்வார்கள். ஒரு தொத்து சம்பந்தப்பட்ட வீட்டைச் செவ்வையாய் சுத்தம் செய்யும் விதம் யாதெனில் அதன் மேற்கூரையைப் பிரித்து சூரிய கிரணம் படும்படிம் வைப்பதேயாம். வீட்டிலுள்ள மூட்டை முடிச்சுகள், சாமான்கள் யாவையும் வெய்யலில் உலர்த்தி சுத்திகரிக்க வேண்டியது. செத்த எலியைத் தொடவாவது அதன் அருகில் போகவாவது கூடாது. அதிலுள்ள தெள்ளுப்பூச்சிகள் உன்னைப் பற்றும். அதை எடுக்க வேண்டுமானால், அதன்மேலும் அதைச் சுற்றிலும் கிரோஸின் எண்ணெயைக் கொட்டி ஒரு தடியால் எடுத்து அப்புறப்படுத்தி உடனே அதைக் கொளுத்திவிட வேண்டும்.

சில கிராமங்களில் கிராமத்தார் மஹம்மாரி சம்மந்தப்பட்டவர்களை ஊருக்குள் வரவிடுகிறதில்லை. இதனால் அந்த ஊருக்கு வியாதி பரவுகிறதில்லை. ப்ளேக்குக்காக பயந்து ஓடி வந்தவனோ, அல்லது பிச்சைக்காரனோ, வந்தால் அவன் ஊருக்கு வெளியில் இரண்டுநாள் இருந்து, அவன் உடை, மூட்டை முடிச்சுகள் இவற்றை செவ்வையாய் உலர்த்திக்கொண்டு வந்தாலொழிய அவனை வரவிடுகிறதில்லை. இதேமாதிரி பட்டணங்களிலும் நடக்கும் பக்ஷத்தில் இந்தக் கொடிய வியாதி பரவுவதற்கு சந்தர்ப்பங்கள் மிகக் கம்மியாக விருக்கும்.

## உலக அதிசயங்கள்.

9 வயதுள்ள சிறுவன் 30 மாணுக்கருக்கு உபாத்தியாயர்:—9 வயதுள்ள ஓர் சிறுவன் 30 மாணுக்கர்களைச் சேர்த்துக்கொண்டு, பள்ளியில்லா காலங்களில், அவர்களுக்குப் பாடம் சொல்லுகிறனும். தான் 3-வது வகுப்பில் வாசிக்கிறன். அவன் பெயர் ஆஸ்டின். பள்ளி பெயர் ஆஸ்டின் பள்ளி, ஷெபீல்டிலிருக்கின்றன். விசித்திரமான புத்தியுடையவனும்.

---

கலியுக குண்டோதரன்:—ஆரோக்கியமும், திடகாத்திரமுமுள்ள ஒருவர் 70 வயது வரை ஆயிளுடனிருப் பின் அவருடை உணவு எவ்வளவு இருக்குமென்பதை ஒரு பாரிஸ் நிபுணர் கீழ்கண்டபடி கூறியுள்ளார்.

சாதம் 13 டன்
காய்கறி 15 டன்
மாமிசம் 7 டன்.
கனிவர்க்கம் 7 டன்.
சர்க்கரை 16,000 ராத்தல்.
பால் 15,000 படி.
ஜலம் 20,000 படி.

அவருடைய இடையை விட 700 மடங்கு அதிகமாக உட்கொள்வாராம்.

---

கலியுக இயேசு நாதர்:—இயேசு நாதரைப் போலவே ஆயிரக்கணக்கான ஜனங்களுக்கு விவிலிய நூலைப் பிரசங்கம் செய்யும் தற்கால ரிச்சர்டு ஹெட்ரிக், 13 வயதானவர். நியூயார்க்கில் பிறந்தார். இவர் சில காலமாய் லண்டனிலிருக்கின்றார்.
இவருடைய குழந்தைப் பருவத்தில் அமெரிக்கன் படக் காக்ஷியில் நடித்துள்ளார். 3-வது வயதில் ஓர் ஆச்சரியமான சம்பவமும் செய்துள்ளாராம். அதாவது சில சிநேகிதர்களுடன் ஓர் குளத்தில் குளித்து முடிந்தவுடன் அவர்களை எல்லாம் உட்காரும்படி கேட்டுக் கொண்டு விவிலிய நூலைப் (ஹோலிபைபில்) பற்றி வெகு அழகாய் பிரசங்கம் செய்தாராம். இவர் இயேசு நாதரின் தூதராக தேவ ஆசி பெற்றவராகவேயிருக்க வேண்டுமென்று அநேகர் நம்பியுள்ளார்களாம்.

# சென்னை மாகாண ஆரம்ப ஆசிரியர்

# 8-வது மகா நாடு.

1932-ம் வருஷம் டிசம்பர்மீ 31உ சென்னையில் ஸ்ரீமான், திவான்பகதூர் பி. டி. குமாரசாமி செட்டியார், பி. ஏ. அவர்களின் அக்கிராசனத்தின்கீழ்க் கூடின சென்னை மாகாண ஆரம்ப ஆசிரியர் 8-வது மகாநாட்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாக சபை அங்கத்தினர்களும் மகா நாட்டில் செய்யப்பட்ட தீர்மானங்களும் பின்வருமாறு:—

திருவாளர், திவான்பகதூர் பி. டி. குமாரசாமி செட்டியார் அவர்கள், பி. ஏ.

உப அத்தியக்ஷர்கள்.

,, என். கே. திருமலாச்சாரியர் அவர்கள் பி. ஏ., பி. எல்.

,, என். எஸ். இராமஸ்வாமி ஐயர் அவர்கள் ஜி. டி. ஏ.

காரியதரிசி.

,, எஸ். தருமலிங்க நாயக்கர் அவர்கள்

பொக்கிஷதார்.

,, எம். ஒப். டானியல் அவர்கள்

பத்திரிகை மானேஜர்.

,, எஸ். விஸ்வநாத ஐயர் அவர்கள்

இதர அங்கத்தினர்கள்.

1. திருவாளர், கெ. இராமாநுஜம் பிள்ளை அவர்கள், சென்னை.
2. ,, டி. மோகனசுந்தர முதலியார் அவர்கள், சென்னை.
3. ,, எம் சரவணம் அவர்கள், சென்னை.
4. ,, சி. டி. வீரபத்திரன் அவர்கள், சென்னை.
5. ,, கெ. வெங்கட்ராம ஐயர் அவர்கள், சென்னை
5. ,, டி. சர்வகோபால் பிள்ளை அவர்கள், திண்டிவனம்.
7. ,, டி கெ. ஜானகிராம ஐயர் அவர்கள், வட ஆற்காடு.
8. ,, டி. ஆர். சங்கரநாராயண அவர்கள். கோயம்பத்தூர்.
9. ,, சி. கோவிந்தசாமி பிள்ளை அவர்கள், தஞ்சை.
10. ,, டபுள்யூ. டி. மாசிலாமணி முதலியார் அவர்கள். வாலாஜா.
11. ,, வெமூரி சூரியநாராயணன் அவர்கள், கீழ்க்கோதாவரி.
12. ,, டி. சுப்பாராவ் அவர்கள், சித்தூர்.
13. ,, எம். டி. அளகிரி ஐயர் அவர்கள், சேலம்.

பத்ராதிபர்.

,, எம். கே. சுந்தரவரதாச்சாரியர்.

1. திருவாளர், எம். கே. சுந்தரவரதாச்சாரியார், பி. ஏ., எல். டி.
2. ,, எஸ். தருமலிங்க நாய்க்கர்,
3. ,, கே. இராமாநுஜம் பிள்ளை,
4. ,, கே வெங்கட்ராம ஐயர்,
5. ,, டி. ஸர்வகோபால் பிள்ளை,

ஆகிய இவர்கள் தங்களுக்குத் தேவையானவர்களை உடன்சேர்த்துக் கொண்டு "ஆரம்பக் கல்வியின் நோக்கம் எவ்வாறானது என்பதைக் குறித்தும், இப்பொழுது ஆரம்பக் கல்வியின் அபிவிருத்திக்கு இடையூறுகளாக அமைந்துள்ள தடைகளையும், அதில் தற்பொழுதுள்ள குறைகளை பற்றும் செம்மையாக விசாரித்தும் அக்குறைகளை நீக்கியும் ஆரம்பக் கல்வி சரியானபடி பரவுவதற்கேற்ற வழிகளையும், உபாயங்களையும் எடுத்துக்காட்டியும், சிபார்ஸுகள் செய்தும், ஆரம்பக் கல்விக்கான பாடதிட்டங்களையும், விஷய ஜாபிதாக்களையும் எல்லாப் பள்ளிக் கூடங்களுக்கும் பொதுவாக அமையும்படியும், இடங்களுக்குத் தக்கவாறு மாற்றிக்கொள்ளக் கூடியவாறும் தயா



ரித்தும்" 1933-ம் வருஷம் ஏப்ரல் மாதம் 30உக்குள் சென்னை மாகாண அரம்ப ஆசிரியர் சங்கத்தின் நிருவாக சபையாருக்கு ரிபோர்ட் செய்யவேண்டும் என்பது.

2. ஆரம்பக் கல்வியின் "மான்யூல் ட்ரெய்னிங்" எனப்படும் கைப்பழக்கம் அடங்கியதாதலினாலும், பிள்ளைகளுக்கு கைத்தொழிலின் மேன்மையை உணர்த்துவதற்கும், அவர்கள் தங்கள் கண்களையும், கைகளை செம்மையாக உபயோகிக்குமாறு அவர்களைப் பழக்குவதற்கும் எல்லா ஆரம்பக் கல்விக்கான பள்ளிக்கூடங்களிலும் கட்டாயமானதாகச் செய்யவேண்டு மென்பது.

2. அவற்றை அமைக்கும் வகையில் உபாத்தியாயர்கள் தங்கள் பிள்ளைகளின் பெற்றோர்கள் அனுஷ்டித்துவரும் தொழில்களை அனுசரித்தும், பள்ளிக்கூடங்கள் நடைபெறும் இடங்களில் கையாளப்படும் தொழில்களுக்கு இணங்கவும், ஏற்பாடுகள் செய்யவேண்டும்.

3. கிராமங்களில் பெரும்பாலும் விவசாயம் முதன்மையான கைத்தொழிலாக இருந்து வருவதனாலும், பிள்ளைகள் தங்கள் பெற்றோர்களின் தொழிலையே பெரும்பாலும் பின்பற்றி நடக்கின்றவர்களானதினாலும், கிராமப் பள்ளிக்கூடங்களில் கற்பிக்கப்படும் விஷயங்களில் விவசாயம் கட்டாயமானதாகச் செய்யப்படவேண்டுமென்பது.

4. ஆரம்பக்கல்வியைக் கற்கும் எல்லாப் பிள்ளைகளும் தங்கள் டாக்டர்களைக்கொண்டு தேக பரிக்ஷையைச் செய்வதையன்றி, அவர்களுக்கு உண்டாகும் பிணிகளைப் போக்குவதற்கான பிரத்தியேக மருந்துசாலைகளை, மேனாட்டிலிருப்பனவற்றை யொட்டித் துரைத்தனத்தார் அமைக்கவேண்டுமென்பது.

5. சென்னை மாகாண ஆரம்ப ஆசிரியர் சங்கமும், அதன் பல கிளைச் சங்கங்களும் பல துறைகளிலும் முயன்று உபாத்தியாயர்களும், பொது ஜனங்களும் படித்துக் கல்வி அபிவிருத்தியை அடைவதற்கு இன்றியமையாதனவான புஸ்தகசாலைகளை உண்டு பண்ணியும், அப்பொழுதைக்கப்பொழுது கல்வியாளர்களைக் கொண்டு அவர்கள் ஆரம்பாசிரியர்களுக்கான தொழிற் பயிற்சிமுறைகளையும் அறிவை யூட்டும் அரியபெரிய விஷயங்களையும் எடுத்துப் போதிக்குமாறு ஏற்பாடுகளைச் செய்தும் அமைக்கவேண்டு மென்பது.

6. துரைத்தனத்தாரும் ஸ்தலஸ்தாபனங்களும் கௌரவ ஊழியர்களின் உதவியைக் கொண்டு கல்வி கற்காத பெரியவர்களுக்கும் கல்வியை யூட்ட முயற்சிக்கும் வகையில் ஆரம்பாசிரியர்கள், அப்பெரியவர்களின் கல்வி யபிவிருத்தி ஆரம்பக் கல்வியின் முன்னேற்றத்திற்கான ஒரு சிறந்த ஆதாரமானதினால், தங்களால் ஈன்ற தொண்டுகளைப் புரியவேண்டுமென்பது.

7. கீழ்வகுப்புகளில் பிள்ளைகளைத் தனித்தனிக் கவனித்து அவர்கள் ஒரு வகுப்பிலேயே 2, 3 மூன்று வருஷங்கள் தங்கிவிடாமலும், அதுகாரணமாகப் பள்ளியைவிட்டகலாமலும் இருக்கும்படிச் செய்வதன் பொருட்டு முதல் மூன்று வகுப்புகளிலும் 20க்கு மேற்படாத பிள்ளைகளை வைத்துக்கொள்ள கல்வி இலாகா அதிகாரிகள் அநுமதி கொடுக்கவேண்டுமென்பது.

கல்வி இலாகா டைரெக்டர் கீழ்வகுப்புகளில் 40-க்குக் குறைவான பிள்ளைகளை வைத்துக்கொள்வதற்கான உத்தரவைக் கல்வி இலாகா கீழ் அதிகாரிகள் கொடுக்கலாம் என்று தாக்கீது செய்திருக்கும் விஷயம் தெரிந்திருக்கலாம்.

8. ஆசிரிய சங்கங்கள் இல்லாத இடங்களில் அவைகளையுண்டு பண்ணவும், ஆரம்ப ஆசிரியன் பத்திரிகையை ஆசிரியர்கள் ஆதரிக்கவேண்டுமெனப் பிரசாரஞ் செய்யவும் மாகாணச் சங்கம் தக்க முயற்சியை பண்ணவேண்டுமென்பது.

9. ஜூன்மீ முதல் தேதிக்குள் மாகாணச் சங்கத்தின் சம்பந்தத்தில் ஏற்படுத்த உத்தேசித்திருக்கும் பதிப்புக் கழகத்திற்கான எல்லா ஏற்பாடுகளையும் செம்மையாக அமைப்பதன் பொருட்டு மாகாணச் சங்கத்தின் நிர்வாக சபையார் முயன்று வருதல் வேண்டும். என்பது.

அதை நிறைவேற்றுவதில் அவர்கள் தங்களுடன் ஒத்துழைக்கப் பிறரைச் சேர்த்துக் கொள்ளும் அதிகாரத்தைப் பெற்றுள்ளார்கள்.

10. ஆசிரியர்களும், ஆசிரியச் சங்கங்களும் ஆங்காங்குப் பெற்றோர்களின் சங்கங்களை உண்டுபண்ணி அவர்களின் கூட்டுறவையும் உபதேசங்களையும் பெறுவதற்கான ஏற்பாடுகளை செய்யவேண்டு மென்பது.

11. கல்வி இலாகா மந்திரியவர்கள் பொருள் உதவிக்கான சட்டத்தைத் திருத்துவதி கல்விப் பரிபாலகர்கள் அனைவரும் சாலரீஸ் கமிட்டியார் சிபார்ஸையொட்டி ஓரேவிதியான

பளத்தை ஏற்படுத்த வேண்டுமென்று வற்புறுத்தியும், வருமானத்திற்கு மேற்பட்ட செலவு முழுவதையும் துரைத்தனத்தாரே கொடுக்கும்படி ஏற்பாடு செய்தும் உதவவேண்டு மென்பது.

துரைத்தனத்தார் தங்கள் வருமானத்திலிருந்து தாங்கள் செய்யும் செலவுகளில் ஆரம்பக் கல்விக்கான செலவை முதன்மையானதாகக் கருதவேண்டும்.

12. ஆரம்பக் கல்விக்குச் சிறந்த சாதனங்களாக அமைத்துள்ள எல்லா உபகரணப் பொருள்களையும் துரைத்தனத்தார் தங்கள் முழுச் செலவில் வாங்கி எல்லாப் பள்ளிக்கூடங்களுக்கும் உதவவேண்டுமென்பது.

13. பள்ளிக்கூடங்களில் பிள்ளைகளுக்குத் தக்கபடிப் பாட புத்தகங்களை வைக்கும் உரிமை உபாத்தியாயர்களுடையதே யாகுமாதலின் அதை அவர்கள் செய்யும் வரையில் அவ்வுரிமையை மானேஜர்களாவது, கல்வி இலாகா அதிகாரிகளாவது பலாத்காரமாகப் பிடுங்கிக் கொள்ளக் கூடாதென்பது.

14. பிள்ளைகளின் நன்மையை நாடியும், உபாத்தியாயர்களின் முயற்சிகள் மிக்கப் பயன்படுவதை யுன்னியும், ஸ்தலஸ்தாபனங்கள் தங்கள் அதிகாரத்திற்குட்பட்ட உபாத்தியாயர்களை இடம் விட்டு இடம் மாற்றுதிருத்தல் வேண்டுமென்பதும், எவரையேனும் மாற்றுவது அவசியமாகக் கருதப்படுமாயின், கல்வி இலாகா அதிகாரிகளின் அபிப்பிராயத்தைக் கலந்து அவரை மாற்ற வேண்டும் என்பதும்.

15. பத்து வருஷத்துக்கு மேற்பட்ட அநுபவத்தையுடைய உபாத்தியாயர்களும், ஐந்து வருஷத்திற்கு அதிகமான அனுபவத்தையுடைய உபாத்தியாயினிகளும் விடுமுறையின்போது சிறிதுகாலம் தொழிற் பயிற்சியைப் பெற்றுப் போதனு முறைப் பரிக்ஷைகளில் தேறுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படவேண்டுமென்பது.

16. சில ஸ்தலஸ்தாபனங்களும், உதவிபெறும் மானேஜர்களும் மாதம் மாதம் தங்கள் பள்ளிக்கூடங்களில் வேலை செய்யும் ஆசிரியர்களுக்குச் சம்பளங்களைக் கொடாது பல மாதங்கள் பாக்கி வைத்திருப்பது அன்னவர்களுக்குச் சொல்லரிய துன்பங்களை யுண்டு பண்ணுவதனால், அவர்கள் ஆசிரியர்களின் சம்பளங்களைப் பாக்கியன்னியில் அப்பொழுதைக்கப்பொழுது கொடுத்துவரவேண்டுமென்பது.

17. பட்டணங்களில் ஸ்தலஸ்தாபனங்கள் தாங்கள் வைத்து நடத்தும் பள்ளிக் கூடங்களுடன் நடைபெறும் உதவிபெறும் பாடசாலைகளும் தங்கள் தொழில்களைச் செவ்வனே செய்வதற்கான எல்லா சாதனங்களை அமைத்துக்கொடுப்பதுடன் இவைகள் அடையும் நஷ்டத்தை ஈடுசெய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டு மென்பது.

18. ஜில்லா கல்விச் சபைகளுக்கு உபாத்தியாயர்களின் பிரதி நிதிகள் போதுமான அளவில் நியமிக்கப்படவேண்டு மென்பது.

19. துரைத்தனத்தார் ஆரம்பக் கல்வியின் சம்மந்தமாகச் செய்ய முன்வரும் எந்த தீர்மானத்தையும், திருத்தத்தையும் மாகாணச் சங்கத்திற்குத் தெரிவித்து அதன் அபிப்பிராயத்தைப் பெற்று செய்ய வேண்டுமென்பதும், அவர்களுடைய அபிப்பிராயத்தைத் தெரிந்து கொள்ளாமல் எவ்விதமாற தல்களையாவது, சட்ட நிர்மானத்தையாவது. செய்யக்கூடாதென்பதும்.

20. ஸெகன்டரி ஸ்கூல் லீவிங் சர்டிபிகெட்காரர்களுக்கு ஆராம்பாசிரியர்கள் எவ்விதத்தாலும் குறைந்தவர்களாகமாட்டார்களாதலின், இனி அமையப்பெறும் புது துரைத்தன ஏற்பாட்டில் ஆரம்பாசிரியர்கள் வோட் செய்யும் உரிமையைப் பெறவேண்டுமென்பது.

21. துரைத்தனத்தர் ஆரம்பாசிரியர்களின் பெண்களும், பிள்ளைகளும் எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் எஸ். எஸ். எல். ஸி. வரையில் இலவசமாகப் படிப்பிக்கப்படவேண்டுமென்பது.

22. பண வறட்சியினால் செலவைக் குறைக்கும் வகையில் செய்யப்படும் ஏற்பாட்டில் எளிய ஆரம்பாசிரியர்களின் சம்பளங்களைக் குறைப்பதான எந்த ஏற்பாடும் செய்யப்படக்கூடாதென்பது.

23. பள்ளிக்கூடங்களில் சாரணப் படைகளை உண்டுபண்ணுவதற்கு வேண்டிய பயிற்சியைத் துரைத்தனத்தார் ஆரம்பாசிரியர்களுக்கு உண்டாக்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டு மென்பது.

(இதன் தொடர்ச்சி 39-ம் பக்கம் பார்க்க)

# சென்னை மாகாண ஆசிரிய மானேஜர்கள் பொதுக்கூட்டம்.

1933ஹு ஜனவரிமீ 1வ. சென்னை ஒற்றைவாடை எம். சபாபதி செட்டியார் ஆரம்ப பாடசாலையில் காலை 8-மணிக்கு திருநெல்வேலி திரு, என். பி. கிருஷ்ணய்யர், அவர்கள் அக்கிராசனத்தின் கீழ், தேர்ந்தெடுக்கப்பட்ட கீழ்கண்ட நிர்வாக சபை அங்கத்தினர்களும் ஏகமனதாக நிறைவேறப்பெற்ற தீர்மானங்களும்.

தலைவர்,

திருவாளர், வி. டி. அரசு பி. ஏ., எம். எல். ஸி.

உப தலைவர்கள்,

திரு, என். எஸ். இராமஸ்வாமி ஐய்யர், (ஜில்லா கல்விச் சபை அங்கத்தினர் சென்னை.)
,, டி. இ. வரதாச் சாரியார், ,,

மாகாண காரியதரிசி,

,, கெ. இராமாநுஜப் பிள்ளை, ,,

நிர்வாக சபையின் அங்கத்தினர்கள்,

,, வி. ஜி. ஜானகிராம் செட்டியார், ,, செங்கர் பட்டு.)
,, எஸ். சரவண முதலியார் (சைதாப் பேட்டை)
,, டி. சர்வ கோபால் பிள்ளை (தென்னார்காடு)
,, இராமசாமி முதலியார், (வட ஆர்காடு)
,, எஸ். ஆர். இரங்கநாதர், ,, (சேலம்)
,, என். வரதய்யா, (நாமக்கல்.)
,, டபிள்யூ. சுப்பிரமணியம் (சித்தூர்.)
,, பி வெங்கடாத்ரி, ,,
,, கெ. இரங்கசாமி ஐய்யங்கார், ,, (தஞ்சாவூர்)
,, டி. ஏ. சாமிநாத ருவ், ,, ,,
,, என். பி. கிருஷ்ணய்யா ,, (திரு நெல்வேலி)
,, இராஜகோபாலா சாரியார், ,, (மதுரை.)
,, ஜி. வி. இராமய்யா, (குண்டூர்.)
,, டி. லக்க்ஷ்மையா, (கிருஷ்ணா)
,, என். ஏ. நடேச முதலியார் ,, (சென்னை.)
,, பி. வீராகவன், (சென்னை.)
,, என். ஆர். கிருஷ்ணசாமி முதலியார், (சென்னை.)

(1) சென்னை ஆரம்பக் கல்விச் சட்டம் (1920ஹு), அதிகாரம் 2, பிரிவு 42-ல் 2-வது ரூலில், ஜில்லாக் கல்விச்சபைகள் சரிவர நடக்கும் உதவிபெறும் பாடசாலைகளுக்கு போதுமான கிராண்டுகளை கொடுத்து விருத்திசெய்வதற்கிருந்த முழு அதிகாரத்தை இப்பொழுது அரசாங்கத்தார் அளவுபடுத்தி திருத்தியிருப்பதினால் அநேக திறமையுடன் நடைபெற்று வரும் ஆரம்ப பாடசாலைகளின் பண விஷயத்திலும், ஊக்கமுடன் வேலை செய்யும் விஷயத்திலும் பாதிக்கப்படுவதினால், பழைய மாதிரியாக அந்த ரூலை மாற்றப்படவேண்டுமென்பது.

(2) சிலவுகள் அதிகரித்து வரும் இக்காலத்தில் வருடா வருடம் அரசாங்கத்தார் கிராண்டுகளை குறைத்துக்கொண்டே போவதால் இம்மாகாணத்திலுள்ள ஆரம்ப பாடசாலைகள் பணவிஷயங்களில் அதிகமாக பாதிக்கபடுவதினால் முன்மாதிரியாக அதிசப்படியான கிராண்டு அரசாங்கத்தார் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்பது

(3) இரவு பாடசாலைகளின் கிராண்டுகளை திடீரென குறைத்து விட்டபடியால் உண்மையிலேயே நன்றாக உழைத்து எழுதப்படிக்கத் தெரியாத வயது முதிர்ந்த ஆண் பெண்

ளுக்கு கல்விகற்றுவந்த இரவு பாடசாலைகள் மூடவேண்டிய நிலைமையில் வந்திருப்பதால், அரசாங்கத்தார் பழைய ஸ்கேல் பிரகாரம் கிராண்டுகளை உயர்த்திக் கொடுக்கவேண்டுமென்பது.

(4) ஆரம்ப பாடசாலைகளை பரிபாலித்து வரும் மானேஜர்களுக்கு முன்னறிக்கையில்லாமல் திடீரென புதிய புதிய மாறுதல்களை செய்வதாலும், சாதகமில்லாத அனுவச்யமான ரூல்களை ஏற்படுத்துவதினாலும், கிராண்டு கொடுக்கும் விஷயத்தில் ஆரம்பக்கல்வியின் அபிவிருத்தியை எதிர்நோக்கி நிற்பதல்லாமல் ஆரம்பாடசாலைகளில் நன்றாக வேலை செய்யும் ஊக்கத்தையும் குறைக்கின்றபடியால் முன்போன்ற ஆரம்பக் கல்வியின் அபிவிருத்தியை நாடி நிற்கும் தாராளமான பழைய மாதிரியான ரூல்களை அரசாங்கத்தார் ஏற்படுத்த வேண்டுமெனபது.

(5) 1932ஹு அமுலுக்கு கொண்டு வரப்பட்ட ஆரம்பக் கல்வி சீர்திருத்தச் சட்டத்தின் பிரகாரம், சென்னையில் எய்டட் பாடசாலைகளுக்கு முனிசிபாலிடியார் நஷ்ட ஈடு கொடுக்காமையாலும், முனிசிபல் பாடசாலைகளில் இலவசமாகவும், எய்டட் பாடசாலைகளில் சம்பளம் விதித்துக்கொள்ளும் முறையும் கட்டாய இலவசப்படிப்பின் அபிவிருத்தியை எதிர்நோக்கி நிர்ப்பதல்லாமல், எய்டட் பாடசாலைகளின் அபிவிருத்திக்கும், முன்னேற்றத்திற்கும் பாதகமாக இருப்பதால் அரசாங்கத்தார் பழையபடி நஷ்டஈடு கொடுக்கும்படியாக ஆரம்பக் கல்விச் சட்டம் சீர்திருத்தப்படவேண்டு மென்பது.

(6) சென்னை ஆரம்பக் கல்விச்சட்டத்தை சீர்திருத்துவதற்கு முன்னமேயே, சில இடங்களில் ஏழைமக்கள் வசிப்பதாலும், சில இடங்களில் அருகாமையில் இலவசமாக சொல்லிக்கொடுக்கும் முனிசிபல் பாடசாலைகள் இருப்பதாலும். சம்பளம் வசூலிக்க முடியாத பாடசாலைகளுக்கும், ஏற்கனவே கொடுபட்டு வந்த நஷ்ட ஈட்டைக் காட்டிலும் குறைந்து வசூலிக்கும் பாடசாலைகளுக்கும், நஷ்ட ஈடுத்தொகையை கொடுக்கும்படியாக அரசாங்கத்தாரும். கார்ப்பரேஷன் அதிகாரிகளும் தக்க முயற்சி செய்யவேண்டு மென்பது.

(7) சிலவிடங்களில் நன்றாக வேலைசெய்துவரும் ஆரம்பபாடசாலைகளுக்கு போட்டியாக லோகல் போர்டார் பொதுமக்களுடைய பணத்தை ஒன்றுக்கு இரண்டாக சிலவுசெய்து பாடசாலைகளை ஏற்படுத்தி எய்டட் பாடசாலைகளுக்கு பலவித இடைஞ்சல் கொடுத்துவருவதால், இது விஷயத்தில் அரசாங்கத்தார் தீர விஜாரித்து அவ்வித பொது பாடசாலைகளை நீக்கவேண்டுமென்பது.

(8) இப்பொழுது ஏற்படப்போகின்ற ஜில்லாக் கல்விச் சபைகளில், ஆசிரியமேனேஜர்களுக்கும், மானேஜர்களுக்கும், அந்தந்த ஜில்லாவிலுள்ள எய்டட் பாடசாலைகளின் எண்ணிக்கையின் பேரில் பிரதி நிதித்துவம் கொடுக்கப்படவேண்டுமென்பது.

(9) அட்வான்ஸ் கிராண்டு இப்பொழுது கொடுப்பதைப்போல் வருஷம் இருமுறையல்லாமல் மூன்று மாதத்திற்கு ஒரு முறை அதாவது வருடத்தில் 4 முறையாக அரசாங்கத்தார் எய்டட் பாடசாலைகளுக்கு கிராண்டு கொடுக்கவேண்டுமென்பது.

(10) தற்போது ஏற்பட்டுள்ள ஸ்கேல் கிராண்டு மிகவும் குறைவாக இருப்பதினால் அதிகப்படியான தேர்ந்த உபாத்தியாயர்களை வைத்து பாடசாலைகளை பரிபாலிப்பது கஷ்டமென்றும், தற்போதுள்ள, கிராண்டை உயர்த்தவோ, குறைக்கவோ ஏற்பட்டுள்ள முறையை எடுத்து விட்டு ஸ்கேல்களை அதிகப்படுத்தி குறைவு தாழ்வு இல்லாமல், ஒரேவிதமாக உபாத்தியாயர்கள் மீது கிராண்டை கணக்கிட்டு ஒரு ஜில்லாவுக்கும், மற்றொரு ஜில்லாவுக்கும் வித்தியாசமின்றி, ஒழுங்காக நடைபெறுதபாடசாலைகளின் கிராண்டைக் குறைத்தும் எய்டட் பாடசாலைகளுக்கு கிராண்டு கொடுக்கப்படவேண்டுமென்பது.

(11) சென்னை மாகாணத்திலுள்ள முக்கிய பட்டணங்களில் கிராமாந்திரங்களைக் காட்டிலும் உபாத்தியாயர்களுக்கு அதிகப்படியான சம்பளமும், அதிகப்படியான வீட்டு வாடகையும் கொடுக்கவேண்டியது அத்தியாவச்யமாகையால், இப்பொழுதுள்ள எல்லா இடங்களிலும் ஒரேமாதிரியான கிராண்டு கொடுக்கும், பழக்கத்தைவிட்டு, முக்கிய பட்டணங்களிலும் பெரிய கிராமங்களிலும் நடைபெற்றுவரும் ஆரம்பப் பாடசாலைகளுக்கு அதிகப்படியான கிராண்டு கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்பது.



(12) உபாத்திமை தொழிலல்லாது, சங்கீதத்திலும், வேருவித கைத்தொழிலிலும் தேர்ந்த உபாத்தியாயர்களுக்கும், பிள்ளைகளை ஜாக்கிரதையாக வீடுகளுக்கு அழைத்துப்போகவும், அழைத்துவரவும், வைக்கப்பட்டிருக்கும், ஆட்களுக்கும், தனிமையாக கிராண்டு கொடுக்கும்படி அரசாங்கத்தார் கிராண்டு கொடுக்கும் முறையில் சீர்திருத்தவேண்டுமென்பது.

(13) சேம்பியன் ஸ்கீமின் பிராகாரம் அருகேயுள்ள பாடசாலைகளில் உயர்ந்த வகுப்பில் குறைவாக பிள்ளைகளிலிருந்தால் அவர்களை ஒரு பாடசாலைக்கு வரும்படிச்செய்து அங்குள்ள உயர்ந்த வகுப்புக்களை பலாத்காரமாக மூடிவிடும், முறையானது அநேக திரமான எய்டட் பாடசாலைகளை மூடிவிட நேர்ந்ததல்லாமல், அம்முறை அனுஷ்ட்டானத்திலும் சரியாகநடப்பதாக தெரியவில்லை. ஆதலின் எய்டட் பாடசாலைகளில் உயர்ந்த வகுப்புக்கள் சொற்ப சிலவில் திறமையாகவைத்து பரிபாலித்து வருவதால்! அவ்வித உயர்தர வகுப்புக்களுக்கு அங்கீகாரம் எடுத்துவிடுவதாயிருந்தால், அந்தந்த மேனேஜர்களுடன் கலந்து அவர்களது மனப்பூர்வ சம்மதத்தை டிபார்மெண்டார் பெற்று செய்யவேண்டு மென்பது.

(4) போதனா பயிற்சி கலாசாலை மாணவர்களுக்கு அரசாங்கத்தார் கொடுத்துவரும் உபகாரச் சம்பளம் இப்பொழுது குறைந்து கொண்டே போவதால், மானேஜர்களுக்கு தேர்ந்த உபாத்தியாயர்கள் கிடைப்பது அரிதாயிருக்கு மன்றியில், தங்களிடத்திலிருக்கும் தேர்ச்சி பெறாத உபாத்தியாயர்களை போதனாமுறை பாடசாலைக்கு போகும்படி ஏற்பாடு செய்வதற்கு கஷ்டமாயிருக்குமாதலின் அரசாங்கத்தார் பழைய மாதிரியாக அம்மாணவர்களுக்கு உபகாரச்சம்பளம் கொடுக்கவேண்டு மென்பது.

(15) இப்பொழுது வரப்போகும் அரசாங்க சீர்திருத்தத்தில், எஸ். எஸ். எல். ஸி. பரிட்சைக்குச் சென்றவர்களுக்கு மாத்திரம், ஓட்டுரிமை இருக்கின்றபடியால், அது வன்னியில் ஒவ்வொரு ஆசிரி மானேஜர்களுக்கும் அவ்வித ஓட்டுரிமை கொடுக்கப்படவேண்டுமென்பது.

(16) தென்னார்காடு ஜில்லா ஆசிரிய மானேஜர்கள் சங்கத்திலிருந்து ஜில்லா கல்விச் சபைக்கு இரண்டுபேர்களை தேர்ந்தெடுத் தனுப்பப்பட்டு அவர்களை ஜில்லாக் கல்விச்சபை தலைவர்தன் சபையில் சேர்த்துக்கொள்ளவேண்டிய ஏற்பாடுகளை செய்யாததைப்பற்றியும் ஜில்லாக் கல்வி அதிகாரியவர்கள் தேர்ந்தெடுத்த நபர்களின் பெயர்கள் கெஜட்டில் இது பரியந்தம் கொண்டுவராததைப்பற்றியும் இக் கூட்டம் வருந்துகின்றது.

(17) பத்துவருஷ காலமாக உபாத்திமைத் தொழிலைக் கையாண்டுவரும் தேர்ச்சி பெறாத ஆண்களும் 5 வருஷ காலமாக உபாத்திமைத் தொழிலைக் கையாண்டுவரும் பெண்களும் போதனா முறைக்கலாசாலைக்குச் செல்லாமலேயே நேராக போதான முறை பரிட்சைகளுக்கு உட்கார அனுமதி கொடுக்கப்படமென்பது.

(18) ஆரம்ப பாடசாலைகளின் உதவிக்காக வாங்கும் சாமான்களுக்கு முழு கிராண்டு அரசாங்கத்தார் கொடுக்கவேண்டுமென்பது.

(19) இன்னும் கொடுபடாத கட்டட கிராண்டுகளையும் இதர பாடசாலைச் சாமான்கள் கிராண்டுகளையும் உடனே கொடுத்துவிடும்படியான ஏற்பாட்டையும், இது விஷயமாக புதிதாகவரும் மனுக்களை அங்கீகாரம் செய்யும்படியான ஏற்பாட்டையும் அரசாங்கத்தார் சீக்கிரத்தில் செய்யும்படியாக கேட்டுக்கொள்ளுகின்றது.

(20) இக்கூட்டமானது அடுத்த ஆசிரிய மானேஜர்கள் மகாநாட்டை தென்னார்காடு ஜில்லாவில் நடத்த முன்வந்த திண்டிவனம், சர்வகோபால் பிள்ளையவர்களுக்கு மனமார்ந்த வந்தனமளிப்பதுடன் அவரது வரவேற்பை அங்கீகரிக்கின்றது.

---

24. ஆரம்பப் பள்ளிக்கூடங்கள் வருஷத்தில் 200 நாள்களுக்கு மேற்படாமலும், வாரத்தில் ஐந்து நாள்களுக்கு அதிகமின்றியும் தினத்திற்கு ஐந்து மணிநேரம் வீதமும் வேலை செய்யுமாறு ஏற்பாடுகள் அமைக்கப்படவேண்டுமென்பது.

25. ஆதிதிராவிடப் பிள்ளைகளுடைய கல்வியின் அபிவிருத்தியை நாடித் துரைத்தனத்தார் அவர்களைச் சம்பளமின்றி இலவசமாகச் சேர்த்துக்கொண்டு கல்வி சற்பிக்கும் உதவிபெறும் பள்ளிக்கூட மானேஜர்களுக்கு அதனல் ஏற்படும் வருமானக் குறைவு ஈடுசெய்வதற்காக ஒவ்வொரு ஆதித்திராவிடப் பிள்ளைக்கும் இரண்டு பங்கு வீதம் அந்த மானேஜர்களுக்குப் பொருள் உதவி செய்யவேண்டுமென்பது.

(36-ம் பக்கம் தொடர்ச்சி)

# சென்னை ஜில்லா ஆரம்பாசிரிய மானேஜர்கள், மானேஜர்கள் சங்கத்தின் முதல் மகாநாட்டில்

### வரவேற்புக் காரிய நிர்வாக சபையின் தலைவரான

### ஸ்ரீமான்,

### என். எஸ். இராமஸ்வாமி ஐய்யரவர்கள்

## செய்த சொற்பொழிவு.

(25-2-1933)

சீமாட்டிகளே ! கனவான்களே !!

இந்த மகாநாட்டின் வரவேற்புக் காரிய நிர்வாக சபையின் சார்பாக இன்று இங்கு கூடியிருக்கும், ஆசிரிய மானேஜர்களையும், மானேஜர்களையும், மற்றுமுள்ள கனவான்களையும் வரவேற்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்ததைப் பற்றி நான் மகிழ்ச்சியடைகின்றேன்.

இம்மாதிரியான மகாநாடு இச் சென்னையில் கூடியது இதுதான் முதலாவதாகும். இவ்வித மகாநாட்டைக் கூட்டுவதற்குக் காரணம் இப்பொழுதுள்ள ஆரம்பக் கல்வியின் அபாய நிலைமைதான். எய்டட் பாடசாலைகள் வருடத்திற்கு வருடம் குறைந்து கொண்டு போகிறதே யொழிய விருத்தியாவதாக தோன்றவில்லை. இதுவன்னியில் பொதுமக்களுடைய வரிபணத்தை அனுவசியமாக சிலவு செய்து லோகல் போர்டாரும், முனிசிபாலிடியாரும் நன்றாகவும் கெடுநாளாகவும் உழைத்துவரும் எய்டட் பாடசாலைகளுக்கு போட்டா போட்டியாக தங்கள் போர்ட் பாடசாலைகளை வைத்து உபத்திரவப்படுத்திவருகிறார்கள். கட்டாயஇலவசப் படிப்பு திட்டம் அமுலிலிருக்குமிடங்களில் பொதுப்பாடசாலைகளில் இலவசமாகவும், எய்டட் பாடசாலைகளில் சம்பளம் விதித்து கல்வி கற்பிக்கும்படியாகவும், கனம் மந்திரியவர்கள் வெகுவேடிக்கையாக ஆரம்பக் கல்விச்சட்டத்தை திருத்தி இருக்கின்றார். இதை கவனித்துப் பார்க்குமிடத்து ஆரம்பக் கல்வியை அதிலும் எய்டட் பாடசாலைகளை அடியோடு தொலைத்துவிடவேண்டுமென்பது கனம் மந்திரியவர்களுக்கு அபிப்பிராயம் போலும். இவ்வுபத்திரங்கள் ஒருபுரமிருக்க.

மற்றொருபக்கத்தில் அரசாங்கத்தாரும் கல்வி இலாகா அதிகாரிகளும், அனுவசியமாக மணிக்கொரு உத்திரவுகளைப் பிறப்பித்து எய்டட் பாடசாலைகளை போலீஸ் அதிகாரிகளைப் போல் உபத்திரவப்படுத்திவருகின்றனர். அரசாங்கத்தார்கொடுக்கும் கிராண்டோ வருடத்திற்கு வருடம் குறைந்து கொண்டு போகிறதே யொழிய அதிகப்படுவதில்லை. சொல்லிலும், எழுத்திலும் அடங்காதவைகள் இதைபோன்ற விஷயங்கள் அநேகம் உண்டு. இவைகளை எய்டட் பாடசாலை மானேஜர்கள் மாத்திரமல்லாமல், சுயராஜ்யம் வேண்டுமென்று போராடும் இக்காலத்தில் ஒவ்வொரு பொதுமக்களும், கவனிக்கவேண்டியது அவசியமாகும். இம்மகாநாட்டில் கூடியிருக்கும் நாமெல்லோரும் தற்போது சொல்லிய விஷயமன்னியில், இதைப் போன்ற பலவித முக்கிய விஷயங்களையும் நன்றாக ஆலோசித்து ஒருவித முடிவுக்கு வரவேண்டுமென்பது இம்மகாநாட்டின் கொள்கையாகும்.

தற்போதிய தேசமுன்னேற்றத்தை நோக்குமிடத்து ஆரம்பக் கல்வி எவ்வளவு முக்கியமானதென்பது தெற்றென விளங்கும். இதர முன்னேற்றமடைந்த நாடுகளைப்போல் தற்போது நமது நாட்டிலுங்கூட ஆரம்பக் கல்வி அதிகமாக விருத்தியாகவேண்டுமென்ற தீவிர உணர்ச்சி நம் தேச மக்களுக்கு உண்டாயிருப்பது அதிசயமல்ல தற்போது நமது நாட்டிலுள்ள தேசிய முன்னேற்றத்தை நோக்குமிடத்து அவ்வித உணர்ச்சி மிகவும் முக்கியம்தான். இது சம்மந்தமாக கனம் கல்விமந்திரியவர்கள் 1932ஹு ஆகஸ்டு மாதத்தில் சென்னை சர்வகலாசாலை பட்ட மளிப்பு விழாவில் கீழ்வருமாறு தேனொழுக பேசி இருக்கின்றார்.

"நாம் தற்போது நம் நாட்டில் ஏற்படப் போகின்ற அரசாங்க மாறுதலை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றோம். அவ்வித அரசாங்க மாறுதலில் நம் நாட்டிலுள்ள ஒவ்வொரு மக்களும் அரசாங்கப்பொருப்பை யேற்று அரசாங்கத்தை ஒழுங்காக நடத்தப்படவேண்டுமென்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றோம், அவ்வித பொருப்பை யடைந்து தேசிய இயக்கத்தில் சேர்த்து உழைப்பதற்கு அடிப்படையாக இருப்பதெது? அதுதான் கல்வி. மக்களுக்கு தேசீய உணர்ச்சியைக் கொடுப்பதாயும், முன்னாளில் நம்நாட்டிலிருந்த அறிவாளிகளைப்போலவும் சுத்த வீரர்களைப்போலவும், தற்கால மாணவர்கள் விளங்கும்படியாக தற்போதிலுள்ள கல்வியானது சீர்திருத்தப்படவேண்டும்."

கனம் மந்திரியவர்கள் தேனொழுக மேடைப் பிரசங்கம் செய்துவிட்டார். ஆனால் மேற்கூறிய எதிர்பாராத சம்பவங்களெல்லாம் யாருடைய ஆட்சியில் நடந்தது. தற்போதுள்ள கனம் மந்திரியவர்களின் ஆட்சியில்தான் இன்றும் நடந்துகொண்டிருக்கின்றது? மந்திரியவர்கள் மேடைப் பிரசங்கம் மேடையின்பேரில் எவ்விதமிருந்தது அவருடைய ஆட்சி இப்பொழுது செய்கைகளில் எவ்விதம் நடந்துகொண்டிருக்கின்றது.

ஒருகாலத்தில் இந்திய மக்களுக்கு கொஞ்சங்கூட கல்வி ஊக்கமில்லையென்று சொல்லிவந்தார்கள். அப்பழங்கதை ஒரு சமயம் அரசாங்க சீர்திருத்தமில்லாத நாட்களுக்கு முன்னிருந்திருக்கலாம். இதற்குப் பொருப்பாளி அரசாங்கம்தான். ஆனால் கல்வி அபிவிருத்தி விஷயத்தில் அரசாங்கத்தார் பொறுப்புடன் அவர்களால் ஈன்ற மட்டில் செய்துவந்தார்கள். இன்னும் செய்து வருகிறார்கள். 1920ஹு (மான்டேகோ செம்ஸ் போர்ட்) அரசியல் சீர்திருத்தம் வந்தபொழுது இரட்டையாட்சியில் சிக்கிக்கிடந்த கல்வி இலாகாவை முழுதும் பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்திய மந்திரியினிடத்தில் நம்தேச முழுதும் கல்வி மயமாக செய்து விடுவாரென்ற பெரும் நோக்கத்துடன் கல்வி யிலாகாவை கொடுக்கப்பட்டது. ஆனால் இந்த 12-வருஷங்களாக உண்மையில் என்ன நடந்ததென்பதை சற்று கவனித்தால், பொதுமக்களின் கல்விக் கண்கள் இன்றும் சரிவர திறக்கப்படவேயில்லை. படிக்காத பாமர ஜனங்கள் அதிகப்பட்டுக் கொண்டிருக்கின்றார்களே யொழிய குறைந்தபாடில்லை. இவ்விதமாக நான் கூறும்பொழுது நான் கல்வி மந்திரிகளின்மீது குறைகூறுவதாக நீங்கள் எண்ணுதல் கூடாது இது பரியந்தம் கல்வி விஷயத்தில் மந்திரிகள் செய்திருக்கும் சீர்திருத்தத்தைப்பற்றி நான் வந்தன மளிக்கத் தயாராயிருக்கின்றேன். சில வருஷங்களுக்கு முன்பு கல்வியை மக்களுக்கு தீவிரமாக பரப்ப வேண்டுமென்ற பரந்த நோக்கத்துடன் கல்வி விஷயத்தில் அநேக திட்டங்கள் கையாளப்பட்டன. அதுகாரணமாக இப்பொழுது அநேக பாடசாலைகளும், அதில் கல்விபயலும் மாணவர்களும் அதிகமாயினர். கல்விக்கென வராளமான பணம் சிலவாகிவருகிறதென்பதற்கு சந்தேகமில்லை. ஆனால் இவ்வளவு சிலவிற்கும் பிரதிபலன் கிடைத்ததாவென்பதுதான் கேள்வி. சில விடங்களில் கட்டாய இலவசப்படிப்பை பரப்பப்படவேண்டுமென்ற பரந்த நோக்கத்துடன் சில தாலூக்கா போர்டுகளும், முனிசிபாலிடிகளும் முயற்ச்சித்தனர். பண நெருக்கடியாலும், சுருக்கமின்மையாலும், எய்டட் பாடசாலைகளை யனுசரித்து வேலைசெய்யாததினாலும், கட்டாய இலவசப் படிப்பு ஆரம்பித்த நோக்கத்துடன் பரவாமல் தடைபெற்று நின்று கிடக்கின்றது. இன்னும் அநேகபிள்ளைகள் வாசியாமல் திரிந்து வருகின்றார்கள். மந்திரிமார்களும், பொது ஜன ஊழியர்களென பறைசாற்றும் பெரிய மனிதர்களும், செல்வமும், அதிகாரமும் வாய்ந்த கனவான்களும் மேடைகளின் பேரிலும், மகாநாடுகளிலும், அழகாக ஆரம்பக் கல்வி இவ்விதமிருக்கவேண்டும், அவ்விதம் செய்தல்வேண்டு மென்பதாக அவர்கள் எலெக்ஷன் ஆகும் பரியந்தம் பிரசங்கம் செய்து கெஞ்சிக் கூத்தாடுகின்றார்களே யொழிய, எலெக்ஷன் ஆனபிறகு ஆரம்பக் கல்வியைப்பற்றி கனவிலும் நினைப்பவர் ஒருவராவது கிடையாது. அரசாங்கத்தாரும், கல்வி இலாகா ஆட்சியை பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மந்திரியினிடத்தில் ஒப்பிவித்துவிட்டோம், மந்திரி பொருப்பாளியே யொழிய நமக்கென்ன வென்று பாராமுகமாயிருக்கின்றார்கள். நாளை சுத்த வீரர்களாகவும், கல்விமான்களாகவும், தேசாபிமானிகளாகவும், தேசமக்களாகவும் விளங்கக் கூடிய ஆயிரக்கணக்கான திக்கற்ற குழந்தைகளின் கதியை யார் கவனிக்கின்றார்கள். நமது தாய் நாட்டின் எதிர்கால க்ஷேமத்தை யார் கோருகின்றார்கள். இத்தகைய திக்கற்ற நிலையை கவனிக்கும் ஒவ்வொரு இந்தியன் மனமும் வருந்தாமல் இராது. இச்சம்பவம் மிகவும் வருந்தக்கூடியதுதான். உண்மையிலே இத்தகைய சம்பவங்கள் நடந்தேரி வருகின்றன.


இங்கு கூடியுள்ள ஆசிரிய மானேஜர்களும், மானேஜர்களுமல்லாமல், மற்றுமுள்ள முனிசிபல் அங்கத்தினர்களும், தாய் தந்தையர்களும், பொதுமக்களும் இம்மகா நாட்டின் கூட்டியதின் முக்கியநோக்கத்தையும், முடிவுக்கு வரவேண்டிய விஷயங்களையும் கவனிப்போமாக. நமது மாகாணத்தில் ஆங்கில ஆட்சி ஏற்பட்டகாலத்திலேயே ஆங்கில அரசாங்கமானது பொதுவாக கல்வியை, முக்கியமாக ஆரம்பக் கல்வியை, எய்டட் பாடசாலைகளின் மூலமாகத்தான் பரவப்படவேண்டுமென்று 1854௵த்தில் முடிவு கட்டியிருக்கின்றார்கள். ஏனெனில் ஏழ்மைத் தன்மையில் திண்டாடிக் கிடக்கும் நம் நாட்டில் ஒட்டிக்கு இரட்டையாக செலவு செய்து பாடசாலைகளை வைக்க முடியாது. இருக்கும் சொற்ப தொகையைக் கொண்டு எவ்வளவு அதிகமாக ஆரம்பக் கல்வியை பெருக்கவேண்டுமோ, அவ்வித முறைகளையே கையாள்வதே சிறந்த முறையாகும். ஏற்கனவே இந்திய நாட்டில் ஏராளமான எய்டட் ஆரம்ப பாடசாலைகள் அந்தந்த இடங்களுக்கு தக்கவாறு ஏற்படுத்தப்பட்டு ஒழுங்காக நடைபெற்று வருகின்றன. சுருக்கமான செலவில் பெருந்தொகையான குழந்தைகளுக்கு திறமான ஆரம்பக் கல்வி எய்டட் பாடசாலைகளில் கொடுக்கப்படுகின்றன. இது காரணங்கள் முன்னிட்டு 1920௵த்தில் ஏற்பட்ட அரசாங்க சீர்திருத்தத்திற்கு முன்னும் பின்னும் எய்டட் ஏஜன்சிகளுக்கு தீவிரமாக வேலை செய்ய ஏராளமான பொருளுதவியும், உத்சாகமாக வேலைசெய்ய இதரவித சௌகரியங்களையும் கொடுத்துவந்தார்கள். இப்பொழுது சென்னை மாகாணத்திலுள்ள 56000 ஆரம்ப பாடசாலைகளில் 33000 பாடசாலைகள் எய்டட் பாடசாலைகளே. பிள்ளைகளிலும் 26 லட்சம் பிள்ளைகளில் 14 லட்சம் பிள்ளைகள் எய்டட் பாடசாலைகளிலேயே பெருவாரியாக கல்வி பயின்று வருகிறார்கள். அடுத்த பக்கத்தில் காட்டியிருக்கும் படத்தை பார்க்கின் தெற்றென விளங்கும்.

இச்சென்னைமா நகரிலுள்ள 436 ஆரம்ப பாடசாலைகளில் 245 பாடசாலைகள் எய்டட் பாடசாலைகளே. வாசிக்கும் 65000 குழந்தைகளில் 32000 குழந்தைகள் எய்டட் பாடசாலைகள் வாசிக்கின்றார்கள்.


கடந்த ஐந்து வருஷங்களாக அரசாங்கத்தார் 1854 வருஷம் முடிவு செய்திருந்த அபிப்பிராயத்தை, வெளிப்படையாக இல்லாவிடினும் அந்தரங்கமாக மாற்றிக்கொண்டு வருவதாக தெரிகின்றது. அதனுடைய பலன் யாதெனில் எய்டட் பாடசாலைகளின் தொகை நாளுக்கு நாள் குறைந்துகொண்டு போகின்றது. பொது மக்களுடைய பணம், பண நெருக்கடியான இக்காலத்தில் அதிகமாகிக்கொண்டே வருகின்றது. உதாரணமாக முதல் முதலில் உதவிபெறாத பாடசாலைகள் ஒன்றின்பின் ஒன்றாக விருத்தியாகிக்கொண்டேவரும். பிறகு இரண்டொருவருஷத்தில் ஆரம்பபாடசாலைகள் அங்கீகாரம் பெற்று எய்டட் பாடசாலைகளுடன் சேர்ந்துவிடும். இப்பொழுது பார்த்தால் 1924-1925-ம் வருஷத்தில் இருந்த 2820 உதவி பெறாதபாடசாலைகளில் இப்பொழுது (1931-1932) 800 பாடசாலைகள்தான் இருக்கின்றன. இதற்குக் காரணம் என்ன? இதற்குக் குக்காரணம், அரசாங்கமும், லோகல் போர்டாரும்தான். ஏனெனில் அரசாங்கத்தார் ஆரம்பக் கல்வி நிதியொன்று ஏற்படுத்தி லோகல் போர்டார்களை அதற்கு டிரஸ்டிகளாக ஏற்படுத்தி, ஆரம்பக் கல்வியை பரவச்செய்யும்படி ஆரம்பக் கல்விச் சட்டத்தில் ஏற்பாடு செய்தார்கள். லோகல் போர்டார் தங்கள் தாலூக்காவிலுள்ள எய்டட் பாடசாலைகளை அடியோடு மறந்துவிட்டு கல்வி நிதியிலுள்ள பணத்தை பாடசாலைகளேயில்லாமலிருக்குமிடத்தில் பாடசாலைகளை வைப்பதை விட்டு, நன்றாக நடைபெற்றுவரும் எய்டட்பாடசாலைகளுடன் போட்டாப்போட்டியாக ஒட்டிக்கு இரட்டை செலவில் தங்கள் பாடசாலைகளை ஏற்படுத்தி, எய்டட் பாடசாலைகளை எடுத்துவிடவும் முயற்சி செய்துவருகிறார்கள். இது சம்மந்தமாக அரசாங்கத்தாரும் அவ்விதம் லோகல் போர்டார் செய்வது மிகவும் பிசகென்பதாக அநேக உத்திரவுகளை பிறப்பித்திருக்கின்றார்கள். அதை லோகல் போர்டார் அநேகமாக மாக அவ்வுத்திரவுகளை கவனிப்பதே கிடையாது. அரசாங்கத்தார் உத்திரவுகளைப் பிறப்பித்தார்களே யொழிய தாலூக்கா போர்டார்கள் எய்டட் பாடசாலைகளிருக்குமிடத்தில் பொதுப் பாடசாலைகளை வைப்பதற்கு பண உதவி செய்து வருகிறார்கள். இவ்விதச் செய்கை எய்டட் பாடசாலைகளுக்கு மிகவும் துரதிர்ஷ்டமான விஷயமாகும். லோகல் போர்டார் ஆங்காங்கு சிதறிக்கிடக்கும் பலவகையான எய்டட் பாடசாலைகளை பொதுப்பாடசாலைகளுடன் இணைத்து ஆரம்பக் கல்வியை பரப்புவதை

## சென்னை இராஜதானியிலுள்ள மானேஜ்மெண்டுகள் பிரகாரம்

ஆரம்ப பாடசாலைகளின் தொகையைக் காட்டும் படம்.




பாடசாலைகளில் வாசிக்கும் பிள்ளைகளின் தொகையைக் காட்டும் படம்.



விட்டு, தாங்கள் ஏற்படுத்தும் பொதுப்பாடசாலைகளுக்கு மாத்திரம் கல்வி வரிபெற்று பொதுமக்களிடத்தில் பணம் பறித்து செலவு செய்கிறார்களேயொழிய, இதர பாடசாலைகளைப் புறக்கணிக்கின்றார்கள். இவ்விதம் செய்வதினால் ஆரம்பக் கல்வி யெவ்வாறு பரவும். சில சமயங்களில் அளவுக்கு மீறி அனாவசியமாக அதிகப்படியான பாடங்களையும், உபாத்தியாயர்களையும் வைத்துவிட்டு கடைசியில் பணத்திற்கு திண்டாடுகிறார்கள். இவ்விதம் லோகல் போர்டார் செய்துவருவதினால் குறைந்தகாலத்தில் சுருங்கின செலவில், ஆரம்பக் கல்வி நமது நாட்டில் தீவிரமாக பரவுவதற்கு வழியில்லாமலிருக்கின்றது. பாடசாலைகளின் திறமையும் நாளுக்கு நாள் குறைந்துவருகின்றது. எதிர்காலத்தில் நாளை சிறந்த தேசாபிமானிகளாக விளங்கக்கூடிய தற்போதுள்ள குழந்தைகள் கல்வியற்று திண்டாடி நிற்கின்றார்கள். அரசாங்கமே அதிகமாக செலவழித்து கல்வியை போதிக்க சக்தியுள்ள நாடுகளிலுங்கூட, ஆங்காங்குள்ள எய்டட் பாடசாலைகளை அனுசரித்தும், ஒத்துழைத்தும் கல்வியைப் பரப்பி வருகின்றார்களென்றால், ஏழ்மையே குடிகொண்ட நம் இந்திய நாட்டில் ஒன்றுக்கு இரண்டாக ஏழைமக்களின் வரிபணத்தை செலவழித்து, எய்டட் பாடசாலைகளின் உதவியின்றி ஆரம்பக்கல்வியை எவ்வாறு பறப்பமுடியும். அரசாங்கத்தார் நடத்தும் பாடசாலையில் ஒரு வருஷத்திற்கு ஒரு குழந்தைக்கு ரூ. 11-0-0 செலவாகின்றது, முனிசிபாலிடியார் (ரூ. 15-5-4), லோகல் போர்டார் ரூ. 11-0-0 செலவு செய்கிறார்கள் ஆனால் எய்டட் பாடசாலையிலோ ஒரு குழந்தைக்கு 7 ரூபாய்தான் ஆகின்றது. இக் குறிப்பை பார்க்கின்றபொழுது எவ்வித பாடசாலைகளைக்கொண்டு ஆரம்பக் கல்வியை சுருங்கிய செலவில் நமது நாட்டில் அதிகமாக பரவச் செய்யலாமென்பது உங்களுக்கு உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெற்றென விளங்கும். இப்பொழுது எய்டட் பாடசாலைகளில் வாசித்து வரும் 1380000 பிள்ளைகளை பொதுப்பாடசாலைகளின் மூலமாக கல்வி கற்பிக்கவேண்டுமானால், ஒரு பிள்ளைக்கு சராசரி 10-ரூபாய் வீதம் 140 லக்ஷ ரூபாய்கள் ஆகும். ஆனால் இப்பொழுது எல்லாவிதமான ஆரம்ப பாடசாலைகளுக்கும் பொதுவாக ஆரம்பக் கல்விக்கும் அரசாங்கத்தார் 132 லக்ஷம் தான் செலவழிக்கின்றார்கள். இக் குறிப்பை கவனிக்கின்றபொழுது எந்த காலத்திலாவது 32300 எய்டட் பாடசாலைகளை துலைத்துவிட்டு அரசாங்கத்தாரோ, லோகல் போர்டாரோ பொதுப்பாடசாலைகளை அவ்விடங்களில் ஸ்தாபிப்பது அசாத்தியமான தென்பதற்கு ஐயமில்லை.

உதாரணமாக சென்னையை எடுத்துக் கொள்ளலாம். இம் மகா நாடும் சென்னையிலுள்ள பாடசாலைகளைக் குறித்துதான் கூட்டப்பட்டிருக்கின்றது. நகர பரிபாலன சபையார் 140 பாடசாலைகளுக்கு பொதுமக்களுடைய வரி பணத்திலிருந்து 8 லக்ஷம் செலவு செய்கிறார்கள். 245-எய்டட் பாடசாலைகளுக்கு பொதுமக்களுடைய பணம் 3-லக்ஷம் ரூபாய்கள்தான் செலவாகின்றன. இந்த 245 எய்டட் பாடசாலைகளை எடுத்துவிட்டு நகர பரிபாலன சபையார் பாடசாலைகளை ஏற்படுத்த வேண்டுமானால் சுமார் 8-லக்ஷம் ரூபாய்கள் வேண்டும். இந்த நிலையில் நகர பரிபாலன சபையார் எய்டட் பாடசாலைகளை எக்காலத்திலாவது எடுத்துவிட கனவிலும் நினைக்கக்கூடாது காரியம், இப்பாடசாலைகளில் ஒரு பிள்ளை வாசிக்க ஒரு வருஷத்திற்கு ரூ. 26 ஆகின்றன. கனவான்களே இந்நிலையில் நகர பரிபாலன சபையார் எய்டட் பாடசாலைகளுக்கு தாராளமாக நஷ்ட ஈடுதொகையைக் கொடுத்தாதரித்து சட்டாய இலவச ஆரம்பக் கல்வியை தீவிரமாக பரப்புவதா? அல்லது தங்கள் பாடசாலைகளை போட்டா போட்டியாக ஒன்றுக்குமூன்றாக செலவுசெய்து தங்கள் பாடசாலைகளை ஸ்தாபிப்பதா? எதுசிறந்த முறையாகும்? எது பொதுமக்களுக்கும் தேசத்துக்கும் பண விஷயத்தில் உபகாரமானது? ஆனால் சிலர் எட்டட் பாடசாலைகளில் கொடுக்கும் கல்வி பொதுப்பாடசாலைகளைக் காட்டிலும் அவ்வளவு திறமையாகவும், சிலாக்கிய மாகவும், இல்லையென்று வாதிப்பார்கள். இது விஷயத்தில் நான் வாதம் செய்ய தயாராயில்லை. திறமையான கல்வி யென்பது பொதுப்பாடசாலைகளுக்கு மாத்திரம் குத்தகையன்று. ஒரு சமயம் எய்டட் பாடசாலைகள் தேர்ச்சியில் சிலவருஷங்களுக்கு முன்பிருந்த அவ்வளவு தற்போது இல்லாமலிருக்கலாம்.

இப்பொழுதுங்கூட அநேக எய்டட் பாடசாலைகள் திறமையாக நடைபெறும் பாடசாலைகளுக்கு சரிசமானமாக நடப்ப தன்னியில், இன்னும் பொதுப் பாடசாலைகளைக் காட்டிலும் அதிக திறமையாக நடந்துவருகின்றன. இப்



பொழுது சில எய்டட் பாடசாலைகள் சில வருவருஷங்களாக திறமையாக நடைபெருவதற்கு சிற்சில இடைஞ்சல்கள் உண்டாயிருக்கின்றனவென்பதை நான் ஒத்துக்கொள்ளுகின்றேன். எய்டட் பாடசாலைகள் பூர்வீகத்தில் திறமையற்று இருந்ததில்லை. இப்பொழுது அரசாங்கத்தில் அறிய பெரிய உத்தியோகங்களை வகித்துவரும் பெரியமனிதர்களும், மந்திரிகளும் சட்டசபை அங்கத்தினர்களும், தேசாபிமானிகளும், ஆதியில் அக்ஷராப்பியாசம் செய்ததும் ஆரம்பக் கல்வி கற்றதும், இந்த எய்டட் பாடசாலைகளிலேதான். கிராம உபாத்தியாயர்கள் பெற்றோர்களைக் காட்டிலும் பதின்மடங்கு நம்மை அன்புடன் வரவேற்று, நமக்கு ஊட்டின சிறந்த கல்வி இன்றும் என்மனதில் பசுமரத்தாணி போல் பதிந்து என் ஞாபகத்திலிருக்கின்றது. அத்தகைய சிறந்த கல்வி போதித்துவந்த எய்டட் பாடசாலைகள் தற்போது சீர்கேடடைந்ததற்கு யார் காரணம்? டிபார்ட் மெண்டாரும், லோகல் போர்டாரும், பொதுமக்களோ? 32000 எய்டட் பாடசாலைகளில்பெருவாரியான 18000 பாடசாலைகள் ஆசிரிய மேனேஜர்களாலேயே பரிபாலிக்கப்பட்டுவருகின்றன. இந்த ஆசிரிய மானேஜர்கள் தங்கள் நாட்டில் ஆரம்பக் கல்வியை விருத்தியாக்கவேண்டுமென்கிற பெருநோக்கத்தோடு, உபாத்திமைத்தொழிலை எடுத்துக்கொண்டதுடன் தாங்களும் அதில் ஜீவித்துவருகின்றார்கள். ஒரு காலத்தில் ரிஸல்ட் கிராண்டு ஏற்பாட்டினாலும், பிள்ளைகளின் மீது கொடுத்துவந்த கிராண்டினாலும், இவர்களுக்கு தங்கள் உழைப்புக்குத் தக்கவாறு பண உதவி கிடைத்துவந்தது. தாங்களும் தங்கள் பாடசாலைகளை ஒழுங்காகவும், திறமையாகவும், நடத்தி ஆரம்பக் கல்வியை வளர்ப்பதற்கு அனுகூலமாயிருந்தது. இன்னும் தற்போதைப்போல் உபாத்தியாயர்களை வைத்துக்கொண்டு, உபத்திரவப்படாமல், மாணவ உபாத்தியாயர்களை வைத்துக்கொண்டு தங்கள் பாடசாலைகளை திறமையாக நடத்திவந்தார்கள். அம்மாணவ உபாத்தியாயர்களுக்கு உபாத்தியாயர் உயர்தரக்கல்வியை தனிப்பட கற்றுக்கொடுத்துவந்தார். பிள்ளைகளும் உபாத்தியாயர் என்று பயபக்தியுடன் காணிக்கைகளை ஒழுங்காக செலுத்திவந்தார்கள். பணமில்லாத மக்கள் நெல் முதலியன தானியவகைகளையும், காய்கறி வகைகளையும், அந்தந்த காலங்களிலும் சமர்ப்பித்து, கிராமத்தாரும் உபாத்தியாயரைத் தங்கள் குடும்பத்தில் ஒருவராக பாவித்து, பேதகமின்[illegible] து சுகமாக வாழ்ந்துவந்தார்கள். இ[illegible] லும் இம்மாதிரி பழக்க வழக்கங்கள் பல [illegible] மங்களிலும் இன்றும் காணலாம். ஆனால் தற்போது சம்பளங்கள் கொடுத்து வாசிக்கும் பழக்கங்கள் இலவசப் பொதுப்பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்ட நாள் முதற்கொண்டு, மறைந்து கொண்டேவருகின்றது அதுவுமல்லாமல் உபாத்தியாயர்களின் மீது கணக்கிட்டு கொடுக்கும் கிராண்டு முறையும் தற்போதுள்ள ஸ்கேலை கவனிக்கின்றபொழுது மானேஜர்கள் பொருத்தமட்டில் அனுகூலமாய் இருப்பதாக தெரியவில்லை. தற்போதுள்ள ஸ்கேல் கிராண்டானது பல வருஷங்களுக்கு முன்பு பிள்ளைகளிடமிருந்து நன்றாக சம்பளம் வசூலிக்கவல்ல நிலைமயில் எய்டட் பாடசாலைகள் இருந்தபொழுதும், மாணவ உபாத்தியாயர்களைக்கொண்டு நடத்தப்பட்டபொழுதும், ஏற்படுத்தப்பட்டன. ஒரு சமயம் அக்காலத்தில் இந்த ஸ்கேல் கிராண்டு தகுதியாக இருந்திருக்கலாம். இப்பொழுதோ பிள்ளைகளிடத்தில் சம்பளம் வசூல் செய்வதே அசாத்தியமாக இருக்கின்றது. மேல் அதிகாரிகளோ தேர்ந்த உபாத்தியாயர்களை அதிகமாக வைத்து நடத்த வேண்டுமென்று நிர்பந்தித்துவருகிறார்கள். ஆனால் கிராண்டின் ஸ்கேலை அதிகரித்து கொடுக்க நிர்ப்பந்திப்பவர்கள் ஒருவருமில்லை. மானேஜர்கள் முன்னதாக செலவழித்த பணம் குறையாமல் திரும்பிவருவது சந்தேகமாயிருக்கின்றது. சில சமயங்களில் செலவழித்ததில் பாதியும் கைக்குக் கிட்டுவது அறிதாக இருக்கின்றது அதற்குக் காரணங்களைக் கேட்பின் கல்வி அதிகாரிகள் பாடசாலை திறமையாக நடக்கவில்லை. கிராண்டு குறைந்துவிட்டது என்பதாக கண்ணைத்துடைக்கின்றார்கள். ஒழுங்காக நடைபெற்றுவரும் ஆரம்பக் கல்வி திட்டத்தில், திறமையுள்ள பாடசாலைகளென்றும் திறமையற்ற பாடசாலைகளென்றும் எவ்வாறு இரண்டு வகையாக பிரித்தல் முடியும். ஒன்று சரியாக நடப்பின் வைத்துக்கொள்ளவேண்டும். இன்றேல் அவைகளை நீக்கப்படவேண்டும். ஒழுங்கற்ற பாடசாலைகளுக்கு சட்டம் எவ்வாறு இடம்தரும். இவைகளெல்லாம் டிபார்ட்மெண்டார் செய்யும் கண்கட்டு வித்தைகளேயன்றி வேறன்று. இவர்கள் இஷ்டப்பட்டால் எல்லாம் திறமையுள்ள பாடசாலைகளே. உதாரணமாக ஒரு பாடசாலையின் பரிட்சை ரிபோர்ட்டைப் பார்த்த

ரே வாசிப்புள்ள ஒரு உபாத்தியா பல விடங்களில் பலவித கிராண்டு க்கப்பட்டிருக்கின்றது. இரண்டு உபாத்தியாயர்கள் வேலைசெய்துவந்த இடத்தில் ஒரு உபாத்தியாயருக்கு கிராண்டு கொடுத்து மற்றொரு உபாத்தியாயர் அதிகமென்பதாக கிராண்டை அடித்துவிட்டிருக்கின்றது. டிபார்மெண்டார் செய்யும் இதைப்போன்ற பலவித தாருமாறுதல்களான விஷயங்கள் பலவுள. அவைகளை யார் கண்டிப்பது? இவைகளையெல்லாம் மானேஜர்கள் வாய்திறக்காமல் ஒப்புக்கொள்ளல் வேண்டும்.

திறமையற்ற பாடசாலைகளென்பதே கனவில் கண்ட கானல் ஜலமாகும். உண்மையைக் கூறுமிடத்து, நன்றாக ஒழுங்குடன் நடைபெறும் ஆரம்பக் கல்வி திட்டத்தில் அத்தகையான பாடசாலைகளை இருக்கமுடியாது. கல்விவரி செலுத்திவரும் தாய் தந்தையராயினும் சரி, கல்விவரி கொடாத தாய் தந்தையராயினும் சரி, தங்களுடைய குழந்தைகளுக்கு சரியான முறையில் தேசீயக் கல்வியை, எவ்வித பாடசாலையிலாயினும் அரசாங்கத்தாரைக் கொடுக்கும்படி வற்புருத்த அதிகாரமுண்டு. அதற்கு அரசாங்கமும் கட்டுப்பட்டிருக்கின்றது. ஒரு எய்டட் பாடசாலை சரியான முறையில் நடக்கவில்லையானால் அதை எடுத்துவிட்டு ஒன்றுக்கிரண்டாக சிலவழித்து பொதுப்பாடசாலையை ஸ்தாபனம் செய்வது சரியான பரிகாரமன்று. அப்பாடசாலை திறமையுடன் நடப்பதற்கு போதுமான பொருளுதவியை தாராளமாகக் அரசாங்கத்தார் கொடுக்கவேண்டும். அவ்விதம் கொடுத்து அப்பாடசாலை ஒழுங்கற்று நடக்குமானால் இரண்டொருமுறை எச்சரிக்கை செய்து பிறகு அப்பாடசாலையை அடியோடு ஒழிக்கவேண்டும்.

உதாரணமாக சென்னையிலுள்ள எய்டட் பாடசாலைகள் பலவித கஷ்டங்களுக்கு ஈடுகொடுத்து போராடிக்கொண்டிருப்பதற்குக் காரணம் என்ன? வருடா வருடம் கிராண்டுகள் குறைந்து கொண்டிருக்கும் தொல்லைதான். முதலாவதாக கட்டாய இலவச சட்டம் அமுலுக்கு கொண்டுவந்தபொழுது 5-வருடங்களுக்குப் பிறகு நஷ்டஈட்டை கார்ப்பரேஷனர் கொடுப்பார்களோ நிறுத்திவிடுவார்களோ வென்ற திகில் மானேஜர்களுக்கு இருந்துவந்தது. அது ஒருவாறு ஒழிந்து எப்பொழுதும் நஷ்ட ஈட்டைக்கொடுக்கலாமென்பதாக அரசாங்கத்தார் தீர்மானித்தனர். அதன் பிறகு நஷ்ட ஈட்டை எந்த முறையில் கணக்கிட்டுக் கொடுப்பதென்பதாக தகரார்கள் ஏற்பட்டது. அதுவும் ஒருவாறு முடிவுபெற்றது. பிறகு இந்த நஷ்ட ஈட்டுத்துகையை எந்த பண்டிலிருந்து கொடுப்பதென்ற ஒரு பெரிய விவாதம், கவர்ன்மெண்டாருக்கும், கார்ப்பரேஷனருக்கும் மூண்டுவிட்டது. கார்ப்பரேஷனர் எடுகேஷனல் பண்டிலிருந்து கொடுக்கவேண்டுமென்றார்கள். அரசாங்கத்தார் இல்லை இல்லை ஒரு அளவுதான் எடுகேஷனல் பண்டிலிருந்து கொடுக்கவேண்டும் மற்றத்துகையை ஜெனரல் பண்டிலிருந்து கொடுக்கவேண்டுமென்றார்கள். இவர்கள் விவாதத்தில் எய்டட் பாடசாலைகள் பல மாதங்களாக சம்பளமும் வசூலிக்க முடியாமல், நஷ்ட ஈட்டையும் அடையாமல் நடுத்தெருவில் நின்றது. இவர்கள் சண்டையை மத்தியஸ்தம் செய்ய எவரால் முடியும். இரண்டு பூனைகளும் சட்டையிட்டு அப்பத்துண்டைக் குரங்கினிடத்தில் கொடுத்ததுபோல, இருதாத்தாருக்கும் பொதுவாக, கனம் கல்வி மந்திரியவர்கள் எய்டட் பாடசாலைகள், கட்டாய இலவசக் கல்வி பரவுமிடங்களில் சம்பளம் விதித்துக் கொள்ளலாமென்பதாக, நஷ்ட ஈடு என்ற விஷயத்தை அடியோடு துலைத்துவிட்டு, 1931௵ ஆரம்பக் கல்வி சட்டத்தை வெகு புத்திசாலித்தனமாக திடீரென திருத்தி விட்டார்.

இவ்வித அசம்பாவிதமாக முன்பின் கவனியாது கனம் மந்திரியவர்கள் செய்துவிட்ட திருத்தத்தின் முடிவு என்ன? பொதுப்பாடசாலைகளில் மாத்திரம் பிள்ளைகளுக்கு இலவசமாக கல்வி கற்பிக்கப்படுகின்றது. இதர பாடசாலைகளில் ஆரம்பக் கல்வி கற்கும் குழந்தைகளுக்கு சம்பளம் விதித்திருக்கின்றது. காலஞ்சென்ற ஆரம்பக்கல்வியின் தந்தையென விளங்கின, கோபால கிருஷ்ண கோகலே 1910௵த்தில் அப்பொழுதிருந்த வைஸிராய் சபையில், பிள்ளைகளுக்கு இலவசமாக எல்லாப் பாடசாலைகளிலும், கட்டாயப் படுத்தி ஆரம்பக் கல்வியை போதிக்கப்படவேண்டுமென்பதாக ஒரு மசோதாவைக் கொண்டுவந்தார். அம்மாதிரியாகவே சென்னையில் ஏற்படுத்தப்பட்ட 1920௵ ஆரம்பக் கல்விச் சட்டத்திலும் பிள்ளைகளை கல்விகற்க கட்டாயப்படுத்தும்பொழுது இலவசமாக கல்வி கற்பிக்கவேண்டுமென்ற ஓர் சீர்திருத்தம் ஏற்படுத்தப்பட்டிருந்தது. 10வருடங்களாக இருந்து வந்த ஒரு சீர்திருத்தத்தை தற்போதுள்ள கனம் கல்வி மந்திரியவர்கள் ஒரு நிமிஷத்தில் மாற்றிவிட்டார். இந்த இராஜதானியில் ஆரம்பக்கல்வி ஆட்சியில் இது ஒரு பெரிய குறைபாடு. பொது ஜனங்களின் பிரதிநிதிகளென்று விளங்கும் சட்டசபை அங்கத்தினர்களும், இவ்வித பெரிய மாறுதலுக்கு எவ்விதம் இடங் கொடுத்தனரென்பதை நினைக்க ஆச்சரியமாக இருக்கின்றது.



இவ்வித எதிர்பாராத துரத்திர்ஷ்டமாக ஆரம்பக்கல்வியில் ஏற்பட்ட மாறுதலைப்பற்றி எவரையும் தூஷிக்கவேண்டுமென்பது நமது நோக்கமன்று. இவ்வித மாறுதலினால் சென்னையில் ஆரம்பக்கல்வியின் நிலைமை எவ்வாறிருக்கின்றதென்பதைப் பற்றி கவனிக்கவேண்டியதுதான் நம்முடைய நோக்கம். இம்மாருதலினால், செல்வந்தர்கள் வசிக்கும் சில இடங்களிலுள்ள பாடசாலைகளிலும், பொதுப்பாடசாலை போட்டாப் போட்டி இல்லாத இடங்களிலுமுள்ள சில பாடசாலைகளிலும், சற்றேறக்குறைய நஷ்ட ஈட்டுத் துகைக்கு சமமாக வசூலித்து வருவதாக சில பாடசாலை மானேஜர்கள் சொல்லுகிறார்கள். ஆனால் பெருவாரியன இடங்களிலும் முக்கியமாக ஏழை மக்கள் வாசஞ் செய்யுமிடங்களிலுமுள்ள எய்டட் பாடசாலைகளில், சம்பளமே வசூலிக்க அசாத்தியமாக இருக்கின்றது. ஏழுவருடங்களாக இலவசமாக கற்றுவந்த குழந்தைகளின் பெற்றோர்கள் பொதுப்பாடசாலைகளல்லாமல், இதர பாடசாலைகளிலும் தாங்கள் கல்வி வரி செலுத்தி வருவதினால் தங்கள் குழந்தைகளுக்கு, இலவசமாக கல்வி கற்பிக்கவேண்டுமென்பதாக வாதம் செய்கின்றனர்.

சில இடங்களில் போட்டாப் போட்டியாக பொதுப்பாடசாலைகள் ஏற்படுத்தப்பட்டிருப்பதால் சம்பளத்தை கேட்கவே முடியாது. இவ்விதமாக சம்பளமும் வசூலிக்க முடியாமல், நஷ்ட ஈட்டையும் அடையாமல், வருடத்திற்கு வருடம் கிராண்டுகளையும், குறைத்துவாங்கிக்கொண்டு எவ்வாறு திறமையாக நடைபெற முடியும். இப்பொழுது சில பாடசாலைகள் திறமையற்றிருப்பதில் அதிசயமில்லை.' இதுவிஷயங்களில் பழைய மாதிரியாக சில மாறுதல்கள் சீக்கிரத்தில் ஏற்பட்டாலன்றி நன்றாக நடைபெற்றுவரும் பாடசாலைகளும் கூட சீக்கிரத்தில் அழிந்து போகுமென்பதில் மில்லை. அவ்விதமழிந்து போய்விடுமாயின் தகைய பாடசாலைகள் அந்த இடங்களை கைக்கொள்வது? பணமற்ற கார்ப்பரேஷனரும் ஒரு பாடசாலையும் திறக்கமுடியாது. இந்த நிலையில் கனவான்களே கார்ப்பரேஷன் அங்கத்தினர்களும், சட்டசபையங்கத்தினர்களும், கைகட்டி மௌனம் சாதித்து உட்கார்ந்திருப்பதின் காரணம் என்னவென்பது விளங்கவில்லை. தற்போதுள்ள ஆரம்பக் கல்வியின் அபாய நிலைமையை போக்கி கார்ப்பரேஷன், அங்கத்தினரும் அரசாங்கத்தாரும் உடனே முன்வந்து எய்டட் பாடசாலைகள் முன்போன்று திறமையுடன் நடைபெறும்படி செய்யவேண்டியது அவர்களது கடமையாகும். ஒன்று ஆரம்பக்கல்விசட்டத்தை பழையபடி சீர்திருத்தவாவது வேண்டும், இல்லையேல் கார்ப்பரேஷனாவது குறைந்தது எந்த பாடசாலைகள் சம்பளம் வசூலிக்க முடியாமல் திண்டாடுகின்றதோ, அப்பாடசாலைகளுக்கு மட்டுமாவது ஒருவித பொருளுதவி செய்துவரல்வேண்டும். ஒருவருஷகாலமாக இதுவிஷயமாக கார்ப்பரேஷனர் யோசித்துக்கொண்டு வருகிறார்களே யொழிய இது பரியந்தம் ஒரு முடிவுக்கும் வந்தபாடில்லை. சில அங்கத்தினர்கள் பணமில்லையென்கிறார்கள். இது விஷயத்தில் சற்றேனும் எனக்கு நம்பிக்கையில்லை. நம்தேசம் இதர நாடுகளைப்போல், முன்னுக்கு வரவேண்டுமானால் முதலில் ஆரம்பக் கல்வி நம் நாட்டில் அதிகமாக வளர்க்கப்பட வேண்டுமென்று போராடும் இந் நாட்களில், இருக்கும் பொருளில் ஆரம்பக் கல்விக்கு முதலில் எடுத்து வைத்துவிட்டு மிகுந்திருப்பதையே மற்றவைகளுக்கு சிலவுசெய்வது நியாயமும், தருமமும் ஆகும். திடீரென்று ஒரு காலராவோ, அம்மையோ உண்டாகின்றபொழுது எங்கிருந்து கார்ப்பரேஷனருக்கு பணம் கிடைக்கின்றது. தொத்து நோய்களும் அகால மரணங்களும் உண்டாவதற்கு காரணமென்ன? கல்வியின்மையால், அறிவின்மையும், அறியாமையைப்போக்கி நோய்களை ஒழிப்பதா. அல்லது கல்வி இல்லாமல் அறியாமையை வளர்த்து நோய்களுக்காக ஏராளமான பொருள் சிலவு செய்வதா? இவைகளையெல்லாம் சீர்தூக்கி பார்க்குமிடத்து கார்ப்பரேஷன் அங்கத்தினர்களுக்கு கல்விக்காக பணம் கொடுக்க இஷ்டப்படவேயில்லையென்றுதான் சொல்ல வேண்டியிருக்கின்றது. ஆதலால் கார்ப்பரே

## ஆரம்பக் கல்வி.

...கத்தினர்களாயுள்ள எனது நண்பர் ...கேட்டுக்கொள்வ தென்னவெனில், கட்சி பேதங்களையும், தனிச் சண்டைகளையும், அசட்டுத்தனத்தையும், கட்டி தூரவைத்து விட்டு நஷ்ட்ட ஈட்டு விஷயத்தை சாந்தமாக அதிக பொருப்புடன் திரயோசித்து, சீக்கிரத்தில் எல்லோருக்கும் சம்மதமான ஒரு முடிவுக்குவரும் படியாக கேட்டுக்கொள்ளுகின்றேன், அரசாங்கத்தாரும் நஷ்ட்ட ஈடு கொடுக்கும் விஷயத்தில் சட்டத்தை சீர்திருத்தவாவது வேண்டும், இல்லாவிடில் கார்ப்பரேஷனை எடுகேஷன் பண்டிலிருந்து கொடுக்கும்படி அனுமதி கொடுக்கவேண்டும். கடைசியில் பார்க்குமிடத்து எல்லா பணமும் வரி செலுத்துவோரின் பணங்களே. எந்த பண்டிலிருந்து கொடுத்தாலென்ன. வரிப்பணம் வரிசெலுத்துவோரின் ...ன்மைக்கென செலவிட வேண்டியதுதான். முக்கியம், இம்மகா நாட்டின் தலைவரும், மற்றுமுள்ள முக்கியமான கார்ப்பரேஷன், சட்டசபை அங்கத்தினர்களும் இம்மகா நாட்டிற்கு வந்து நம்மை கௌரவப்படுத்தினது நம்முடைய கஷ்ட்ட நிஷ்டங்களில் அனுதாபமுடையவர்கள் என்பதை தெரிவிக்கும் அறிகுறியாகும். இவர்களை நான் தனிமையாக ஒன்று கேட்டுக்கொள்வது யாதெனில் தங்களுக்குள்ள எல்லாவித சக்தியையும், செல்வாக்கையும் உபயோகித்து சென்னையில் எதிர்கால கல்வியின் அவிவிருத்தியை எதிர்த்து நிற்கும் நிலைமையை அடியோடு ஒழித்துவிடவேண்டுமென்பதே.

கனவான்களே கல்வி விஷயத்தில் இரகசியமாகவோ, தந்திரமாகவோ பேசவேண்டுமென்பது எனது கோரிக்கையல்ல. என்மனதிற்கு என்ன உண்மையில் பட்டனவோ, அவைகளை அப்படியே, வெளியிட்டிருக்கின்றேன். அவ்விதம் பேசினதற்கு என்னை நீங்கள் மன்னிக்கக்கடவீர்கள். எல்லா ராஜீய கட்சிக்காரர்களும், அரசாங்கமும், சட்டசபை அங்கத்தினர்களும், லோகல் போர்டார்களும், பொதுமக்களும், கல்வி விஷயத்தில் தங்களது பொறுப்பை உணராது கல்வியை இத்தகைய கீழ் நிலையில் கொண்டுவந்துவிட்டது மிகவும் துரத்திரஷ்டமான சம்பவமாகும். கனம் கல்வி மந்திரியவர்கள், சர்வகலாசாலைகளிலும், மற்ற பொது ஸ்தலங்களிலும் மேடைகளில் தேனொழுகப்பேசுகின்றதுபோல் தன்னைக் தேர்ந்தெடுத்த பொதுமக்களுக்கும், தேசத்திற்கும், தன்னுடைய கடைமையைச் செய்யாதிருப்பதைப்பற்றியும், பொதுவாக கல்வியில் முக்கியமாக ஆரம்பக்கல்வியையும், சுய ஆட்சியையும் இத்தகைய கீழ் நிலையில் கொண்டுவரத்தக்க அனாவசியமான உபயோகமற்ற மணிக்கொரு உத்திரவுகளை பிறப்பிப்பதைப்பற்றியும், மாறுதல்களை ஏற்படுத்துவதைப் பற்றியும், நான் மிகவும் விசனிக்கின்றேன். இவ்வித சீர்கேடுகள் ஒழியவேண்டுமானால் பொதுமக்களுடைய தேசிய உணர்ச்சி நிறப்பப்படவேண்டும். அவ்வித தேசிய உணர்ச்சி ஏற்படவேண்டுமானால் கல்வி அதிகமாக நாட்டில் வளர்க்கப்படவேண்டும். ஆகையால் அதிர்ஷ்ட்ட வசத்தினால் ஏற்பட்ட செல்வாக்கும், பொருப்பும், வாய்ந்த என்னுடைய நண்பர்களை கேட்டுக்கொள்வது யாதெனில் தங்களை தேர்ந்தெடுத்த பொதுஜனங்களுக்கும், தங்களுடைய தாய்நாட்டிற்கும் தங்களுடைய கடைமைகளை பொதுமக்களின் சம்மதப்படி செய்வார்களாக. கனவான்களே கடைசியாக நான் பேசியவைகளை பொறுமையுடன் நீங்கள் செவி சாய்த்து கேட்டதற்கு, என் மனமார்ந்த வந்தனத்தைஅளித்து, மற்றொருமுறை இங்குகூடியுள்ள எல்லோரையும் இம்மகா நாட்டிற்கு வரவேற்கின்றேன். எல்லா கட்சிக்காரர்களும் தங்கள் தங்கள், பேதங்களை விடுத்து, ஒத்துழைத்து நமது தாய் நாட்டின் கல்வியின் அபிவிருத்திக்கும், ஜனங்களின் முன்னேற்றதிற்கும், உழைப்பீர்களென்று நம்புகின்றேன்.

190341

---

உலகத்திலுள்ள கட்டிடங்களில் உயர்ந்தது எது:—உலகத்திலுள்ள கட்டிடங்கள் எல்லாவற்றிலும் மிகவும் உயரமானது நியூ யார்க் நகரத்திலுள்ள எம்பயர் ஸ்டேட் பில்டிங் என்பது. அது 105 மாடிகள் கொண்டு, 1048 அடி உயரமிருக்கின்றது. அதில் 40,000 ஜனங்கள் குடியிருக்கலாம். அதன் உச்சியில் ஆகாய விமானங்கள் வந்திறங்குவதற்கும் வேண்டிய வசதிகளுண்டாம். அதன் கீழளவு 425 அடி நீளமும் 200 அடி அகலமுமேயாம்.

---

பெர்ஷியா தேசத்து ஜனங்கள் மாதத்தின் ஒவ்வொரு நாளிலும் தங்கள் பெயர்களை மாற்றி வைத்துக் கொள்கிறார்களாம்.